# இனிய தமிழ் மொழியின் இருவகை வழக்குகள்



மெய்யப்பன் பதிப்பகம்

தமிழண்ணல்

# இனிய தமிழ்மொழியின் இருவகை வழக்குகள்!

தமிழ் இலக்கணக் கல்வியில் இதுவே

முதற்பாடம், முதன்மைப் பாடம்

தமிழண்ணல்

மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : ஏப்பிரல், 2008

திருவள்ளுவர் ஆண்டு : 2039

உரிமை : ஆசிரியர்க்கு

**விலை : ரூ. 30.00**

மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 248

**நினைவில் வாழும்**

**நிறுவனர்**



**ச. மெய்யப்பனார்**

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச்செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, **சிதம்பரம்**- 608001. ✆**:230069**

31, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை**-600108. ✆**:25361039**

6, சிவஞானம் தெரு, **தி. நகர், சென்னை**-600017. ✆**:24357832**

110, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை**-625001. ✆**:2622853**

15, ராஜ வீதி, **கோயமுத்தூர்**-641001. ✆**:2397155**

78, செரி சாலை, **சேலம்**-636001. ✆**:3207722**

28, நந்தி கோயில் தெரு, **திருச்சி**-620002. ✆**:2706450**

---

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 021,

தொலைபேசி : 25954528

# நூன்முகம்

தமிழில் எவ்வாறு எழுதுவது?

பேச்சுவழக்கிலும் கொச்சை மொழியிலும் எழுதும் பழக்கம் மிகுந்து வருகிறது. விளம்பரங்களிலும் 'கொடுந்தமிழ்' பரப்பப்படுகிறது. ஊடகங்களால் பேச்சு வழக்குக் கொச்சை நடை, குறுமொழியுடன், ஆங்கிலக் கலப்பு மிகமிகக் கூடுதலாகி வருகிறது.

எழுத்து நடை, கட்டளைத் தமிழ், பொதுத்தமிழ் என்ற உணர்வு மங்கி வருகிறது. எழுத்து வழக்கைக் காப்பாற்றி வந்ததனாலேதான், தமிழ் இன்றளவும் அழியாமல் இருக்கிறது; இளமையாய் இருக்கிறது.

சிலர் இவ்விருவகை வழக்கை மாற்றிப் பேச்சுநடையே தமிழெனக் கூறித் தமிழை அழிக்கப் பார்க்கிறார்கள். ஒரு தெலுங்கர் கரிசல் தமிழ் என்று, தமிழைக் கொச்சைப் படுத்தி, மக்கள் வழக்கை அவ்வாறே எழுதுவதாகச் சொல்லி, பெருங்கேடு ஒன்றைத் தொடங்கி வைத்தார். 'ஆவி' போன்ற இதழ்கள், அவருக்குப் பரிசும் பட்டமும் தந்து, உச்சத்தில் தூக்கி வைக்கவே, முழு மூடத் தமிழர் சிலர் அதைப் பின்பற்றினர். இன்று இது தொற்றுநோய், புற்றுநோயாய்ப் பரவி வருகிறது.

தமிழ் இருவகை வழக்கு மொழி; தொன்று தொட்டே பேசுவது போல் எழுதுவதில்லை; எழுதுவது போல் பேசுவதில்லை. இவ்விருவகை வழக்குகளையும், ஒரு நாணயத்தின் இருபுறம்போல் கருதி, எதை எங்கு எவ்வாறு எந்த அளவு எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற வரன்முறை - கட்டுப்பாடு - மரபு இருந்தது.

இன்று அது உடைக்கப்படுகிறது. அந்தக் கெட்ட எண்ணத்தை, 'வெடிவைத்துத்' தகர்க்கவேண்டும். இந் நூலைக் கற்பார் இதில் தெளிவு பெறுவர்.

முதற்கண், தமிழைப் 'பயன்பாட்டு இலக்கணம்' எழுதிக் காக்க முற்பட்ட அ.கி. பரந்தாமனார் பற்றிய என் கட்டுரை உளது. என்னுடன் பணியாற்றிய ஊற்றமிகு தமிழாசான், உணர்வுதரு பேராசான், முதுகெலும்புள்ள உணர்ச்சி ததும்பும் கவிப்பேரரசாக விளங்கிய முடியரசனார் பற்றிய என் 'கையறுநிலைக் கட்டுரை'யும் உளது. இவை அவர்களை நினைவு கூர்வன.

இந்நூலை, ஒரு புத்துணர்வு தரும் புதியவகை இலக்கணமாகத் தமிழாசிரியர்களும் தமிழிலக்கிய மாணவர்களும் தமிழார்வலர்களும் பயின்று, தமிழ்மொழி மேன்மேலும் 'அழிவை' நோக்கிச் செலுத்தப்படாமல் காக்கவேண்டும் . 'அறப்போர்ப்படை அணிவகுப்பு' ஒன்றை அமைத்து, தமிழுக்கு ஊறு செய்வார்க்குப் போதிய பாடம் புகட்டவேண்டும். 'கொடிறுடைக்கும் கூன்கையராதலே' இனி இக்கொடியவரைத் தடுக்கும் வழியாகும்.

தமிழண்ணல்

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | பயன்பாட்டுத் தமிழ்வளர்த்த பாவலர் | 7 |
| 2. | பாடிப் பறந்த பறவை | 10 |
| 3. | தமிழின் இருவகை வழக்கு:<br>இலக்கணத்தில் இதுவே முதற்பாடம்; முதன்மைப் பாடம் | 15 |
| 4. | மொழி ஆராய்ச்சியும் உலக வழக்குப் பயன்பாடும் | 21 |
| 5. | தமிழ் மொழியின் இருவகை வழக்கு | 26 |
| 6. | அழகைக் குறிக்க ஆயிரம் சொற்கள் | 59 |
| 7. | பறை சாற்றலும் விலை பகர்தலும் | 64 |
| 8. | காக்கை கரையும், கூகை குழறும், குயில் கூவும் | 66 |
| 9. | நீங்கள் கருப்பா? கறுப்பா? சொல்லுங்கள்! | 69 |
| 10. | திறனறிந்து சொல்லுக சொல்லை | 73 |
| 11. | வினைச்சொல் | 79 |
| 12. | திருவேங்கடத்தான் 'வெங்கட்' ஆனதேன்? | 84 |
| 13. | 'இன்னும்', 'இன்னமும்' | 87 |
| 14. | முனை 'முரிந்ததும்' மரக்கிளை 'முறிந்ததும்' ஏன்? | 91 |
| 15. | காதலி என்னைக் காதலி | 95 |

# 1. பயன்பாட்டுத் தமிழ் வளர்த்த பாவலர்

‘உடையாய் என்னைக் கண்டு கொள்ளே’ என்பார் மாணிக்கவாசகர். ஒருவரைப் பற்றிக் கண்டுகொள்வதென்பது அவரது திறமையை, உழைப்பை, கடமையுணர்வை அறிந்து, பாராட்டி மேலும் ஊக்குவது. தமிழர்கள் தமிழுக்கு அரிய பணி செய்தவர்களை அறிந்து, அவர்களின் பணி, திறமை, உழைப்பை உலகிற்கு அறிவிக்குமுகமாகப் பாராட்டுவதில்லை.

‘பைந்தமிழ்ப் பாவலர்’ என்ற பட்டத்தை, மதுரை எழுத்தாளர் மன்றத்தில் பெற்ற அ.கி. பரந்தாமனாரின் நூற்றாண்டு, திங்கள்கிழமை (15-07-2002) நிறைவு பெறுகிறது.

15-07-1902 இல் பிறந்த அவர், ஒழுக்க சீலராய், 83 ஆண்டுகள் வாழ்ந்தவர். மதுரைத் தியாகராசர் கல்லூரியில் 17 ஆண்டுகள் பேராசிரியராகப் பணி செய்தபோது, தாறுபாய்ச்சிக் கட்டிய வேட்டியும் கோட்டும் தலைப் பாகையுமாக, முறுக்கி விட்ட மீசை, பரந்த நெற்றி, மலர்ந்தும் மலராத புன்னகையுடன் அவர் செம்மாந்த தோற்றத்தில் நடந்துவரும்போது, மாணவர்கள் தம்மையறியாது வணங்குவர்.

இளைஞர்கள் கல்வி நிலையங்களிலேதான் உருவாகிறார்கள். அக் காலமே அவர்களின் பொற்காலம். அப் பருவத்தில் அவர்களின் எதிர்கால ‘உரு’வமைப்பு, வடிவமைக்கப்பட்டு விடுகிறது. நாட்டின் பெருமிதமிகு தலைமகனாக உருவாவதும், பழியொடுபட்ட இழிநிலையினனாகிவிடுவதும் அக் கால கட்டத்திலேதான் தீர்மானிக்கப்படுகின்றன. இதனை ஒவ்வொரு மாணவனும் உணர்ந்தால் நாடு நலம் பெறும்.

பள்ளிப் படிப்பின்போது, ச.த. சற்குணர் ஊட்டிய தமிழ் உணர்வும் தமிழ்க் கல்வியும் அவரையே ‘குறிக்கோட் குரு’வாக ஏற்று வளர்ந்த இவரைப் பின்னாளில் பேராசிரியராக்கியது. கல்லூரியில் படிக்கும்போது, ‘திராவிட இந்தியர்’ என ஆங்கிலத்தில் வரலாறெழுதிய டி.ஆர். சேஷய்யங்காரும், சி. சீனிவாசாச்சாரியரும் ஊட்டிய வரலாற்றுணர்வு, பின்னர் இவர் பல வரலாற்றுக் கட்டுரைகளை எழுதவும், மதுரை நாயக்கர் வரலாற்றை விரிவாகத் தரவும் உந்துதலானது.

இவர் எடுத்துக்கொண்ட துறைகள் இவை இரண்டே. இரண்டிலும் தெளிவும் சீர்மையுமாக முத்திரை பதித்த வல்லுநர் இவர். அன்றாட

நடைமுறைப் பயன்பாட்டுத் தமிழுக்கு இவர் ஆற்றிய தொண்டினைப் பலர் கண்டுகொள்ளவே இல்லை; க்ண்டு கொண்ட சிலரும் இவரைப் பின்பற்றவு மில்லை; இவர் பெயரைக் குறிப்பிடவுமில்லை.

"தமிழ்மொழி கடினமானது; தமிழ் இலக்கணம் வேப்பங்காய் போன்றது; தமிழ் மனத்திலே தங்காது; அதைப் படிப்பதால், உயிர் போய்விடும்; வலி மிகுமிடமும் மிகா இடமும் படித்தாலே தலைவலி மிகுந்து விடும்" - இப்படி ஒரு கருத்துப் பரப்பப்பட்டு, வேரூன்றியுள்ளது.

இக் கருத்து முற்றிலும் தவறு. 'எளிது எளிது தமிழ் எளிது' என்று சொல்லலாம். ஆனால், குறை எங்கே இருக்கிறது? அது தமிழில் இல்லை. தமிழைச் சொல்லிக் கொடுக்கும் நெறிமுறையில் இருக்கிறது; தமிழ்ப் பாடத்திட்டத்தில் இருக்கிறது; தமிழ்ப் பாடநூல்களில் இருக்கிறது.

அன்றாட நடைமுறையில் பயன்படும் மொழியை அடிப்படையாகக் கொண்டு, தமிழிலக்கணத்தைப் புதிய தமிழ் இலக்கணமாகவும், 'புதிய தமிழுக்கும்' இலக்கணமாகவும் எழுதி வழிகாட்டியவர் பரந்தாமனாரே ஆவார்.

ஆங்கிலப் பாடல்கள் சில இவரால் தமிழாக்கம் பெற்றன. சிறுவர்க்கான பாடல்கள் எழுதினார். 'கவிஞராக' என இவரெழுதிய நூலை ஒருவர் இருமுறை படித்தால், உறுதியாக அவர் ஒரு மரபுக் கவிஞராகி விடுவார்.

பரந்தாமனாரின் 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?' எனும் நூல் புதிய முயற்சி. அதனைப் புதிய முறைத் தமிழிலக்கண முன்னோடி என்றே சொல்லலாம்.

வடசொற் கலப்பை 'வட சொல்' உதவி எனத் தலைப்பிட்டு எழுதியுள்ளார். உதவி பெறுவது அளவாக இருக்கவேண்டும்; தயக்கமும் வேண்டும்; கூடுமானால், உதவியின்றியே முன்னேற வேண்டும் என்பது போன்ற மனப்போக்குடன் இவ்வியல் எழுதப்பட்டுள்ளது.

எழுத்துப் பிழைகள் நேர்தல், அவற்றைத் திருத்தும் வழிவகைகள், பிழைபட்ட சொற்கள் ஆகியவைபற்றிச் சேர்த்து வைத்த குப்பை, விட்டுவிட்ட குப்பை, செல்லாக் காசுகள் எனத் தலைப்பிட்டு எழுதும் பாங்கு, தமிழுக்குள் வருபவர்களைக் கவரத் தக்கது.

தமிழ் இலக்கணத்தை எளிமைப்படுத்த இவர் எடுத்துள்ள முயற்சிகள், நன்கு பயின்று மேலும் மேலும் எளிமைப்படுத்த வேண்டியன ஆகும். கலைச் சொல்லாக்கம், ஆட்சிச் சொற்களஞ்சியத்திற்கு வழிகாட்டுக்

குறிப்புகள் தரும் இவர், 'இனிய சொற்றொடரும் மரபுத் தொடரும்' என எழுதிக்காட்டியிருப்பன, தனி அகரமுதலிக் களஞ்சியங்களாகத் தொகுக்கத் தக்கன.

'தமிழ் மொழிக் கல்வி பற்றி, என்ன இல்லை இதில்' எனச் சொல்லுமறு யாக்கப் பட்டுள்ளது இந்நூல். அரைகுறையாய்த் தமிழ் கற்றுப் பட்டம் பெற்றுவிட்ட தமிழாசிரியர்கள் உட்பட, இதழாளர்கள், அச்சகத்தார், தகவல் பரிமாற்றத் துறையினர் அனைவருக்கும் தக்கதொரு பார்வைநூல் - கையேடு இது.

மதுரையில் கலைத்தந்தை கருமுத்து தியாகராசர் நடத்தி வந்த 'தமிழ்நாடு' நாளிதழில், ஞாயிறுதோறும் இவர் எழுதி வந்த கட்டுரைகளின் விரிவாக்கமே, 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?' என ஒவ்வொரு தமிழனையும் நோக்கி வினவும் நூல். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி, அனைவரும் மிக எளிதாகத் தமிழைக் கற்க வழிவகை காண்பதே, அவரது நினைவைப் போற்றும் நற்பணியாகும்.

(15-07-02 பரந்தாமனாரின் நூற்றாண்டு நிறைவு நாளாகும்.)

தினமணி 13.07.2002

# 2. பாடிப் பறந்த பறவை

'நமக்குத் தொழில் கவிதை' என்றான் மாகவிஞன் பாரதி. இந்த இருபதாம் நூற்றாண்டின் விடிவெள்ளி பாரதி உருவில் கிழக்கே மலர்ந்தது. தொடர்ந்து 'எழுஞாயிறு' என - 'உலகம் உவப்பப் பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு' என - நக்கீரர் பாடியதற்கு இசைவாக, கிழக்குக் கடற்கரை ஓரத்தே, புதுச்சேரியில் பாவேந்தர் பாரதிதாசன் தோன்றினார். அஞ்ஞாயிறு விரித்திட்ட எரிகதிர்ச் சுடர்களென, ஒரு 'பாரதிதாசன் பரம்பரையே' 'பொன்னி' என்ற இலக்கிய இதழ் வாயிலாகத் தமிழகத்திற்கு அறிமுகமானது. கவியரசு முடியரசன் இப் பரம்பரையின் குடி வழி வந்த, மூத்த தலைமகனாவார். கவிஞர்கள் வாணிதாசன், சாமி பழனியப்பன், நாரா நாச்சியப்பன், கவிச்செல்வர் மீரா என இப் பரம்பரையினர் பலராவர். தலை நிமிர்ந்த வாழ்வு கொண்ட சாலை இளந்திரையன், இக்குடி வழி வந்த கவிஞர் கோமகனாவார். 'குலோத்துங்கன்' என்ற பெயரில் கவிதைகள் படைத்துள்ள அறிவியலறிஞர் வா.செ. குழந்தைசாமி, மரபுக் கவிதையிலும் மாட்சிமை மிக்க சிற்பி, சிந்து பாடவல்ல சிந்தனைக் கவிஞர்கள் பெரி.சிவனடியான், புதுச்சேரி இரா. திருமுருகன் என இப்பட்டியல் நீளும்.

புதுக் கவிதையுகம் இது! ஐக்கூ எனப்படும் ஜப்பானியக் கவிமரபையும் பின்பற்றும் பழனி இளங்கம்பன் முதலாய கவிதை மரபு புகுந்துள்ள காலம் இது. இக் கவி மரபு என்பது நமக்கு மூவாயிரம் ஆண்டுகளாக வரும் 'வாழையடி வாழை' மரபு ஆகும். புதிய காப்பிய நாடகம் படைப்பதில் வல்ல பாவலர் மணி ஆ.பழனி, பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் கவிவழி மரபினர். இவ் வழியிற் காப்பிய நாடகங்களை நூற்றுக்கணக்கானோர் இன்று படைத்துள்ளனர்.

கவியரசு முடியரசன் தமக்கெனத் தனிப் பாணி வகுத்துக் கொண்டு, கவிதையே மூச்சாக வாழ்ந்தவர். அவருக்கு அது ஒரு தொழிலாக மட்டுமன்று; உயிர் மூச்சாகவே இயங்கி வந்தது. தமிழ் அவரது உயிர். எமக்குத் தெரிந்த வரை தமிழை இத்துணை நேசித்த ஒருவரை யாம் இதுவரை கண்டதில்லை என்போம். அதனால் தமிழ் உள்ள அளவும் வாழ்வு பெறும் கவிதைகளை அவர் தந்து சென்றுள்ளார்.

எம்மை ஒருவர், "நுமக்குப் புதுக் கவிதை பிடிக்குமோ, மரபுக் கவிதை பிடிக்குமோ?" என, தினமணி கேள்வி அரங்கப் பகுதியில் வினவியபோது,

“எமக்குக் கவிதை பிடிக்கும்” என்று விடை யெழுதினோம். ஆம். எதுவாக இருந்தாலும் அதில் பாமணம் கமழ வேண்டும்; கவிதையுணர்வு மலரவேண்டும்; கற்பனை ஒளி வீச வேண்டும்; நம் உள்ளத்தில் மெய்ப்பாட்டு உணர்ச்சிகளைப் பாய்ச்சவேண்டும். அதுதான் கவிதை!

ஒரு முறை கவியரசு முடியரசன், தமிழ்த்தாய் பற்றிய வாழ்த்து ஒன்றை, அவர்தம் பூங்கொடிக் காப்பியத்தில் எழுதியிருந்தார்.

“தாயே உயிரே தமிழே நினைவணங்கும்
சேயேன் பெறற்கரிய செல்வமே - நீயே
தலைநின்றாய் இவ்வுலகில், தாள்பணிந்தேன் நீ இங்கு
இலையென்றால் வாழ்வெனக்கு ஏது!”

‘வெண்பா இருகாலிற் கல்லானை’ என்றார் ஔவையார். நம் வெண்பாக் கட்டமைப்பின் சீர்மை அது. உடனே மனப்பாடம் ஆகிவிடும் ஒப்பற்ற பாட்டு வடிவம் அது. அதனாலன்றோ திருவள்ளுவர் வெண்பாவின் சிறிய வடிவமான குறள் வெண்பாவைத் தம் ‘கருத்தூர்தியாகத்’ தேர்ந்தெடுத்துக் கொண்டார். நாயன்மார், ஆழ்வார் பாடல்கள் போல், தமிழைத் ‘தாயே’ என்று தொடங்கிய இப்பாடலை ஒருமுறை படித்தது முதல், அது எம் நெஞ்சைவிட்டு நீங்கவே இல்லை!

பாரதியார் கண்ணனைத் தாயாக, தந்தையாக, காதலியாக, காதலனாகப் பாடியதுபோல், தமிழைக் கவியரசு முடியரசன், பன்முக உறவு காட்டிப் பாடியுள்ளார். இன்றைய படைப்புக் கலைஞர்கள், கதைப் படைப்பாளிகள், புதுக்கவிஞர்கள் தமிழறிவே இல்லாமல், மொழி நடையே தெரியாமல் தமிழைக் கொச்சைப்படுத்தி, சிதைத்து, கலப்படமாக்கி, பிழைமலிய எழுதியும், திறனாய்ந்தும் வருகின்றனர். தமிழ் முதுகலை படிப்பவர், தமிழ் ஆய்வாளர் பலரும் இத் ‘தரம் தாழ்ந்த படைப்பால்’, ஒரு மொழிக்கு அமைய வேண்டிய நீர்மை, சீர்மை, செம்மையை உருக்குலைத்து வருகின்றனர். மொழிச் செப்பம் என்பது தேவையற்றது என வாதிடுகின்றனர். இவர்களைப் பார்த்து முடியரசன், மனம் கொதித்துப் பாடியுள்ள பாடல்கள் பலவாகும்.

எல்லாவற்றிலும் ‘உன்னதத்தை நோக்கி’, ‘உயர்வை நோக்கி’, ‘வளர்ச்சியை நோக்கி’ எனப்போகும் உலகத்தில், இப் படைப்பாளிகள் தமிழைப் பின்னுக்குத் தள்ளுவதையே பெருந்தொண்டாகச் செய்து வருகின்றனர். காலம் தான் இதற்கு விடை கூறவேண்டும். முடியரசன் இந்

'நச்சுச் தன்மையை' அறவே அகற்ற, அறைகூவும் போர் மறவராய் விளங்கினார். மூதறிஞர் வ.சுப. மாணிக்கம், மொழி ஞாயிறு பாவாணர், புதுக்கோட்டை அண்ணல் சுப்பிரமணியனார், பேராசிரியர் சி. இலக்குவனார் போலும் தமிழ்ச் சான்றோர்தம் நட்புப் பெற்றிருந்தவர். தலை நிமிர்ந்த வாழ்வுடையவர். வறுமையிலும் செம்மை போற்றிய 'சங்கத் தமிழனைய தூயவர்', பண்பாளர், நல்லாசிரியர், பகுத்தறிவுப் பாராம்பரியத்தைவிட்டு இம்மியளவும் விலகாத கொள்கைக் குன்றனையார் இவர். 1949இல் பேராசிரியர் மயிலை சிவமுத்துவின் தலைமையில், 'கலைச்செல்வி' எனும் அன்பும் பண்பும் பொறுப்பும் மிக்க நங்கையைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார். ஆயினும், 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச் செருக்கு' எனச் சங்கப் புலவர் போல் வாழ்ந்த இவரைத் தமிழகமும் உரிய அளவு போற்றவில்லை; திராவிட இயக்கமும் தகுதியறிந்து கொண்டு சிறப்பிக்கவில்லை.

பெரியகுளத்தில் 7-101920 இல் சுப்பராயலு, சீதாலட்சுமி பெற்றோர்க்குத் தவமகனாகப் பிறந்த இவர், மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையில் தமிழ் கற்றவர். அங்கு உ.வே. சாமிநாதய்யர், பண்டிதமணி மு. கதிரேசர், திரு.வி.க. நா.மு. வேங்கடசாமி நாட்டார், கணக்காயர் ச.சோமசுந்தர பாரதியார்தம் உரைகளைக் கேட்டும், அவர்களுடன் பழகியும் தமிழ் உணர்வும் ஊற்றமும் வாய்க்கப் பெற்றவர். சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் இரண்டாண்டுகளும், காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவரர் மேனிலைப் பள்ளியில் முப்பதாண்டுகளுக்கு மேலாகவும் தமிழ்ப் பணியாற்றிய பெருமைக்குரியவர். இவரிடம் படித்த மாணவர் இன்று பலர், தமிழகத்தில் தலைசிறந்த தமிழறிஞர்களாகத் திகழ்கின்றனர். இயக்குநர் சுப. முத்துராமன், பொதுநலத் தொண்டர் பழ. கருப்பையா போலும் பலர் இவரிடம் பயின்றவர்களாவர்.

இவர் கவிதைகள், இன்றைய இளைஞர்கள் பயில வேண்டியவை; படித்து வளர வேண்டியவை. இவர் தம்மை ஒரு பாடும் பறவையாகவே உருவகப் படுத்திக் கொள்கிறார்.

நான் ஒரு பாடும் பறவை - பொழிவேன்
நாடொறும் பாடல் நறவை!
வானில் விரிப்பேன் சிறகை - மறவேன்
வாழ்ந்திடும் மண்ணின் உறவை!

(நறவு - தேன்) செந்தமிழ் கற்பதால், முதுமை அண்டாது என்பது இவர் நம்பிக்கை. தமக்கு வயதாகிவிட்டது என்பதை இவர் ஒப்புக் கொண்டதே இல்லை. அவ்வாறு யாரும் கூறினால், வேடிக்கை பேசி மறுத்துவிடுவார். அத்துணை 'இளமைமனம்' கொண்டவர் இவர். அதற்குரிய காரணத்தை அவரே கூறுகிறார்.

செந்தமிழ் அமுதம் உண்டேன் - முதுமை
சிறிதளவேனும் அண்டேன்,
சிந்தையில் இளமை கொண்டேன் - உவமை
சிறிதாய்த் தோன்றிடக் கண்டேன்!

மகாகவி பாரதியார்க்கு இளமையில், 'அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து' மனப்பாடமாம். எதுகை, மோனைகளுக்குத் தடுமாறாமல் பாரதி பாடல்கள் அமைய, இவ் இளமைக் காலப் பயிற்சியே காரணம். இன்றைய இளைஞர்களுக்கு, அச் சிந்துப்பாடல்கள் சிறிது கடினமாகப் படலாம். அது கருதி, முதலில் கவியரசு முடியரசனின் 'பாடுங்குயிலை'ப் படித்தால் - பயின்று மனப்பாடம் செய்தால், எதுகையும் மோனையும் கைவந்த கலையாகும். கல்லூரிகளில் கட்டாயப் பாடம் ஆக்கவேண்டிய நூல் அது என்பது எம் கருத்து.

காரைக்குடிக் கம்பன் கழகக் கவியரங்குகளை உலகம் போற்றும் வண்ணம் ஒளிரச் செய்த கவிஞர்களில் இவரும் ஒருவரானார். ஒருமுறை கம்பனடிப்பொடி சா. கணேசன் இவரை, 'ஆறு' என்ற தலைப்பில் பாடச் சொன்னார். குளங்களில் பூக்கும் தாமரை, ஆறுகளில் பூப்பதில்லை. தாமரையை முகம் என உருவகிக்கும் வழக்கும் உண்டல்லவா? இவர் பாடினார், "தன்பால் தா மரையின்றி முகங் காட்ட முடியா ஆறு, மாய்வதற்குக் கடல் நோக்கி ஓடுதல் பார்" என்று! தா + மரை எனப் பிரித்த விதமே, முகங்காட்ட முடியாமையை விளக்கவே, அவையினர் கைஒலி வானைப் பிளந்தது. மூன்றாம் பிறைதான் கண்ணுக்குத் தெரியும். அதைப் பார்த்த கவிஞர், 'விண்ணிடத்து எறிந்த வெள்ளைப் பூசணிக்கீற்றோ?' எனப் புதிய உவமை பாடியபோது, யாம் வியப்படைந்த துண்டு. அதன் விலையை நோக்கும் இன்றைய நிலையில், வெள்ளைப் பூசணிக் கீற்றுக்கூட, எட்டாத உயரத்தில்தானே இருக்கிறது!

இவர்தம் 'பூங்கொடிக் காப்பியம்' மணிமேகலை அனைய, ஒரு தமிழ்ச் செல்வக் கருவூலம். பண்டிதமணி பற்றிய 'ஊன்றுகோல்' என்ற

காப்பியம், அவ்விருமொழிப் புலவர்தம் வரலாற்றுடன், இக் கவிஞர்தம் தன் வரலாற்றுப் பெட்டகமுமாகும். பாரதியையும் பாரதிதாசனையும் ஆதரித்த பாரி வள்ளல் வை. சு சண்முகனார், முடியரசனையும் போற்றியதால், அவரைப் பற்றி இவர் உரைநடை நூலொன்றை எழுதினார். புதுக்கோட்டை அண்ணல் சுப்பிரமணியனாரும், மருத்துவப் பேரறிஞர் இராமச்சந்திரனாரும் இவர்தம் புரவலர்கள்; உயிர் காத்த உத்தமர்கள். வறுமை வாழ்விலும் தலைநிமிர்ந்து வாழவைத்த அண்ணியார் கலைச்செல்வியார், வள்ளுவர் படைத்த 'வாழ்க்கைத் துணை' அனையார். இவர்தம் ஆறு மக்கட் செல்வங்களும் தமிழ்த்தாயின் தண்ணருளால் நல்வாழ்வு பெற்றுள்ளனர். இவர்தம் நூல்கள் சில வெளிவராமல் உள்ளன.

இவர்தம் நூல்கள் அனைத்தையும் ஓரிரு தொகுதிகளாக வெளியிடத் தமிழக அரசு உதவலாம். ஒரு பழைய வீட்டில், முடங்கிக் கிடந்தார் இவர். இவருக்கு மணிமண்டபம் கட்டவேண்டும் என்பதனிலும் நல்ல காற்றோட்டமுள்ள சிறுமனை கட்டி, இவர் மக்கள் வாழத் தமிழகம் வழி செய்யலாம். தமிழுக்காக வாழ்ந்தவர்களைச் சங்க கால வேந்தர்கள், போற்றிப் புறந்தருதலைத் தம் கடமையாகக் கருதினர். அம் மரபு இன்றும் நீடித்தால், தமிழுக்காக வாழ்பவர்கள் வாழ்ந்தவர்கள் மட்டுமல்லர் - தமிழும் வாழும்! சுவர் இருந்தால்தானே, சித்திரமும் நிற்கும். அவர் தம் அன்னையாம் தமிழிடம் வேண்டுவது நடக்கும், நடந்தே தீரும் என நம்புவோம்.

செந்தமிழே என்னுயிரே புலவர் நெஞ்சில்
சேர்ந்தாடும் எழில்மயிலே என்னுள் பொங்கி
உந்திவரும் உணர்வதனால் கூவிக் கூவி
உவகைதரும் பூங்குயிலே! மொழிக் குலத்தில்
முந்திவரு தெய்வதமே! என்னைச் சூழ்ந்து
மொய்த்துவரும் துன்பமெல்லாம் நீக்கி இன்பம்
தந்துவரும் ஆரணங்கே! அன்பே! நின்றன்
தாள்வணங்கி நிற்கின்றேன் அருள்வாய் அம்மா!

(தினமணி - 5.12.1998)

# 3. தமிழின் இருவகை வழக்கு இலக்கணத்தில் இதுவே முதற்பாடம்; முதன்மைப் பாடம்

'பதவியல்' எனப் பவணந்தியார் புதியதோர் இயல் வகுத்ததுபோலப் புதிய தமிழ் இலக்கணத்தில், 'மொழிநடையியல்' என ஓரியல் வகுக்க இன்று நிரம்பக் காரணங்கள் உள்ளன.

பத உறுப்புகளைப் பற்றிய கூறுகள் முன்னரே தமிழ் இலக்கணத்தில் உள்ளவைதான். அவற்றை வரன்முறைப்படுத்திச் சொல்லின் அமைப்பியலை முழுமைபெற உணர்த்திய திறம் பவணந்தியார்க்குப் பெருமை சேர்க்கின்றது. தமிழில் பேச்சுநடை வேறாகவும் எழுத்து நடை வேறாகவும் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன. தொல்காப்பியர் உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் பிரித்துப்பேசும் இடங்கள் பலவுள. அவற்றுள் குறிப்பிடத்தக்கது,

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கினாகிய உயர்சொற்கிளவி
இலக்கண மருங்கில் சொல்லாறல்ல (510)

என்பதாகும். தொல்காப்பியர் காலத்திலேயே 'புலவர் பாடினார்' என்பதுபோல உலகவழக்கில் மதிப்புப்பன்மை கூட்டும் 'போலிக்' கவுரவம் தொடங்கிவிட்டது எனவும், இலக்கண வழக்கில் எழுதும்போது 'புலவன் பாடினான்' என்பது மரியாதைக் குறைவாகக் கருதப்படவில்லை எனவும் அறிகின்றோம்.

'மருவின் பாத்தி' (172), 'மரீஇய மரபே' (355) என உலக வழக்கைச் சுட்டும் தொல்காப்பியர், செய்யுள் வழக்கை,

'செய்யுளுள் உரித்தே' (234), (237), (258), (305), (356) 'செய்யுள் தொடர் வயின் மெய்பெற நிலையும்' (481) என்றிவ்வாறு வேறுபடுத்திக் கூறுவார். இருவழக்குகளையும் ஒப்பிட்டும் கூறுவார்:

கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்

இத்தகைய சூத்திரங்களின் கருத்தை ஒருசேரக் கொண்டு நோக்கினால், அன்றைய பேச்சுநடையையும் எழுத்து நடையாகிய செய்யுள் நடையையும் அவரே இருவேறாக உணர்ந்து இலக்கணங்கூறிச் சென்றமை

நன்கு புலனாகும். அதனாலன்றோ பாயிரம் பாடிய பனம் பாரனாரும் 'தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும்' அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பிய நூல் யாக்கப்பட்டதாகக் கூறுகின்றார். எனவே, தமிழில் அன்றும் இன்றும் என்றும் உலகவழக்கு - பேச்சுநடை வேறு, செய்யுள் வழக்கு வேறு - எழுத்து நடை வேறு என்ற உணர்வை நம் மாணவர் மனத்தில் பதித்தல் வேண்டும். புதிய இலக்கணத்தில் இடம்பெறும் இப்புதிய இயல், உயர்நிலைப் பள்ளி இலக்கணம், கல்லூரி இலக்கணம், தனி இலக்கண நூல் என அனைத்து நிலைகளிலும் விரிவாகத் திட்டமிட்டுத் தக்க மேற்கோள்களுடன் எழுதப்படவேண்டும்.

## சொற்கள் நான்குவகை

பெயர், வினை, இடை, உரி என நான்குவகை இருக்கவும், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று செய்யுளுள் வரத்தக்க சொற்களைத் தொல்காப்பியர் வரன்முறைப்படுத்தல் காண்க. திரிசொல், திசைச்சொல் போல்வனவும் பிறமொழிச் சொற்களும் எடுத்தாளத்தக்க நிலையில், எழுத்துமொழியில் ஏறி வழங்கலாம் என்பதை இது சுட்டுகிறது.

## சான்றோர் கருத்து

அறிஞர் கால்டுவெல் அவர்கள், "தமிழ்மொழியில் உலகவழக்கும் செய்யுள் வழக்கும் என்றும் ஒன்றாக இருந்ததில்லை. மிக முற்பட்ட காலத்திலிருந்தே செந்தமிழ் கொடுந்தமிழிலிருந்து இன்றுபோல் வேறுபட்டே வழங்கி வந்திருக்கிறது" என்று கூறுகின்றார். வீரமாமுனிவர் செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் என இரண்டாகப் பிரித்து இலக்கணம் எழுதியமையும் கருதத்தக்கது.

## குறையன்று; மொழியியல்பு

இது சிலர் நினைப்பதுபோல் மொழியின் குறையன்று; நிறைவென்றும் கூறலாம். செருமன் மொழியில் இவ்வியல்புண்டு. அங்குள்ள மூன்று வட்டார வழக்குகளும் ஒருவர் பேசுவது மற்றவர்க்கு விளங்காத அளவு வேறுபட்டுவிட்டன. ஆயினும், எழுத்து மொழி ஒன்றே; எழுத்து வடிவமும் ஒன்றே. அதனை அனைவரும் ஒன்றுபோல் விளங்கிக் கொள்வர். சீன மொழியில், அந் நாட்டின் ஒரு கோடியிலுள்ளார் பேசுவது மறு கோடியிலுள்ளார்க்கு விளங்குவதில்லை. ஆயினும், செல்வாக்குடைய வட்டார வழக்குகளைத் துணைக்கொண்டு எழுத்து வடிவமும் எழுத்து நடையும் பெரிதும் ஒற்றுமையுடையனவாயிருப்பதால், அங்கு அனைவரும் பயன்படுத்தும் பொது நீர்மை ஓரளவு வளர்ந்துளது. இத்தகைய, தமிழோடு ஒப்பிடத்தக்க இருவேறு வழக்காறுடைய மொழிகளைக் கற்று, சில வரன்முறைகளைக் கண்டு தமிழுக்கும் அவற்றைப் பயன்படுத்தலாம்

என்பதை, இப் 'புதிய இயலில்' மொழியறிஞர்கள் வற்புறுத்த வேண்டும். வாழும் மொழிக்கு இ∴தொரு சிறப்பாகுமேயன்றிக் குறையாகாதென்பதையும் கோடிட்டுக் காட்ட வேண்டும்.

## பேச்சுநடை, வளர்ச்சி நடையன்று

அறிஞர் சிலர் என்னிடம், "மொழி பேச்சுவழக்கில் எவ்வாறு பயன்படுத்தப் படுகிறதோ, அதுவே உண்மையான வழக்கு. அதுவே வளர்ச்சி நிலை; பரிணாம வளர்ச்சியை அதில் காண்கிறோம். அதைச் சீர்திருத்துவது தவறு, என வாதிடக் கேட்டிருக்கின்றேன். பேச்சுநடை, நடைமுறைமொழி - அவ்வளவே. அதனால் அதையே நெறி எனக் கோடல் முறையாகாது. நோய் பரவுவது பரிணாமமன்று; குப்பை கூடுவது கூர்தலறமன்று. பேச்சுநடையில் இயல்பான வளர்ச்சி எது எனப் பிரித்தறிய வேண்டும். அவ்வளர்ச்சி எழுத்து நடையிலும் காணப்படும். 'இழிசினர் வழக்கு, அழி வழக்கு' எனவும், 'கொச்சை வழக்கு' எனவும் வழங்குவனவெல்லாம், 'வளர்ச்சி நிலை' ஆகா. நோயைத் தடுப்பதுபோல், குப்பையைக் கூட்டுவதுபோல் அமைந்த துப்புரவு மனப்பான்மை மொழிப்பயன்பாட்டிலும் வேண்டும்.

## பிழை வழக்கு வேறு; பேச்சு வழக்கு வேறு

இன்று ஆய்வறிஞர் சிலர், தமிழில் காணப்படும் பிழை வழக்குகளை எல்லாம் பேச்சு வழக்கு என்று சொல்லக் கேட்டுள்ளேன். இரு மொழியாளர், அயல்மொழிக் கல்வியாளர் வழங்கும் கலப்புமொழிகளையும் பேச்சுவழக்கெனல் பிழை தருவதாகும். அ∴தாவது இவற்றையெல்லாம் மாணாக்கர்கட்கு எளிய எடுத்துக்காட்டுகள் மூலம் தெளிவுபடுத்த வேண்டும்.

## வட்டார வழக்கு வேறு; கொச்சை வழக்கு வேறு

குரல்ஒலி ஏற்றத்தாழ்வு, அழுத்தம், ஒருசொல் பிறிதொரு பொருளில் வழங்கல், பிறிதொரு சொல்லே வழங்கக் காணுதல் போல்வன வட்டார வழக்குகள்.

காட்நாங்க, காட்நானுக, காட்றானுங்க வட்டாரத் திரிபுகள். அங்கே வச்சுப் பார்த்தேன், அதுக்கு ஒசரம் பேசறேன், வட்டாவட்டம் இப்படிச் செய்தா எப்படி - சில வட்டாரச் சொல்நடைகள்.

இவற்றின் வேறுபாட்டையும், பொதுநீர்மையையும் வேறுபாடறியும் வண்ணம் மாணாக்கர்க்குக் கற்பிக்கவேண்டும்.

## நாட்டுப்புற இலக்கியம்

நாட்டுப்புறப் பாடல்களை - பழமொழிகளை - விடுகதைகளை அவ்வாறே பேச்சு நடையில் எழுதவேண்டும்; அதனை அடுத்து உடனே

எழுத்துநடையிலும் எழுதிக்காட்ட வேண்டும். "தமிழில் இருவேறு நடைகள் உள; அவற்றை இரு நிலைகளிலும் புறக்கணிக்கக் கூடாது; அஃதாவது எழுத்து நடையில் மொழிச் செப்பத்தைப் பேணவேண்டும்" என்ற உணர்வைத் தோற்றுவித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

பேச்சு நடை : "யாரடிச்சா நீயழுதாய்? அடிச்சாரைச் சொல்லியழு"

எழுத்து நடை : "யாரடித்தார் நீ அழுதாய்? அடித்தாரைச் சொல்லியழு"

என்னிடம் ஆய்வு செய்த 'டாக்டர்'ப் பட்டஆய்வாளர் ஒருவர், 'தெரிஞ்சிக் கோணும்' 'சிந்திக்கோணும்' 'வேணும்' 'நல்லாரிக்கீங்களா' என்றுதான் எழுதுவார். ஆய்வேட்டையே அவர் அவ்வாறுதான் எழுதத் தொடங்கினார். அவர் அரைகுறையாக மொழியியல் படித்தவர். எழுத்துநடை வேறு என்பதை அத்தகைய மாணவர்கள் இளமையிலிருந்தே உணரச் செய்ய வேண்டும்.

## படைப்பிலக்கியம்

சிறுகதை, நாவல்களிலும் பயன்படுத்தும் தமிழ், 'புறநடைத் தமிழே' தவிர, அதுவே கட்டுரை வரையும் போதும் எழுதும் தமிழாகலாகாது. கதைகளில் பாத்திரங்கள் பேசும்போது வழக்குநடையில் பேசினாலும், அம் மாந்தரைப் பற்றி ஆசிரியர்தம் கூற்றாகக் கூறும்போதும், ஆசிரியர் தம் நடையில் கதைகூறிப் போகும்போதும் எழுத்துநடையே பின்பற்றப்பட வேண்டும். அதுவே முறை என்பது நன்கு சுட்டிக்காட்டப்படவேண்டும்.

## இதழ்கள்

நாளிதழ்கள், இதழ்கள் பயன்படுத்தும் தமிழில் இவ்விருதிறமும் எங்ஙனம் உறழ்ந்து வரலாம் என்பதற்குச் சில விதிகள் வகுக்கவேண்டும். தலைப்புகள் எவ்வாறு அமையவேண்டும்; ஆசிரிய உரை எனப்படும் தலையங்கத்திற்கும் சிறுகதைக்குமிடையே மொழிநடையில் எத்தகைய வேறுபாடிருக்க வேண்டும் என்பனவெல்லாம் விளக்கப்படவேண்டும்.

## அறிவியல் நூல்கள்

புதிய அறிவியல்களில் கலைச்சொற்கள், உலகக் கலைச் சொற்கள் போன்றவற்றை ஆளுவதற்கான நெறிமுறைகளும் திட்டவட்டமாக வகுக்கப்பட வேண்டும்.

## சில சொல் வடிவக் குறியீடுகள்

பேச்சு வழக்கை அவ்வாறே எழுத்துவடிவில் எழுத நேரும்போதும் சிற்சில குறியீடுகளுடன் ஆளுதற்கு மாணாக்கரைப் பழக்கலாம்.

'ஏனம்மா' 'ஏன் 'மா' 'ஏ'ம்மா' என்று தொகைப்படும் எழுத்திற்கு மேலே, மேற்கோட்குறி போற்றிடலாம். அறிஞர் மு.வ. தம் புதினங்களில் இவற்றைப் பயன்படுத்துகின்றமையைச் சில இடங்களில் காணலாம்.

வா 'ட்றான், கா'ட்றான் என்பவற்றிலும் பல எழுத்துத் தேய்ந்தமையை இவ்வாறே உணர்த்தலாம்.

"தெரிஞ்சிக்கோணு'முன்னு நினெச்சேன்" என்று, பேச்சுநடை வருமிடமெல்லாம் மேற்கோட்குறிகளைப் பெய்து, வேறுபடுத்திக் காட்ட வேண்டும்.

வெளிப்படையான, அரிதான பிறமொழிச் சொல் இடைப்புகுந்தால், சிறு எழுத்துகளில், சாய்வெழுத்துகளில் மட்டுமே எழுதவோ, அச்சிடவோ வேண்டும்.

## உறழ்ந்துவரும் மரபுகள்

சில சொற்கள், சொல்லடைகளில் 'உறழ்ந்துவரல்' என்ற தமிழ் இலக்கண மரபைப் பின்பற்றலாம். தொலைபேசி இருக்கப் போனையும் பயன்படுத்தலாம்; வானொலியோடு இரேடியோவையும் கேட்கலாம்; புதினத்தோடு நாவலும் இருக்கலாம் என்றிவ்வாறு ஏதேனும் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அல்லது இதுபற்றி மேலும் சிந்திக்கவேண்டும். கூடியவரை நல்ல தமிழை நோக்கியே எழுதும் படிநிலை வளர்ச்சி போற்றப்பட வேண்டும்.

தமிழ் மரபுக்கு ஒத்த, தமிழ் வடிவமான, தமிழ் ஒலிப்புக்குப் புறம்போகாதவற்றைத் தமிழில் ஏற்பதால், தமிழுக்குக் கேடில்லை என்பதை மாணாக்கர்க்கு உணர்த்த வேண்டும்.

மோட்டார்
கார்
அலுமினியம்

இவை குற்றமில்லை. ஆனால் புஷ்கோட்டு, ஸ்பஷ்டம், ஸ்பெஷல் எனத் தமிழ் ஒலிப்புக்கு மாறுபட்டவற்றைத் தவிர்க்கவேண்டும் என்பதையும் கற்பிக்க வேண்டும்.

## தமிழ்ப்படுத்துதல் என்பது என்ன?

'தமிழ்ப்படுத்துதல் (Tamilising) என்பது என்ன?' - என்பதை மாணாக்கர்க்கு நன்கு கற்பிக்க வேண்டும். திருநெல்வேலியை 'டின்னவேலி' என்றும், மதுரையை 'மசுரா' என்றும், கட்டுமரத்தை 'கட்டெமெரான்' என்றும்,

மிளகு தண்ணீரை 'மிளக்டண்ணி' என்றும் ஆங்கிலேயர் தமிழை ஆங்கிலப் படுத்தியதை, மாணவர்க்குத் தெரிவிக்கவேண்டும். கம்பர் வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப்படுத்திய அழகை மாணாக்கர்க்குப் போதிக்க வேண்டும். கிளாசை எடு, காரியம் கண்புறமாயிற்று (Confirm) பைபிள் - விவிலியம் என்றிவ்வாறு தமிழ்ப்படுத்திய - தமிழ்ப்படுத்தத் தக்க மரபுகளையெல்லாம் பவணந்தியாரின் வடமொழியாக்கம் போலத் தமிழ்மொழியாக்கமாகப் பிறமொழித் தமிழாக்கமாகத் தெளிவித்து எழுதவேண்டிய காலம் வந்துவிட்டது.

ஓர் ஆங்கில நாட்டுத் தமிழறிஞர், 'Tamil Culture' என்ற ஆங்கிலத் தமிழாய்விதழில், யாழ்ப்பாணத்தில் தாம் கண்ட ஒன்றைப் பற்றிக் கீழ்வருமாறு எழுதினார்; "தேவைப்படுமேல் உலகப் பொதுவான கலைச் சொற்கள் சிலவற்றைத் தமிழில் எடுத்தாள்வதில் குற்றமில்லை. தமிழ் இயல்புக்குப் புறம்பானதென உறுதியாகத் தோன்றும் ஆங்கில வடிவங்களை அவ்வாறே தமிழில் ஆள வேண்டும் என்பதற்கு எவ்வித அடிப்படையும் இல்லை. பெரும்பான்மையான கலைச் சொற்கள் கிரேக்கம், இலத்தீன் மொழிகளிலிருந்தே தோன்றியுள்ளன. எனவே, மூலச் சொல்லை, ஒலிப் பெயர்வு செய்து, தமிழ் இறுதிநிலைகள் முதலியவற்றுடன் தமிழ்ப்படுத்தி ஏன் ஆளக்கூடாது? சில வாரங்களுக்கு முன்னால் ஒரு சர்ச்சில் குருக்கள் ஒருவர் 'மிசினெறிகள் என்பதற்குப் பதிலாக 'மிசியோனாரிகள்' பற்றிப் பேசக் கேட்ட போது, நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அச்சொல், 'மிசியோனாரியஸ்' (Missionarious) என்ற இலத்தீன் சொல்லுக்கு மிகவும் பொருத்தமாயிருந்த துடன், தமிழின் சிறப்பியல்புக்கும் மிகவும் பொருந்தி வருகிறது" (I.W. Vol. II No.2. Page - 200) இத்தகைய மகிழ்ச்சி, ஒவ்வொரு தமிழனுக்கும் வரவேண்டாமா?

குற்றுகரம் சேர்க்கும்போது தமிழ்ப்படுத்தப்படுதல்; பாக்கெட் - பாக்கெட்டு, கார்க் - கார்க்கு, கேரட் - கேரட்டு.

இடையில், இறுதியில் சேர்க்கப்படும் உருபுகளால், சாரியைகளால் தமிழ்ப் படுத்தப்படுதல்; விச்வநாத் - விசுவநாதன், சுந்தர் - சுந்தரன், சாண்டில்யன் - சாண்டிலியன்.

இங்ஙனம் தமிழ்ப்படுத்தப்படும் நெறிமுறைகளைத் கற்பிக்க வேண்டும். ஜாக்கப் - யாக்கோபு, ஜான் - யோவான் என்றெல்லாம் தமிழாகிய மரபுச் செல்வாக்கை மாணவர் உணரச் செய்ய வேண்டும்.

கிராம மக்கள் பேச்சுத் தமிழில் பிறமொழிகளைத் தமிழாக்கும் செவ்விகளை உற்று நோக்கித் திரட்டித் தந்து, அவற்றைக் கற்றவரும் உணருமாறு செய்ய வேண்டும்.

# 4. மொழி ஆராய்ச்சியும் உலக வழக்குப் பயன்பாடும்

பதற்றம் என்றே எழுதவேண்டும்; பதட்டம் என்ற உலகவழக்குத் தவறு என யான் எழுத, தினமணியும் இன்றளவும் அவ்வாறே வெளியிடுகிறது. ஒரு மொழியியலறிஞர், 'பதஷ்ட' எனத் தெலுங்கிலும் பிற திராவிட மொழிகளிலும் அது வழங்குவதால் பதட்டமும் சரியே என்று எழுதி, என்னை நகையாடியிருந்தார்.

## செவ்விய ஆங்கில மொழிநடை

நம் தமிழகத்தில் வெளியாகும் ஆங்கில நாளேடுகளிலும் செவ்விய ஆங்கில மொழிநடையே பின்பற்றப் படுகிறது. நம் தமிழர்கள் எழுதும் ஆங்கிலமும் தரமான நடையிலேயே காணப்படுகிறது. செய்திகள், செய்திச் சித்திரங்கள், சிறப்புக் கட்டுரைகள், ஆசிரிய உரைகள் எல்லாமே சீரிய, கூரிய ஆங்கிலநடையில் அமைகின்றன. இவற்றை யாரும் ஆங்கிலப்பற்று, ஆங்கில ஆர்வம் என்று தம்பட்டமடிப்பதில்லை. 'சாவில் ஆங்கிலம் படித்துச் சாக வேண்டும், சாம்பல் ஆங்கிலம் மணந்து வேகவேண்டும்' என்று யாரும் பாடித் திரிவதுமில்லை. சிறந்த ஆங்கிலத்தில் எழுதுவது எழுதுபவனுக்கு நல்லது; இதழுக்கு நல்லது என்று கருதுவதைத் தவிர ஆங்கிலத்துக்கு நல்லது என்று யாரும் கருதி மகிழ்வதில்லை; 'ஆங்கிலம் வாழ்க' என்று ஆங்கிலக் கட்டுரையைத் தொடங்குவதில்லை.

இங்கேதான் நல்ல தமிழில் எழுதினால், பேசினால் அதைத் 'தமிழ்ப் பற்று' என்று முத்திரை குத்திவிடுகிறோம். இதைப் பார்த்துத் தமிழ்த்தாய் கண்ணீர் விடுகிறாள்!

விளங்கும்படியான, சரியான, பிழையற்ற தமிழில் எழுதினால், அதை விளங்கிக் கொள்ளும் தமிழர்களுக்கு நன்மை; இதனால் தமிழுக்கு என்ன நன்மை? மொழி ஒரு கருவி. கருத்துப் பரிமாற்றத்துக்குரிய கருவி. அக் கருவியைத் திட்பநுட்பமுடன், தெளிவாக, பிழையின்றி, சிதைவுகள் வழுக்களை நீக்கிக் கையாள்வதால், அம் மொழியைப் பயன்படுத்துவோர் முன்னேற்றத்துக்கு அது உதவும். அல்லாமல் குழப்பம் ஏற்படுத்தினால், பேசுபவரே தெளிவுபெறமாட்டாமல் பின்னடைவர். இதில் 'தமிழ்ப் பற்று'க்கு இடமில்லை. இதனால் தமிழுக்கு இடையூறு உண்டானதுதான் மிச்சம். சரியான சொல்லை ஆளவேண்டும் என்றாலே, 'இவன் தமிழ்ப்பற்றால்

சொல்கிறான்' என்றாகிவிட்டது. செவ்விய நடையில் எழுதவேண்டுமென்பது 'உணர்வுநிலை'யாம்! 'இவன் சொல்வது சரி' என்ற நிலைபோய், அதற்கொரு காரணம் கற்பித்துக் கூறிப் புறக்கணிக்கும் மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது!

## தமிழ்வாழ்க!

அரசியல்வாதி மேடையேறி அலங்காரமாகத் தமிழில் பேசுவதையே தமிழ்ப் பணி என முடிவுசெய்து, இதற்குமேல் எப் பணியுமில்லை என்று மன நிறைவு பெறுகிறான்.

பிழையற்ற தமிழில் எழுதும் அக்கறை இல்லாத மாணவன், 'தமிழ் வாழ்க' என்று கட்டுரையைத் தொடங்கி, அதனுடன் தன்பணி நிறைவேறியதாக மகிழ்கிறான்.

தாய்மொழிமூலமே அனைத்துப் பாடங்களையும் பயிலவேண்டு மென்பது மக்கள் அனைவருக்குமான நன்மையே தவிர, அதனால் மொழிக்கு என்ன நன்மை என எண்ணிப் பாராமல், இவையெல்லாம் 'மொழிப் பற்று', 'மொழி வெறி' என்று கல்வியாளர்கள் புறக்கணிக்கின்றனர்.

மொழி ஆராய்ச்சி வேறு, இலக்கணம் வேறு எனப் பிரித்துணர மாட்டாமல் மொழியறிஞர் சிலர், தாமும் குழம்பிப் பிறரையும் குழப்புகின்றனர்.

## பதற்றம், பதட்டம்

அம்மனூர் என் சுவாமிநாதன், 'தினமணியில் வெளியாகும் செய்திகளில் 'பதற்றநிலை' என்ற வார்த்தை பயன்படுத்தப் படுகிறது. பதட்ட நிலை என்றுதானே பயன்படுத்தவேண்டும். இவ்விரு சொற்களுக்குமுள்ள வேறுபாட்டைக் கூறவும் என்று எழுதியுள்ளார். பதறு, பதறுதல், பதற்றம் என்பதுதான் அர்த்தமுள்ளது. பதட்டம் என்பது பொருளற்ற சொல். சிலர் அதைப் 'பதஷ்டம்' என்றும் சொன்னதுண்டு. தமிழின் திரிபுற்ற சொல் வடிவங்களைப் பேச்சு வழக்கிலும், தொடர்புடைய தெலுங்கு முதலிய திராவிட மொழிகளிலும் காணலாம். அதனால் 'பதட்ட' என்பதே சரியான சொல் என்றாகிவிடாது. பதற்றம், பதற்றநிலை என்பன பொருளுணர்ச்சியோடு கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள உதவும். ஒரு சொல்லில் அதன் பொருளுக்குரிய மூலக்கூறாகிய காரணமும் அமைந்திருப்பது பொருளுணர்ச்சிக்கு உதவும் தனிச்சிறப்பாகும். 'உள்' என்ற சொல்லுக்கும் 'உள்ளம்' என்ற சொல்லுக்கும் தொடர்பிருக்கும்வரை, உள்ளம் என்பது உள்ளுள் இருப்பது, மறைவாக இருப்பது, அருவமாக இருப்பது என்பன தாமே பெறப்படும். இது தினமணியின் தமிழ்ப்பற்று என்பதைவிட,

இவ்வாறு ஆள்வது பலர்க்கும் நல்லது என்பதால் ஆள்கிறது என்பதோடு அமையவேண்டும். பிற இதழ்கள் வழக்கில் காணப்படுவ்தை அப்படியே ஆள்வதாக எண்ணுகின்றன. முன்னதைத் தமிழ்ப்பற்று என்றும் பின்னதைத் தமிழ்எதிர்ப்பு என்றும் முடிவு கட்ட வேண்டாம். மனநிலைதான் காரணம். இரு வழக்குடைய மொழியில் பேச்சுவழக்கு, திரிபுநோக்கியே செல்வதால், எழுத்து வழக்குச் செம்மை நோக்கியே செல்லவேண்டும். இச் சமனிலைப்பாட்டுப் போராட்டத்தில்தான் இருவழக்கு மொழிகள் நிலைபெறுகின்றன.

## மருத்துவ அறிவியல் வேறு, மருத்துவம் வேறு

மருத்துவ அறிவியல், நோய்களின் இயற்கையைக் கண்டறிகிறது; மருத்துவம், அதன்வழி உண்மையறிந்து நோயைக் குணப்படுத்துகிறது. நோயின் இயல்பை, மூலத்தை அறிவதும் அறிவியல்தான்; அதை அகற்றுவதும் சீர்செய்வதும் அறிவியல்தான் என்றாலும், இரண்டற்கும் வேறுபாடுண்டு. முன்னதற்குக் குற்றமுள்ளவிடத்தைத் தேடுவது குறிக்கோள்; பின்னதற்குக் குற்றம் களைவதுதான் குறிக்கோள்.

## மொழி அறிவியல் வேறு, இலக்கணம் வேறு

மொழியிலேற்படும் ஒலித் திரிபுகள், உருமாற்றங்களுக்குக் காரணம் என்ன? மொழியின் இயற்கை யாது? அதிலேற்படும் குறை நிறைகட்கான மூலங்கள் யாவை? இவ்வாறு பேச்சுமொழி, எழுத்துமொழிகளைத் துருவித் துருவி ஆராய்ந்து, திரிபுகள் வளர்ச்சி நிலைகளின் அடிப்படையைக் கண்டறிவது மொழியியலாகும். தமிழ்மொழி மற்றும் திராவிட மொழிகளின் சீர்மை நீர்மைகளைக் கண்டறிவதில், தமிழக மொழியியலார் அளப்பரும் சேவை செய்து வருகின்றனர். இலக்கணம் என்பது 'குற்றங் களைந்து குறை பெய்து வாசித்தல், கற்றறிந்த மாந்தர் கடன்' என்பதற்கொப்பக் குறைகளைய வழிகாட்டுவதாகும். பதற்ற என்பது பதட்ட ஆன வரலாற்றை மொழி அறிவியல் கண்டு சொல்லும்; பதற்ற என்பதே மூலச் சொல் - அதனை ஆள்வதே நெறி என இலக்கணம் எடுத்தியம்பும்.

ஒரு மருத்துவர் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, "ஊரெல்லாம் மூளைக் காய்ச்சல் கிடக்கிறது. உங்கள் பையனுக்கும் அதுதான். அது இன்ன இன்ன காரணங்களால் வருகிறது. அது இவ்வாறு முடியும். இது உங்கள் பையனுக்கு மட்டுமன்று, எல்லோருக்கும் இதே கதிதான். போய்வாருங்கள்" என்றால், பிள்ளையைப் பெற்றவர்கள் எவ்வளவு பதறுவார்கள்! இப் பதற்றநிலையை உருவாக்குவதா அறிவியல்?

## மொழியியலும் மரபிலக்கணமும்

மொழி அறிவியலையும் மரபுவழி இலக்கணத்தையும் பிரித்துப் பேசுவதே தவறு. அவை ஒரு நாணயத்தின் இருபக்கங்கள். ஒன்று ஆராய்கிறது; ஒன்று தீர்வு காண்கிறது. ஒன்றற்கென்று உதவியாகவே அவை விளங்குகின்றன. இன்னும் சொன்னால், முற்கூரிய உடற்கூற்றுப் பகுப்பாய்வுகள் இயல்பான ஆய்வுகள்; மருத்துவ நெறிகள் பயன்பாட்டு ஆய்வுகள். மொழியியல் இயல்பான ஆய்வு - இலக்கணம் தான் பயன்பாட்டாய்வு. முன்னைய இயற்கை ஆய்வு இல்லாமல் பயன்பாட்டாய்வு தோன்றாது. தொல்காப்பியருக்கும் பவணந்தியாருக்கும் மொழியாய்வுத் தடங்கள் இல்லை என்று கூறமுடியாது. கருத்து வேறுபாடுகள் இருக்கும், இருக்கவேண்டும். அதுதானே அறிவியல்! எழுத்து என்பதை ஒலியன் என்றும், சொல் என்பதை உருவன் என்றும், போலியை மாற்றொலியன் என்றும் புதுப் புதுக் கலைச் சொற்களை ஆள்வதால், நாம் முன்னேறுகிறோம் என்பது தெரிகிறது. அவையும் பழைமையின் விளைவாய்ப் பூத்த புதுமைகளே என அறியாமல் குழம்பும்போது, நம் ஆய்வுகள் பயன்பாட்டு ஆய்வுகளாக மாறாமல் பாழ்படுகின்றன. வெறும் ஆராய்ச்சிக்காகவா ஆராய்ச்சி!

## பச்சைத் தண்ணீரும்; சுடு தண்ணீரும்

பேச்சுவழக்குப் பெருஞ்செல்வம். உலகவழக்கும் இருவகைப் படுகிறது. ஒன்று கொட்டிக் கிடக்கும் சொற்செல்வம், தொடர்ச் செல்வம் வாக்கிய அமைப்புகள்! மற்றது கொச்சைவழக்கு. மக்கள் தம் அறியாமையாலும் அவசரத்தாலும் ஒப்புமையாக்கத்தாலும் பிழைபட உணர்வதாலும் செய்து விடும் பிழைகள். இவை தனி ஆய்வுக்குரியன. இவற்றுள்ளும் ஒருசில காலப்போக்கில் மொழியில் எறி அமர்ந்து கொள்கின்றன. தள்ளப்பட்டுத் தள்ளப்பட்டுத் தள்ளவியலாநிலை வரும்போது, இவை நிலை பெறுவதுண்டு. அதற்காக இவற்றுக்கு வரவேற்புரை உடனுக்குடன் வாசிக்கக் கூடாது.

நீர் என்றாலே போதும் - தண் + நீர் ஆனது ஒரு மாற்றம்... கண்ணிலிருந்து கண்ணீரும், புண்ணிலிருந்து புண்ணீரும் வரவர அவற்றிலிருந்து வேறுபடுத்தத் 'தண்ணீர்' வந்திருக்கிறது. தண்ணீர் பச்சைத் தண்ணீரானது இரண்டாவது மாற்றம். அழுத்தமாகப் பேசுவதாக நினைத்து 'பச்சைத்தண்ணியிலேயா குளித்தாய்' எனக் கேட்பர். தண்ணீர் நீரைக் குறிக்கும் பொதுச்பொல் ஆகிவிட்டது. மழைத் தண்ணீர், ஊருணித் தண்ணீர்,

கண்மாய்த் தண்ணீரெல்லாம் வந்த பிற்பாடு, வீட்டினுள் சுடுதண்ணீரும் வந்துவிட்டது. மதுரை கோ.புதூர், இர்ா. சக்கரபாணி, 'இவை சரியா தவறா' என்று வினவுகிறார். இன்று வெந்நீர் என்றே பெரிதும் கூறுகின்றனர். தமிழில் ஒருபொருட்பன்மொழிகள் அழுத்தம் காட்டும்; மிகுதியைச் சுட்டும். அந்த வழியில் வந்தது இது. அதனால், 'பச்சைத் தண்ணீரில்' பிழை ஒன்றும் இல்லை. இருந்தாலும் கூடுதல் குளிர்ச்சியால் சளிபிடிக்கும், அது வேண்டாம் என்றால் அவரும் ஒப்புக்கொள்வார் என்பதுறுதி.

(தினமணி)

# 5. தமிழ்மொழியின் இருவகை வழக்கு

## தமிழை எழுதுவது எப்படி?
## கற்பிக்கும் நெறிமுறை யாது?

'பேச்சு வழக்குத் தமிழ் ஏட்டுவழக்கு அடையும் போது, சிறிதளவு வேறுபட்டேயிருத்தல் வேண்டும். அ்.தாவது பேச்சுத் தமிழ் எழுதப்படும்போது, திருத்தியே எழுதப் பட்டிருத்தல் வேண்டும்.

ஏட்டுவழக்குத் தமிழும் பேச்சுவழக்குத் தமிழும் என்றும் ஒன்றாயிருந்ததில்லை.

எனவே, ஏட்டுத் தமிழ் தான் இருந்தவாறே என்றும் பேசப்படவில்லை. இப்பொழுது பண்டை நூல்களிற் காணப்படுகின்றபடியே அக்காலத்துச் சாமானிய சனங்களும் பேசினார்களென்பது பொருந்தாது."

வி.கோ. சூரிய நாராயணசாஸ்திரியார்,
தமிழ் மொழியின் வரலாறு (1903) ப.29.

நாம் தமிழில் பேசுவதுபோல் எழுதுவதில்லை; எழுதுவதுபோல் பேசுவதுமில்லை. அன்றும், இன்றும், என்றும்!

இருவழக்கு என்பன ஒரு வயிற்றில் பிறந்தவை. பேச்சு வழக்கு - உலகவழக்கு முந்தையது; எழுத்துவழக்குப் பிந்தையது.

பேசத்தெரிந்த எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பிறகுதானே தமிழன் எழுதக் கற்றுக்கொண்டான்.

பரிதிமாற் கலைஞர் (சூரிய நாராயண சாத்திரியார்) கூறியிருப்பது போலப் பனை ஏடுகளில் எழுதப் பழகியபோது - அதாவது ஏட்டு வழக்கில் வந்தபோது, அதனைச் சற்றுத் திருத்தமுற எழுதவே முயன்றிருப்பான்.

### ஒரே காலத்தில் இருவகை வழக்கு

பின்னர் இரு வழக்குகளும் ஒரே காலத்தில் நடந்தன. 'யான்' இருந்த போதே நான் என்று பேசியிருப்பர். யாடு-யாட்டை-(மேட இராசி) அதிலிருந்து யாண்டு. எனவே, யாண்டு என்பதைப் பேச்சில் 'ஆண்டு' என ஆக்கியிருப்பர்.

இவ்வாறு இருவேறு வழக்குகளும் கொண்டும் கொடுத்தும் வளர்ந்தன. படைப்பாளிகள் - எழுத்தாளர்கள் - புலவர்கள் எழுத்து வழக்கைச் செம்மைப்படுத்த முயன்றிருப்பர்; எளிய மக்கள் தம் அறியாமை, விரைவு, சுருக்கம், விளக்கம் காரணமாக எளிமைப்படுத்த முயன்றிருப்பர். எழுத்தாளரிலும் இருவகையினர் இருந்தனர். மக்களுக்காக எழுத நினைத்து, தரமான பேச்சுவழக்கை ஏற்று எழுதியுள்ளனர். மற்றும் சிலரோ, தங்கள் புலமை வீச்சைக் காட்டவேண்டிக் கடிய நடையையே கையாண்டு உள்ளனர்.

தொல்காப்பியர் அக்கால நிலையை ஒட்டி, எளிய நடையில் எழுத முயன்றதைத் தனியே விளக்க முடியும். திருவள்ளுவரும் மொழி நடையாலும் மக்கள் வழக்கிற்கு இடம்தந்தும் எழுத முற்பட்டுள்ளமை, அன்றைய நிலையை வைத்து நினைத்துப் பார்க்க வேண்டும்.

நான்கு - முந்தையதா; நாலு முந்தையதா? 'நாலடியார்' இருக்கிறதே. நாலும் நான்கும் சம காலத்தனவே. நாலு மக்கள் வழக்காதலின், முந்தைய தாதல் கூடும். சோகாப்பர், பாக்கியம், கீழ்கள் (சீற்றத்தில் வருகிறது) எனப்பல சொற்கள் திருக்குறளில் காணப்படுகின்றன. கரணம், காரணம் முதலியன தொல்காப்பியத்தில் உள.

இவை சில தமிழல்ல என மயங்கவேண்டா. பல சொற்கள் பொது மூலமுடையவை; சில தமிழிலிருந்து வடமொழிக்குப் போனவை. வடமொழியும் தமிழிலிருந்து கடன்பெற்றது என்பதைப் பரிதிமாற் கலைஞர், கால்டுவெல், எமனோ, பரோ போல்வார் எடுத்துக்காட்டியுள்ளனர்.

தமிழ் ஒலிப்பு வடிவத்திற்கு ஒத்து வருவன எல்லாம் தமிழே என்று நாம் கொள்ள வேண்டும்.

பேரறிஞர் கால்டுவெல், 'திராவிடக் குடும்ப மொழிகளைக்' கண்டு முதன்முதலில் அவற்றுக்கு ஒப்பிலக்கணம் எழுதியவர். அவரும் வீரமா முனிவரும் எழுத்துவழக்குத் தமிழைச் செந்தமிழ் என்றும், பேச்சு வழக்கைக் கொடுந்தமிழ் என்றும் பெயரிட்டமை பொருந்தாது.

> "இலக்கிய நடைமொழிகளுக்கிட்ட பெயர்களுள் தமிழ் இலக்கிய நடை மொழிகளுக்கிட்ட பெயர்தான் மிகவும் பொருத்தமானதாம். அது 'செந்தமிழ்' என்பது. அஃதாவது நேரான திருத்தமான தமிழ் என்பது. இதனின்றும் பிரித்து வேறாகக் கூறப்படும் கொடுந்தமிழ் என்பது,

பேச்சுத்தமிழையும், தமிழின் இடவகைத் திரிபுகளாக இலக்கண அறிஞரால் வகுத்துரைக்கப்பட்ட பன்னிரு மொழிகளையும் குறிக்கும். ஐரோப்பிய அறிஞர் இச்செந்தமிழைக் குறிக்க, 'உயர்தமிழ்' (Standard language) என்ற தொடரை வழங்குகின்றனர்...."

"ஏனெனில், இந்த இலக்கிய மொழிகள் அனைத்துமே ஒரு வகையில் பழைய மொழிகள் என்று கூறத்தக்கவையேயாயினும், அவற்றின் சிறந்த பண்பு பழைமையன்று; அவற்றின் திருந்திய உருவும், செம்மைப் பாடுமேயாம்...."

"இன்று பேச்சுத் தமிழுக்கும் இவ் உயர் செந்தமிழ் நடைக்கும் இடையே எவ்வளவு மாறுபாடுகள் இருக்கின்றனவோ, அவ்வளவு பெரும்பாலும் அவை எழுதப்பட்ட காலத்துப் பேச்சு மொழிக்கும் அதற்குமிடையேஇருந்திருக்கக்கூடும். இவ்வளவு திருத்தமும் செம்மைப்பாடும் உடையதொரு மொழி, என்றேனும் எத்தகைய வகுப்பாரிடையேனும்பேச்சு வழக்கிலிருக்கக் கூடுமென்பது நம்பக் கூடாத செய்தியேயாம். அதில் பல பழைய சொல் வடிவங்கள் இருக்கின்றமை உண்மையே. ஆயினும், இலக்கிய வழக்கு ஏற்பட்ட போது, கொச்சை என்று கூசாதுவிலக்கப்பட்ட சொற்களுள், மிகப்பழைமையான சொற்களும் விலக்கப்பட்டிருத்தல் வேண்டும்..."

"ஒரு சொல்லின் பழைமையை அல்லது பழைய வடிவை வரையறுக்கு மிடத்தில், அதன் பேச்சு வடிவைவிட இலக்கிய வடிவையே பழைமைக்குச் சான்றாகக் கொள்ள முடியும். பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் என்று, எவ்வடிவில் வழங்கின என்று கூறமுடியாது. ஆனால், இலக்கியத்திலோ இலக்கணத்திலோ ஒரு சொல் வழங்கினால், அஃது அந்நூல் எழுதப் பட்ட காலத்திலேயோ, அன்றி அதற்கு நெடுநாள் முன்னரேயோ அவ் வடிவில் வழங்கி வந்திருக்கவேண்டும் என்று முடிவு செய்யலாகும். ஒரு சொல், இலக்கியத்தில் வழங்குவதற்கு முன்னமேயே, அது நெடுநாள் பேச்சுவழக்கில் வழங்கியிருக்க வேண்டுமாதலால், இலக்கிய வழக்கால் அதன் பழைமை இன்னும் நன்றாக வலியுறு மென்பதில் ஐயமில்லை."

(கால்டுவெல், திராவிடக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கண முன்னுரை, தமிழாக்கம், கழகப் பதிப்பு (1941), பக். 125-127)

சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் வெளிப்பட்டுப் பரவாத காலத்தே, கால்டுவெல் இவ்வளவு நுட்பமாக எழுதியுள்ளார். அவர் நூல் முழுவதையும் திரும்பப் படித்தால், மிகப் பெரிய 'ஆய்வுக் களஞ்சியங்கள்' உருவாகும். எமனோவும் பரோவும் சமஸ்கிருதப் பேரறிஞர்கள். அவர்கள் தொகுத்த 'திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதியைத்' தமிழாக்கம் செய்து, மேலும் மேலும் தொடர நூற்றுக்கணக்கான வாய்ப்புகள் உள.

கால்டுவெல் கன்னடம், தெலுங்கு, மலையாளம் இவற்றில் பழையவை, புதியவை என இரு பிரிவுகள் உள என்றும் இவற்றுள் பழங் கன்னடம், அச்சதெலுங்கு (பழையது), எழுத்தச்சன் காலத்தும் அதற்கு முந்தையதுமான பழமலையாளம் மூன்றும் தமிழ்த்தொடர்பு மிக்கன என்றும், பின்னர் வந்தவை வடமொழிச் சொற்கள், இலக்கணம் இவற்றை ஏற்றுப் பெரிதும் திரிந்தவை என்றும் கூறியுள்ளார். அவைபோலவே, தமிழும் எழுத்துத்தமிழ் வேறு, பேச்சுத்தமிழ் வேறு என அவர்கள் பிரிப்பது ஏற்புடையதன்று. இவை அத்துணை வேறு படவில்லை. இன்றும் பொதுமையே மிகுதி.

இவ்வாறு விவாதத்திற்கு இடம் தந்தும், தெளிவு தந்தும், மேலாய்வுக்கு வழிதந்தும் எழுதியுள்ளார் அறிஞர் கால்டுவெல்.

## தொல்காப்பியர் கருத்து

பனம்பாரனார் தமது முன்னுரைப்பாயிரத்தில், 'தமிழ் கூறும் (பேசும்) நல்லுலகத்து (அன்றே பல நாடுகளிலும் தமிழ் பரவியிருந்ததை நினைப் பூட்டுகிறது எனலாம்) வழக்கும் செய்யுளும் ஆகிய இரண்டையும் ஆராய்ந்து, தொல்காப்பியம் எழுதப்பட்டது', என்று கூறுகிறார். வழக்கு - உலக வழக்கு, மக்கள் பேச்சு வழக்கு. செய்யுள் - இலக்கிய வழக்கு, எழுத்து வழக்கு. இதனுள் முந்தையது பேச்சு வழக்கே என்பதும், அதற்கே முதலிடம் என்பதும் அன்றே கூறப்பட்டமை அறிதல் வேண்டும். இளம்பூரணர் இதற்குத் **'தமிழ் மொழியினைக் கூறும் நன் மக்களான் வழங்கும் வழக்கும்'** என்று உரைகூறுகிறார். நச்சினார்க்கினியர் **'அவர் (மக்கள்) கூறும் செந்தமிழ் இயல்பாகப் பொருந்திய செந்தமிழ்நாட்டிற்கு இயைந்த வழக்கோடே'**- என்று எழுதுகிறார்.

செந்தமிழ் நிலம்சேர் பன்னிருநிலத்தும் திசை வழக்குகள் - வட்டார வழக்குகள் இருந்தனவாதலின், தொல்காப்பியம் செந்தமிழ்நாட்டு வழக்கிற்கு எழுதப்பட்டது என இவர் வேறுபடுத்திக் கூறுகிறார். மேலும், மரபியலில் வரும்

'வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே, நிகழ்ச்சி அவ்வர்கட்டாகலான' என்ற நூற்பாவைக் காட்டி, உயர்ந்தோர் வழக்கையே இந்நூல் பின்பற்றி எழுதப்பட்டதென்பதை நிறுவுகிறார்.

ஆங்கில இலக்கணம் பற்றிய புதிய நூல்களில், 'இந்நூல் கொச்சை வழக்கு, குறுமொழி, பிழைவழக்கு' போன்றவற்றுக்கு எழுதப்பட்ட இலக்கண மன்று எனத் தெளிவாகவே குறிப்பிடுகின்றனர்.

ஆங்கில ஒலிப்புமுறை, நடைமுறை ஆங்கிலப் பயிற்சிக்கு B.B.C. எனப்படும் அந்நாட்டு, ஒலிபரப்புக் கழகத்தின் 'செய்திவாசிப்பையே' முன்னுதாரணமாகக் கொள்கின்றனர். இச்செய்தி ஒலிபரப்பில், பேசுபவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. ஒரு குழு இதை ஆராய்ந்த வண்ணம் இருந்து, நிறை குறைகளைச் சுட்டிக் காட்டுகிறது.

இவ்வாறு தனிக்குழு அமைத்து, ஒரு மொழி வழக்காறு காப்பாற்றப் படுவதைக் கண்டு, அமெரிக்க நாட்டினரும் தங்கள் 'செய்தி ஒலிபரப்புகளை' செவ்வையும் செப்பமும் உடையதாக்குகின்றனர்.

தமிழிலும் இம்முறை வரவேண்டும். வழக்கெனப்படுவது உயர்ந்தோர் வழக்கு, பிற பொது மக்களிடத்தும் காணப்படும் வழக்காறுகளில் உயர்ந்த வழக்கு, திசை வழக்குகளாயினும் அவற்றிலுள்ள சிறந்த வழக்கு, செந்தமிழ் நாடு எனப்படும் பகுதியில் வழங்கும் உயர் கட்டளை மொழி வழக்கு என உணர்கின்றோம்.

மேலும் எழுதப்படாமல் உலகப் பேச்சு வழக்கில் காணப்படும் வாய்மொழிப் பாடல்கள், நாடகங்கள், இசைக் கீர்த்தனைகள், வட்டாரக் (புதினம்) கதை போன்றவையும் தொல்காப்பியர் கருத்தில் இருந்துளது.

இவ்விரு வழக்குகளையும் நினைவிற் கொண்டே தமது நூலை யாத்திருப்பதாக அவர் கூறுமிடங்கள் பலவாகும்.

## இருவகை வழக்கு; உலக வழக்காறுகள்

மொழிக்கு இருபக்கங்கள் உண்டு. ஒன்று எழுத்து வழக்கு மருங்கு (பக்கம்), மற்றொன்று வழக்கியல் மருங்கு - உலக மக்களின் உயர்ந்த பிழையற்ற பேச்சு வழக்கு.

செய்யுள் மருங்கிலும் வழக்கியல் மருங்கிலும்
மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்

பல்வேறு செய்தியின் நூல்நெறிபிழையாது
சொல்வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல் (946)

"இரண்டு மருங்கிற்கும் (வழக்குகளுக்கும்) இதுவரை, பொருளுணர்ச்சி பெறுமாறு, யான் கூறிய இலக்கண மெல்லாவற்றையும் அறிந்த நீங்கள், இன்றுமுள்ள பல்வேறு இலக்கணச் 'செய்கைகளை' இலக்கண நூல் நெறியினின்றும் பிழையாது, தெரிந்து கொள்ளுங்கள். அவ்வாறு அறிந்தவற்றைச் சொல்லிலக்கணத்தின் எல்லைகளை அறியுமாறு வகை தொகைப்படுத்திப் பிரித்துக் காட்டுவீர்களாக!"

இது சொல்லதிகாரப் புறனடைச் சூத்திரம்.

எந்த இலக்கணத்தையும் முற்ற முடியக்கூற முடியாது. பயிர் வளர வளர, வேலியை உயர்த்துவது போலக் காலந்தோறும் இலக்கிய வளர்ச்சி, மாற்றம், புதுமைகள் பலவும் தோன்றும். அகராதியும் அவ்வாறே புதுச்சொற்கள் பல்கும். அவற்றை முன்பு சொன்ன முறைப்படி, நூல் (இலக்கணம்) நெறி பிழையாது, நீங்களும் தெரிந்துகொண்டு மற்றவர்களுக்கும் முறைப்படி வகைப்படுத்தி எடுத்துரைப்பீர்களாக என்னும் தொல்காப்பியத் தொலைநோக்குக் கருதற்பாலது.

அவர் தரமான பேச்சு வழக்கையே Standard Spoken language - இங்கு ஏற்கின்றார். அஃது உயர்ந்தவர் வழக்கு, பிழையற்ற நல்ல வழக்காறு ஆகும். கொச்சை மொழி, குறுமொழி, சிதைவுத் திரிபுகள், பிழை பட்டவை எதனையும் அவர் ஏற்கவில்லை.

கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத்து என்மனார் புலவர் (483)

இஃது எழுத்ததிகாரப் புறனடைச் சூத்திரம்.

இலக்கிய வழக்கில் இதுவரை சொன்னவற்றிலிருந்து, திரிந்து வழங்குவனவும் வரலாம். உலக வழக்கில் மருவி (திரிந்து, வேறுபட்டு) வருவனவும் உளவாகலாம். இவை இதுவரை கூறிய இயற்கையிலிருந்து வேறுபடத் தோன்றுமாயின், இருவகை வழங்கியல்களின்படி அவற்றை உணர்ந்து இலக்கணம் விதித்துக் கொள்ளுக. அதுவே நல்லறிவு நாட்டமுடைய (ஆராய்ச்சி அறிவுடைய) புலவர்களின் கடமையாகும்.

இவ்வாறு கூறும் ஒரு மொழி பற்றிய தொலை நோக்கு, நம்மை வியக்க வைக்கவில்லையா? எல்லாம் என்னுடைய நூலுடன் முடிந்துவிட்டன என்று அவர் கூறுவதில்லை.

வழங்கியல் மருங்கு - வழக்காக ஒரு மொழியில் நடக்குமிடத்து (22)

இது இலக்கியத்துக்கும் உலகப்பேச்சு வழக்குக்கும் பொதுவழக்கு.

**ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**வழக்கினாகிய உயர் சொற்கிளவி**
**இலக்கண மருங்கில் சொல்லாறல்ல** (510)

கம்பன் காவியம் படைத்தான் - ஒருவனே அல்லனா? ஒருமை அன்றோ? பன்மை அன்றே? பலர்பால் ஆகாதே? இதுவே இலக்கணம்.

கம்பர் காப்பியம் படைத்தார் - இஃது இலக்கணமாகாது. கம்பர் பலராகாரே? ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி இது. ஒருவன் என்னாது ஒருவரென்று, தொல்காப்பியரே, இலக்கணத்திற்குள்ளேயே அதற்கான எடுத்துக்காட்டையும் சொல்லி விடுகிறார். இவ்வாறே தாமே உதாரணமும் காட்டி எழுதுமிடங்கள் மிகப்பல உள.

இன்று 'கம்பன் தம் காப்பியத்தில்' என்றெல்லாம் ஒருமை பன்மை மயக்கமாக எழுதிவிடுவர் சிலர். வரதராசன் துணைவேந்தர் ஆனார் என்பது தவறு. அதனால், வரதராசர் என்றோ வரதராசனார் என்றோ எழுதுவர்.

'ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவி' நரியார் சிங்கத்தை ஏமாற்றினார் - என்பது போலக் கதைப்பன பலவுள. இவை உலக வழக்கிலுள்ள, 'உயர்சொற் கிளவி' - அதாவது 'மதிப்புப்பன்மை'. ஆயினும், இஃது இலக்கண மருங்கில் - இலக்கணப்படி பார்த்தால், அதன் வழிப்பட்ட சொல்லன்று. உரையாசிரியர்கள் இலக்கணப்படி சரியன்று என்றாலும், இதனைத் தொல்காப்பியர், 'வழுவமைதி' (குற்றமாயினும் ஏற்கக்கூடியதே) என ஏற்றதாக எழுதியுள்ளனர்.

**செயப்படு பொருளைச் செய்தது போலத்**
**தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே** (731)

சில போது செயப்படு பொருளாகச் சொல்ல வேண்டியதை, அதுவே செய்ததாகக் கூறுவதும், உலக வழக்கிலுள்ள மரபே. சிங்கப்பூர் விமானம்

மதுரை வரை செல்லும். விரைவுத் தொடர்வண்டி இரவிலும் ஓடும். வண்டி ஒடிந்தது: குடை விரிந்தது. பண் இசைத்தது. செலுத்தப்படும், ஓட்டப் படும், ஒடிக்கப்படும், விரிக்கப்படும் எனச் செய்யப்படுவன இவை. விமானம் தானே செல்வதன்று; செலுத்தப்படுவது. குடை விரிக்கப்படுவதே. செய்தது போலக் கூறுவது உலக மரபு; இலக்கண மரபன்று. 'திண்ணை மெழுகிற்று' என்பதையே எல்லா உரையாசிரியரும் திரும்பத் திரும்பக் காட்டுவர்.

## மரூஉ மொழிகள்

மரூஉ மொழிகள் - சொற்கள் மருவி (திரிந்து) வழங்குதலுண்டு, உலக வழக்கில் அவை சில ஏற்கப்படுமளவு ஏற்கப்படலாம். மொழிக் கட்டமைப்பும் பொருளமைதியும் கெடாதவாறு வரும் திரிபுகள் அவை.

மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே (111)

இல்முன் - வீட்டின் முன்னிடம். இதனை 'முன்றில்' என ஒரு சொல்லாக வழங்குவர். கண்மீ - கண்ணின் மேற்புருவம். இதை மீகண் என ஒரு சொல்லாக்குவர். இவைபோல இன்றைய உதாரணங்களும் பார்க்க வேண்டும். கோவை, சிங்கை, புதுவை, புதுகை எனச் சுருக்குவர். இவையும் முன்னைய புணர்ச்சி விதிப்படி, புணர்க்கப்படுமாம்.

**பலரறி சொல்முன் யாவர் என்னும்**
**பெயரிடை வகரம் கெடுதலும் ஏனை**
**ஒன்றறி சொல்முன் யாதென் வினாவிடை**
**ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்**
**மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே** (172)

யாவர் என்பதை யார் என்பதும், யாது என்பதை 'யாவது' என்பதும், 'மருவின் பாத்திய' என்றார். மருவி வழங்கும் பகுதியின என்பது கருத்து.

வழக்கில் வந்து, மொழிக்குப் பெரும் சிதைவு ஏற்படுத்தாதன, ஏற்கப்படுகின்றன. உலகில் மருவி (திரிந்து) வழங்கும் பகுதிகள் பலவுள. அவை இலக்கணப்படியானவை அல்ல. என்றாலும், நடைமுறைக்கு வந்து விட்டவை. பெரும் சிதைவுகள் ஆகாதவை. மு.வ. தம் 'அகல்விளக்கு'ப் புதினத்தில் ஆள்பவை சில :

சொல்லப்போ 'றேன் - போகிறேன் என்பதன் மரூஉ
ஏன்'பா - ஏனப்பா?

ஆக்கக் கிளவியும் காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே (505)

'எருப் பெய்தமையால் பயிர்நல்லவாயின' - இது காரணம் கூறி, ஆக்கம் சொன்னது. உலக வழக்கில் கொடி படர்ந்தது, நாடு சிறந்தது என ஆக்கச் சொற்களைக் காரணம் காட்டாமலும் கூறுவர்.

உலக வழக்கு வளரும் பயிர் போன்றது. வளர வளர வேலிகளும் உயர்த்தப்பட வேண்டும்.

## செய்யுள் வழக்காறுகள்

'இன்றி' என்னும் வினைஎஞ்சு இறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல்
தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே (237)

இன்றி என்பது 'இன்று' எனவும் மாறும், செய்யுளில் மட்டும்.

'உப்பின்று புற்கை உண்கமா கொற்கையோனே' எனவரும். உப்பின்றி - உப்பின்று என முன்பே திரிந்து வந்தது.

'நாளன்று போகி' (புறம் 124) எனவும் வரும். இது நாளன்றி - என்று இருக்க வேண்டும்.

அன்றுவரு காலை ஆஆ குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப (258)

அது + அன்று = அதுவன்று என வர வேண்டும். ஆனால், 'அதான்று' எனச் செய்யுளில் மட்டும் வரும்.

அது + ஐ = அதுவை என வரவேண்டும்.
அத் + ஐ = அதை. 'து'வில் உள்ள 'உ' கெட்டது.
இது முன்பு செய்யுளில் மட்டுமே வந்தது. இன்றோ இது பெரு வழக்கு.

விண்என வருஉம் காயப் பெயர்வயின்
உண்மையும் உரித்தே அத்துஎன் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை (305)

விண் - வான். காயம் - ஆகாயம். இதற்கு வினையொடு முடியும்போது அத்துச் சாரியை வருதலுமுண்டு; வராது போதலும் உண்டு. இவை செய்யுளில் மட்டும் வரும்.

விண்ணத்துக் கொட்கும் - விண்ணில் சுழலும். விண் + அத்து. (சாரியை வந்தது)

விண்குத்து - நீள்வரை - விண்ணை முட்டும் நீண்டமலை. (நாலடியார் 226).

சாரியை 'அத்து' இடையில் வரவில்லை.

வான் + சுற்றும் = வானத்துச் சுற்றும்;

வானத்தில் ஓடும் - அத்து வந்தவை. வானில் சுற்றும், வானில் ஓடும் - அத்து வரவில்லை. இவை இன்றைய உலக வழக்குகள்.

இவ்வளவும் எடுத்துக்காட்டப் பட்டது. இவ்வாறு இருவகை வழக்குகளையும் தொல்காப்பியர் ஏற்றார் என்பதை அறிவிக்கவே யாம். தனியே சிறப்பித்து -விதந்து கூறுமிடங்கள் இவை.

இவ்வாறு உலக வழக்கு, மருவின் பாத்திய எனவும், செய்யுள் மருங்கின் எனவும் விதந்து கூறுமிடங்கள் தவிர்த்துப் பிற யாவும் இருவகை வழக்கிற்கும் உரியன என்றே கொள்ள வேண்டும்.

இருவகை வழக்கிலும் உலகமக்கள் வழக்கே முற்பட்டது என்பதை நிலைநாட்டுகிறார். உலகவழக்கு என்பதற்காக, சிதைவுகளை எல்லாம் ஏற்கவில்லை; உயர்ந்தோர் வழங்கிய உயர்ந்த - சிறந்த - ஊறுசெய்யாத வழக்குகளையே ஏற்றார் என்பனவும் பெறப்பட்டன.

## பொதுச் சொத்தும் தமிழனும்

மொழி - என்பது பொதுச்சொத்து. பொதுச்சத்திரம், பொதுமடம், பொதுக்கழிப்பறை போன்றது. தமிழன் தன் வீடு, குடும்பத்தை மிக நல்ல நிலையில் வைத்துக்கொள்வான். பொது இடங்களைக் கெடுப்பது, தூய்மை குலைப்பது, தன்னல வேட்டையாடுவது, சிதைப்பது என்பதில், உலகிலேயே தமிழரைப்போலக் கேடுகெட்டவர் வேறு எவருமிலர்.

சிங்கப்பூர் போலக் கடும் சட்டங்கள், தண்டனைகள் தேவைப்படுகின்றன.

அமெரிக்கா, ஐரோப்பா போலும் நாடுகளில் விதிகள் கடுமை. அதனால் மக்கள் தாமே பழக்கப் படுத்தப்படுகின்றனர்.

பொது இடத்தில் சிறுநீர் கழித்தல், குப்பை கொட்டுதல், ஒரு தாளைக் கிழித்துப்போடுதல், எச்சில் துப்புதல், அங்கு அரிது, இயலாது, கூடாது. சட்டம் கட்டுப்படுத்திப் பழக்கப்படுத்துகிறது.

ஒரு மொழிக்கும் இது பொருந்தும். இங்கும் இலக்கணம் ஏன் வேண்டும் என்றால், காட்டாற்றுக்குக் கரை ஏன் வேண்டும் என்று எதிர்த்துக் கேட்கிறார் ஒரு கவிஞர். (முடியரசன் கவிதைகள்.)

ஆங்கிலம் - வரன்முறைப்படுத்தப்படுகிறது.

நாம் அதைப் பின்பற்ற வேண்டும். ஆங்கில மொழியில் ஆயிரம் குறைகள் உள. அவை 'மரபு' பற்றியன. அவற்றை அவர்கள் மாற்றுவதில்லை; சிலர் மாற்ற முயன்றும் தோற்றனர்.

தமிழக ஊடகங்கள் செவ்வியல் தமிழைப் பேணுவதில்லை. பில்டிங்கில் - என்று போடும். சிட்டிபீட் - ஓர் இதழின் தலைப்பு - நகர் வலம் விளங்காதாம். ஓரிதழ் ' கிரைம் பிராஞ்ச் ' என்று போடுகிறது. புதிசு கண்ணா புதிசு - அவ்வளவு நன்றாக இல்லையாம் - பெஸ்டு கண்ணா பெஸ்டு - தொலைக்காட்சிக்கு அதுவே இனிக்கிறது. கலக்கலான ஈவினிங் பேப்பர் - இவனுக்கு இங்கிலீசு தெரியுமாம்!

தமிழகச் சினிமாக்காரர்கள், தமிழ்க்கொலைகாரர்கள். அவர்கள் மாந்தரினப் பண்பாட்டைச் சீர்குலைப்பது கூடுதலா? மொழியைக் குலைப்பது கூடுதலா? - ஒரு பட்டிமன்றமே நடத்தலாம்!

ரன், மஜா, பாட்சா, இன்னும் என்ன என்னவோ?

மக்கள் பெயர்கள் வாய்க்கு விளங்கா; பொருளற்றவை.

மக்களிடம் கூடுதலாகச் சென்று சேரும் திரைகள் - திரைப்படம், சின்னத்திரை - இரண்டும் மக்கள் வாழ்வையும் கெடுத்து, மொழியையும் கெடுத்துப் பாழடிக்கின்றன. தொல்காப்பியர் உயர்ந்தோர் வழக்கை ஏன் ஏற்றார் - இதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

மீண்டும் வி.கோ. சூரிய நாராயண சாத்திரியாரையும், கால்டுவெல்லையும் காண்போம். 'பாஷை வேறுபடுமாறு' - எனும் தலைப்பில், அவரது தமிழ் மொழியின் வரலாற்று நூலில் எழுதியுள்ளன அனைத்தும் மீண்டும் நினைத்துப்பார்க்க வேண்டியன.

பேச்சுவழக்கிலுள்ள ஓர் உயிருள்ள மொழி, வேறுபட்டுக் கொண்டேதான் இருக்கும்.

செத்த பிணம் மாற்றமடையாது போகலாம். அதை 'அடக்கம்' செய்துவிடுவர். இறந்துபோன, பேச்சுவழக்கற்ற மொழிகளில், புதியன புகா.

தமிழில் பிறமொழிச் சொற்கள் புகுவது, அஃது உயிருள்ள மொழியாக இருப்பதனாலேயாம்.

'தமிழும் பேச்சுவழக்குள்ளதோர் சிறப்புடைப் பாஷையாமர்தலின், இஃதும் வேறு பட்டியங்குவது நியாயமே. அவ்வாறே யாரென்ன தடுத்த போதிலும், தமிழ்ப் பேராறு தனக்கெதிருள்ள தடைகள் அனைத்தையும் உந்தியெறிந்து சுழி கொண்டு விளையாடிச் செல்லா நின்றது.'

இவ்வாறு எழுதும் பரிதிமாற் கலைஞர், தமிழ்ப் புலவர்கள் மக்கள் வழக்கில் ஏற்படும் திரிபுகளைக் களையவும், பிறமொழிச் சொற்களைத் தமிழ் மொழி வடிவப்படுத்தவும் எடுத்த முயற்சிகளை நன்கு விளக்குகிறார்.

மக்கள் வழக்கைப் பின்பற்றுவதாகக் கூறுபவர்கள், தமிழுக்குக் கேடு சூழ்கின்றனர்.

" இனிப் பொச்சாப்புக் காரணமாகவும் சோம்பல் காரணமாகவும் மக்கள் சொற்களைத் தக்கபடியுச்சரியாமையால்,அவை தம்முடைய முன்னை உருவம்குலைந்து சிதைகின்றன. மிகவும் நீளமான சொற்களை மக்கள், காலச் சுருக்கமும் முயற்சிச் சுருக்கமும் கருதிக் குறுக்கியும் மாற்றியும் வழங்குதலால் அவை தம் முன்னுருவத்தினின்றும் வேறுபடுவனவாகின்றன."

மேலும், தமிழ்ப் புலவர்தம் முயற்சிகளைச் சாத்திரியாரே மிக விளக்கமாக எழுதியுள்ளார்.

இவ்வாறு நிகழ்கின்ற வேறுபாடுகள் நிகழவும் வேண்டும். அவ்வேறுபாடுகள் அளவிறந்தனவாகாமல் அடக்கவும் வேண்டும்.

ஆதலாற் பாஷையின் வேறுபாடுகளை அடக்குதற் பயன்கருதியே இலக்கணங்களேற்பட்டன.

காலந்தோறும் தமிழ்ப் புலவர்கள், மொழியின் இயக்கம் பற்றிய அனைத்தையும் நன்கு அறிந்து, போற்றிக் காத்து வளர்த்து வந்ததனாலேதான், தமிழ் இன்றளவும் நின்று நிலவுகிறது.

மருத்துவர்கள் பல வகைப்படுவர். பல் மருத்துவர் பொது மருத்துவம் பாரார். அவ்வத்துறை வல்லுநர்களிடமே அவ்வத்துறை பற்றிய பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

ஓரிடத்தில் பரிதியார்,"தமிழ்ப்புலவராவார் எதற்கும் அசையாது, தங்கள் தமிழ்மொழியின் போக்கையே தழுவிச் செல்வாராயினார்" என (ப .34) எழுதுவதை மறத்தல் கூடாது.

> கால்டுவெல் கருத்து : ' திராவிட மொழிகள் அனைத்திலும் மிகவும் திருந்திய பண்பட்ட நிலையிலுள்ள தமிழ்மொழியோ, வேண்டு மென்றால், வட சொற்களை அறவே அகற்றித் தனித்தியங்கும் ஆற்றல் வாய்த்திருப்பதோடன்றி, அவற்றின் உதவி இல்லாமல் மிகவும் மேம்பட்டு, வளமுற்று மிளிரும் ஆற்றலும் வாய்ந்ததாகும்.'
>
> (மேலது. ப. 66 )

பழந்தமிழ் நூல்கள் செந்தமிழ் நடையைப் பேணி வந்தன. பேச்சு வழக்கினர் இதில் கருத்துச் செலுத்தவில்லை. எனினும் பிறமொழிக்கலப்பு, கொச்சை நடைநூல்களைப் பெரிதும் தமிழர்கள் தாழ்வாகவே மதித்தனர். சிறந்த தமிழ் நடையுடன் கூடிய நூல்களுக்கே மதிப்புக் கொடுத்துவந்தனர். இதனாலேயே தமிழ்மொழி இன்றளவும் நன்கு காப்பாற்றப்பட்டு வந்துள்ளது என்பதையும் கால்டுவெல் மிகவும் சிறப்பாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

முன்பு வட்டாரப் புதினங்கள், கதைகள் எழுதியவர்கள் தாம் எழுதும்போது ஒரு பொதுத் தமிழையே போற்றினார். உரையாடல்களிலேதான் வட்டாரத்தமிழ், குலமுறைத்தமிழ் ( அம்மாமித் தமிழ், பிற குடிமக்கள் பேச்சுத்தமிழ் ) இவற்றைப் பயன்படுத்தினர்.

தோப்பில் முஹம்மது மீரானின் 'துறைமுகம்' நாவலில் வரும் உரையாடல்கள்:

- எந்த ஊரு -
- காஞ்சரப் பள்ளி
- தங்களா? மொய்லியாரா?
- சாதாரண ஆளு. ஸ்ஃபராளி
- தலெயில என்ன?
- இது சுன்னத்து முடி
- எந்த முடியும் இந்த ஊருலெ வக்கப்படாது
- சுன்னத்தும் இன்னத்தும். இந்த ஊர்ல முஸ்லிம்களு மொட்டத்தான் அடிக்கணும்.
- வலிய வலிய தங்ஙம் மாரும மொய்லீ யாக்கமாரும் உள்ள ஊரிது. இதெல்லாம் ஒங்க ஊர்ல. இஞ்ச இரிக்கணுமா.நாளெ காலத்தெ

முடிகளஞ்சு வலியாத்தலே போயி குளிக்கணும். இல்லேண்ணா
காரு ஏறணும். மனசிலாச்சா? மொதலாளி மாரெல்லாம் இப்பம்
அஸரு தொள வார நேரம். உம்ம மண்டையெ அவங்கட்டே
காட்டப்படாது?' . . . இது ஹராமில்லே

இப்படிப் பல நூறு பக்கங்கள். ஆங்கிலத்தில் நோபல் பரிசு பெற்ற நாவல்கள் கூட உள. இப்படி எழுதும் புதினங்கள் இல்லை. சிலபோது சாய்ந்த எழுத்தில் போடுவர்; சில குறியீடுகளுடன் எழுதுவர்.

காளிதாசரும் சாகுந்தலத்தில் மீனவர் பேச்சை, கிரந்தத்தில் எழுதிக் காட்டுவார். மறைமலையடிகள் அதைமட்டும் பேச்சுத் தமிழில் எழுதுவார். ஆனால், இப்படி எழுதிப் படித்தால், தமிழ் இருந்த இடம் தெரியாமல் போக வாய்ப்புளது. ஒலித்திரிபு, கொச்சை, பிழைவழக்கு எல்லாம் நாடகத்தில் நடிக்க மட்டும் படலாம். அதையே எழுதினால் சில வரன் முறைகள் வேண்டும்.

அதெல்லாம் வேண்டாம. நான் துடைச்ச
வெளிச்சத்தில் படிச்சு, அதே மாதிரி
ப்ரைட்டா மார்க்கை வாங்கு. Brightன்னா
அர்த்தம் தெரியு மோன்னோ?

ஆனால், அந்த Brightness க்கு என்னால்
மார்க்கு வாங்கமுடியாது. . .

பிள்ளையாண்டான் இன்று லேட்டாகத்
தான் வந்தான். ஆபீஸ் சகா ஒருத்தன் இன்று,
காலை ஆபீசுக்கு வந்த நிமித்தத்தில்

எலெக்ட்ரிக் ட்ரெயினில் விபத்து
ஆனதாகத் தகவல் வந்து, ஆபீஸிலிருந்து
ஒரு பாட்ச் அவனைப் பார்க்கப்
போயிருந்ததாம் . . .

இது லா.ச.ரா.வின் சிந்தாநதி. இப்படி நூற்றுக்கணக்கில் ஆங்கிலம் அப்படி அப்படியே.

- பய்யன்னா, யாருடா அந்த ரண்டு
பேரும்? என்று கேட்டார் கோட்டையார்.
- அது அந்த மேலூரானுக்குப் பெண்
டாட்டியின் உடம்பிறந்த மச்சுனங்கள்தான்
ரண்டு பேருமே.

- ஆங். அப்பிடிச் சொல்லு. சம்மந்தகாரங்க
வந்துதான் ஒதவணும் என்றார் கோட்டை.

- கடல்ல முத்துக்குளிக்கிறப்பொ, மேலே
கயிறு பிடிக்கிறது எப்பவுமே சம்மந்தகார
னாகத்தான் இருப்பானாம், என்றார்
சிம்மம்.

- ஆமா. பின்ன, தாயாதிக்காரன் பிடிச்சா
அம்புட்டுத்தான். கயித்தை எங்க இழுப்பான்;
சாகட்டும் பயண்ணு விட்டு வச்சிருவான்!
என்று சொல்லிச் சிரித்தார் பய்யனாசாரி.

(ரெப்பி, ஒன்றிராண்டு, ராட்டு, எளவு, சிருப்பானிகளுக்கிடையே -
இவை ஆசிரியர் வசனம்)

இவை கி.ராஜநாராயணனின் 'கோபல்ல புரத்து மக்கள்', நாவல். இவரை விகடர்கள் பரிசு கொடுத்துக் கொண்டாடவே, மேலும் மேலும் கொச்சையாக்கிப், புகழ்பெற்றார். 'கரிசல் காட்டுத் தமிழுக்கு அகராதி' போட்டார். சங்க இலக்கியம், சிலப்பதிகாரத்துக்கு அகராதி பார்த்துப் படிப்பது கடினமாம். இவர் நாவலை அகராதி வைத்துப் படிக்கலாமாம். இவர் தெலுங்கர். தமிழிலிருந்து ஒரு மொழி தனியே பிரிந்து போனதற்கு, எத்தனை ராஜ நாராயணர்கள் காரணமோ, நாம் அறியோம்.

உடனே பின்வரும் ரஸமான சம்பாஷணையும் ஆரம்பமாயிற்று.

'ஸினிமாவாம் ஸினிமா? போயும் போயும் பொறுக்கி எடுத்து அழைச்சுண்டு போனேளே! சவரணைதான்! யாரோ கட்டேலே போறவனும் கட்டேல போறவளும் நின்னுண்டு வாயிலே வந்ததைக் கன்னா பின்னான்னு பேசுகிறதாம்; அதை எல்லாரும் பார்த்துண்டு வாயைப் பிளந்துண்டு உட்கார்ந்திருக்கிறதாம். உங்களுக்குத்தான் புத்தி போச்சே! . . .

இது கல்கியின் 'ஸினிமாக் கதை'ச் சிறுகதை. ஆயினும், கதை கூறும் போது அவர் தமிழைச் சிதைப்ப தில்லை.

'இது என்ன?' என்று அந்தச் சிறுமியைக் காட்டிக் கேட்டேன்.

'பாக்கிய அம்மாவிடத்தில் படிக்கும் பெண். கடைசி வீட்டுப்பெண். நானும் இப்போது அக்காவின் தொழிலைச் செய்யக்கற்றுக்கொள்கிறேன்.

என்ன செய்வது?' என்று, வேதனையோடு கலந்த புன்சிரிப்பை மேற்கொண்டாள்.

'இருக்கட்டும். அப்பாவும் இருக்கிறாரா?' என்று வருந்தியவாறே கேட்டேன்.

'அதே வீட்டில்தான் இருக்கிறோம். அங்கே இருக்கிறார்' என்றாள்.

உள்ளே நுழைந்ததும் காக்கி உடை உடுத்த ஒரு சிறு பையன் குறுக்கே நிற்பதைக் கண்டு வியந்தேன். 'அடே யாரடாசிப்பாய்?' என்றேன்.

கற்பகம், என்பின் வந்தவள், 'திருவாய் மொழி' என்றாள்.

உடனே, 'என் மருமகனா? அடடே' என்று அவனைத் தூக்கித் தோள்மேல் வைத்துக் கொண்டேன்.

என் குரலைக் கேட்டதும் கயற்கண்ணி, பால் குடிக்கும் குழந்தையுடன் எட்டிப் பார்த்தாள்.

'மாதவி என்ன செய்கிறாள்?' என்றேன். 'அப்பா எங்கே என்று கேட்கிறாள்' என்றாள் கற்பகம்.

'இல்லை இல்லை. அப்பா வந்தால்தான் பேசுவேன் என்று அடம் பிடிக்கிறாள்' என்றாள் என் மனைவி.

'நீ ஒன்றும் அடம்பிடிக்காமல் இருந்தால் போதும்' என்றேன்.

இது மு. வ. வின் அகல்விளக்கு.

தமிழ் இருவழக்கு மொழியாக இருப்பதால் தீங்கு வந்ததோ? அவ்வாறானால் எல்லாவற்றையும் ஒரே வழக்காக மாற்றிவிடலாமா? எந்த வழக்காக மாற்றுவது? பேச்சுவழக்காக மாற்றிவிட்டால் போகிறது.

அப்படி மாற்றினால் கடற்கரைத் துறைமுக வழக்குத் தனியே பிரியும். கரிசல் தமிழ் தனியே போகும். அம்மாமித் தமிழ் தனிப்படும்.

வட்டாரத் தமிழ் நூறாகப் பிரியும்; தமிழ் என்ற ஒன்று அழியும். இதனால்தான் கன்னடமும் களி தெலுங்கும் மலையாளமும் பிரிந்தன.

இந்தியநாடு முழுவதும் ஒரே தமிழாக இருந்தது போய், வடமொழி வரவே, ஒரு சில வடமொழிப் பாகதங்களாயின; தெற்கே பல மொழிகள் தமிழின் வழிமொழிகளாகிப் பிரிந்து போயின.

இன்று 'வடவேங்கடம் தென் குமரியிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' மட்டுமன்றி, யாழ்நாட்டுத் தமிழ், மலேசியத் தமிழ், சிங்கப்பூர்த் தமிழ் எனப் பிரியவும் வாய்ப்புகள் நேரும்.

இன்று வேறுவகைத் தீங்குகளும் தமிழுக்கு வந்துள. நாட்டுப்புறவியல் தமிழை முன்பு இலக்கியத் தமிழாக மாற்றினர். சங்ககாலம் முதல் இது நடந்தது. நாட்டுப்புற வடிவம் இலக்கிய வடிவமானது.

நாட்டுப்புற வடிவம் கேட்க மட்டுமே பயன் பட்டது.

அதனை எழுத்துவடிவம் ஆக்கும்போது, பொதுத்தமிழ் - தரமுள்ள பேச்சுத் தமிழ் - கட்டளை மொழி - செந்தமிழ் நடை என மாற்றினர்.

ஏட்டு வழக்கில், எழுத்தில், இலக்கியத்தில் கொச்சைப் பேச்சுத் திரிபு வடிவங்கள் புகாமல் தடுத்தனர். அவை புகவே முயலும். எனினும், முடிந்த வரை தடுத்து அடக்கி ஆண்டனர்.

குருவி - குரீஇ, மருவி - மரீஇ. சோழநாடு - சோணாடு. மலைநாடு - மலாடு. வாழ்நன் - வாணன். இவ்வாறு சிற்சில அரிதிற் பரவின.

இன்றோ நாட்டுப்புறப் பாடல்களை எழுத்தில் எழுதி, அச்சியற்றி, ஆயிரக்கணக்கில் பரப்பிக் குழப்புவதால், எழுத்துமொழி பாழாகி வருகிறது.

ஏற்றப்பாட்டு

புள்ளய வாரும் புள்ள பெருமாளே
என் புள்ளை பெருமாளே ஒன்ன
தொடவேணும்
ஒன்ன தொடவேணும் என்ன மலையாள
என்ன மலையாள இளைய பெருமாளே!

இப்படி நூறுபாடல்கள், நூற்றுக்கணக்கான நூல்கள் வந்துவிட்டன. பல இடம் விளங்குவதில்லை.

நாட்டுக் கோட்டையார் - நகரத்தார் வீட்டுப் பெண்கள் பாடும் தாலாட்டும் ஒப்பாரியும் இலக்கியத் தரம் உடையவை. வாழ்வரசியாக இறந்துபோன தங்கள் தாயைப்பற்றி, பெற்ற மகள்கள் பாடும் ஒப்பாரி ஒன்று. முனைவர் பழ. அன்புமீனாள் தொகுத்தது. 'பொங்குதே கண்ணீரு' நூல்.

வாவரசி வாவரசி
என்`சமத்தி மாதா
மதிப்பான வாவரசி
அஞ்சு தலமொறைக்கும்
பவுரான வாவரசி

தூரவருவார்க்கும்
துலக்கமுள்ள வாவரசி
எட்ட வருவார்க்கும்
எடுப்பான வாவரசி
தொலைப்பயணம் போவார்க்கும்
துலக்கமுள்ள வாவரசி

மாசமத்தி மாதா
மாலைக் கழுத்தி
மடிநெறஞ்ச பூக்காரி
மல்லியப்பூ வாசமுள்ளாள்

பெருஞ்சமத்தி மாதா
தாலிக் கழுத்தி
தலைநெறஞ்ச பூக்காரி
தாழம்பூ வாசமுள்ளாள்

..

தள்ளியிரு என்னாத
தருமருக்கு வாழ்ந்திருந்தா
தருமருக்கு முன்போகத்
தவங்கள் மெத்தச் செய்திருந்தா
அடைசி இசை என்காத
அருச்சுனருக்கு வாழ்ந்திருந்தா
அருச்சுனர்க்கு முன்போக
அநேக தவம் செய்திருந்தா
விலகியிரு என்காத
வீமருக்கு வாழ்ந்திருந்தா
வீமருக்கு முன்போக
வெகுதவங்கள் செய்திருந்தா

மகுரமக்கள் கண்டிருந்தா
மாத்திமஞ்சன் பெத்திருந்தா
போதமக்கள் கண்டிருந்தா
பின்னி மஞ்சன் பெத்திருந்தா

போதாக் குடியைப்
பெருகவச்சா சித்திரமா
பத்தாக் குடியை
மகுரவச்சா சித்திரமா
அறுந்தா குடியை
ஆளவச்சா சித்திரமா

இப்படியே வாழ்வரசியாக இறந்துபோன தாயை, அவள் மகள் பாடுவன, இலக்கியத் தரம் மிக்கவை. ஆனால், அப்படிப் பாடி இருக்கலாம். அது ஒலி வடிவில் இருக்கலாம். பேச்சு நடையாகப் பாடப் படலாம்.

ஆனால், அதை அப்படியே எழுதும் பழக்கம் தமிழில் இருந்ததில்லை; இருக்கக்கூடாது. இதைப் படித்துப் படித்துப் பிழைபட்ட கொச்சை வழக்கை நாடியே மனம் போகும்.

இவை கூடியவரை தவிர்க்கப்பட வேண்டும். சில வரன் முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு, பரிதிமாற் கலைஞர் கூறுவதுபோல, அடக்கப்பட வேண்டும்.

எழுதுவதுபோல் பேசுவதில்லை. அதுபோலப் பேசுவது போல் எழுதக்கூடாது.

தமிழுக்கு இன்று நேர்ந்துள்ள இடர்ப்பாடுகள் மிகப்பல. அவற்றினின்றும் தமிழைக் காக்க வேண்டும்.

## தமிங்கிலம்

அன்றாட நடைமுறை வாழ்வில் தமிழ் படும் பாட்டை, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், 'தமிழனா தமிங்கிலனா' - எனும் நூலில் மிக விரிவாக எழுதியுள்ளார்.

தமிழன்
சிட்டியில் காலனியில் அபார்ட்மெண்டில் பிளாக்கில் ப்ளோரில் - டோர் நம்பரில் குடியிருக்கிறான்.
தமிழன்
மம்மியும் டாடியும் அங்கிளும் ஆன்டியும் பேபியும் ரிலேட்டிவ்சும் பிரண்சுமாக வாழ்கிறான்.

தமிழன்

டுத் பேஸ்ட்டால் பிரஷ் ஆல் பல் தீட்டுகிறான். ஹெயர் ஆயிலை கிரீமை தலைக்கு வைக்கிறான். பவுடரை, பேஸ் கிரீமை முகத்தில் இடுகிறான். பிளேடால் சேவிங் ரேசரால் முகமயிர் மழிக்கிறான். சர்ட்டை பாண்டை உடலில் அணிகிறான். சாக்சை ஷூசை காலுக்குப் போடுகிறான்.

தமிழன்

ஸ்டோரிஸ் நாவல்ஸ் படித்து - சோங்ஸ் மியூசிக் கேட்டு - டான்ஸ் ட்ராமா பார்த்து - சினிமா டி.வி. வைத்து மகிழ்கிறான்.

தமிழன்

கடையில் 'பில்' கேட்கிறான். மருத்துவ மனையில் டோக்கன் கேட்கிறான். பேருந்தில் டிக்கட் கேட்கிறான். பால் விற்பனை நிலையத்தில் கார்டு கேட்கிறான். தமிழ்நாட்டு வீடுகளில் வெள்ளைக்காரனா திருட வருகிறான்? திருடனை விரட்ட வீட்டு வாசலில் Beware of Dogs என்று ஆங்கிலத்தில் எழுதிவைக்கிறான் தமிழன். (பக். 46, 47)

...

நாம் பயன்படுத்தும் பொருள்களின் பெயர்கள் அனைத்தும் பிறமொழிகள், ஆங்கிலம். சப்பான்காரன் தான் உற்பத்தி செய்யும் கார்கள் முதல் அனைத்திற்கும் முதலில் சப்பானிய மொழிப்பெயரையே வைக்கின்றான். தமிழர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குத் தமிழ்ப் பெயரே இடுவதில்லை. வெடிப்பட்டாசுகளின் பெயர்கள்கூட ஆங்கில மயம். நெல்கூட ஐ ஆர் இருபது.

## காட்டாற்றுக்குக் கரை கட்டவேண்டாமா?

தமிழுக்கென்று சில இயல்புகள் இருக்கின்றன. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்வது. கம்பர் சீதா என்னாது சீதை என்பார்; ராமர் என்னாது இராமர் என்பார். இன்று ராம் ஆக்குவர்; சாசுவதம் இன்று ஷாஸ்வத் என்றே தமிழிலும் ஒலிக்கப் படுகிறது. விசுவாசம் போய், விஸ்வாஸ் ஆகிவிட்டது. விசுவநாதன் போயே போனான்; விஸ்வநாத் ஆகிவிட்டான். வைத்யநாத், வெங்கட், முகுந்த் (முகுந்தன்), கணேஷ் (கணேசன்) எனத் தழிழல்லா ஒலிப்புகளிலே, தமிழன் மகிழ்கின்றான்.

வட்டார ஒலித்திரிபு வழக்குகள் பற்றிய, மு.வ அவர்களின் கருத்தொன்றும் இங்கு நினைத்துப் பார்க்கத்தக்கது. வட்டார வழக்குகள் வேறு படுகின்றன.

"இருக்கிறது என்ற சொல் சில வகுப்பினரால் இருக்கு என்றும், வேறு சில வகுப்பினரால் இருக்குது என்றும், படிப்பு வாசனை இல்லாச் சிலரால் கீது என்றும் ஒலிக்கப் படுகிறது. செய்துவிட்டார் என்பதன் பேச்சு வடிவங்கள் செய்துட்டார், செய்ஞ்சிட்டார், சேஞ்சிட்டார், செஞ்சிபுட்டார் முதலியனவாக உள்ளன. எடுத்துக் கொண்டான் என்பது எடுத்துக்கினான், எடுத்துக்னான், எடுத்துக்கிட்டான் முதலியனவாக ஒலிக்கப்படுகிறது."

(தமிழ் இலக்கிய வரலாறு, பக். 15)

பேச்சுத் தமிழிலும் பலவகை உண்டு. மேலே கண்டவை ஒலித் திரிபுகள். யாழ்ப்பாணத்தார் பேசும் போது ஒருவகைக் குரல் அழுத்தம், பண்ணிசைபோல் நீட்டி ஒலித்தல் இனிமையாக இருக்கும். யாழ்ப் பாணத்தார் பேசுந்தமிழே தனிவகை. அதில் ஒரு செப்பமும் இனிமையும் கலந்திருக்கும். சென்னைத் தமிழை, திருநெல்வேலித் தமிழுடன் ஒப்பிட்டு, அவை ஒலிக்கப்படும் உச்சரிப்பு முறை வேறுபாட்டைக் கண்டால், வியப்பும் திகைப்பும் ஏற்படலாம்.

எனவே, பேச்சுத்தமிழ் காட்டாறு போன்றது. அது கட்டுப்பாடற்றது; கழிவுநீர் கலப்பது; கண்டன கடியனவெல்லாம் காணப்படுவது.

வேண்டாத இடங்களிலும் ஆங்கிலம் கலக்க வேண்டுமா? நமது திரைப்பட நடிகைகள் முதல், மற்ற பேச்சாளர் வரை தங்களுக்கு ஆங்கிலம் தெரியும் என்று காட்டிக் கொள்ளவே, அதைக் கலந்து பேசுகிறார்கள். அப்பொழுதுதான் படித்தவர்கள் என்ற மதிப்பு ஏற்படுமாம்.

சமையல் கற்றுக் கொடுக்கிறார்கள், சில தொலைக்காட்சிகளில். அதில்கூட டொமாட்டோ, ரைஸ், ஸால்ட், பெப்பர், குவான்டிட்டி, ஸ்பூன் இன்னும் என்னென்னவோ?

மு. அருணாசலம் தமது 'இன்றைய தமிழ் வசன நடையில்' தரும் ஓர் உதாரணம்:

"நண்பன் சோமுவை அன்றைக்கு டின்னருக்கு இன்வைட் பண்ணியிருந்தேன். பர்டிகுலரா அன்றைக்கு என்குக் ஆப்ஸெண்ட் ஆகிவிட்டான். நான் எப்படி மானேஜ்பண்ணுவேன்? அவரும் டயத்துக்கு பங்சுவலாக வந்துவிட்டார். வெல்கம்பண்ணாமல் என்ன செய்வது? ஹோட்டலிலேயிருந்து மீல்ஸ் ஆர்டர் பண்ணி யிருந்தேன். ஹோட்டல்காரன் கொஞ்சம் லேட் பண்ணிவிட்டான். அதனாலே ஸெர்வெண்டை அனுப்பி க்விக்கா வரச் சொன்னேன்.

இதற்குள்ளே சோமுவும் நானும் எத்தனையோ ஸப்ஜெக்ட்ஸ் டிஸ்கஸ் பண்ணினோம்."

இவ்வாறு மேலும் ஒருபக்கம் வரை, இந்த Manyப்பிரவாளம் பேசப்படுவதை எடுத்துக்காட்டுகிறார்.

மேலும் அவர் காட்டுவன : "சாதாரண பேச்சு நடைக்கு உதாரணம். இன்வைட் பண்ணி, மானேஜ்பண்ணி, ஆர்டர் பண்ணி, வெல்கம் பண்ணி, லேட் பண்ணி, டிஸ்கஸ் பண்ணி, பிரிண்ட் பண்ணி, பப்ளிஷ் பண்ணி, இன்டெரெஸ்ட் பண்ணி, பே பண்ணி, எஜுகேட் பண்ணி, க்ளீன் பண்ணி, ப்ரேக் பண்ணி, ஸெர்ச் பண்ணி, வாஷ் பண்ணி - பதினைந்து பண்ணிகள்! எனவே, பேச்சுத் தமிழைப் 'பண்ணித் தமிழ்' என்று கூறலாமல்லவா?" (பக். 157 - 159)

இன்று மேன்மேலும் தமிழ் சீர்குலைக்கப் படுகிறது. மேலே கண்டதை எழுதி, ஐம்பதாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன.

## உலக வழக்கு : நல்ல கூறுகள்

பேச்சுத் தமிழிலுள்ள சில நல்ல கூறுகளையும் சிந்திக்க வேண்டும்.

முழுச் சொற்களாக வழங்கும் திசைச்சொற்கள். தொல்காப்பியர் 'திசைச்சொல்' என்று குறிப்பிடுகிறார். அவர் காலத்தில் கட்டளை மொழியாகிய செந்தமிழ் இயற்சொல் எனப்பட்டது. ஆங்கிலத்திலும் பல திசை வழக்குகள் இருந்தன. ஆக்சுபோர்டை ஒட்டியதே, கட்டளை மொழியாகி, எழுத்திலேறி, செல்வாக்குப் பெற்றது. இங்கும் செந்தமிழ் வழங்கியது பாண்டிய நாடே என்பர். செந்தமிழ் நிலம் சேர்ந்த, பன்னிரு நாடுகளில் திசை வழக்குகள் வழங்கின. அவை

| | |
|---|---|
| 1. பொதுங்கர் நாடு | 7. சீத நாடு |
| 2. தென்பாண்டி நாடு | 8. பூழி நாடு |
| 3. ஒளி நாடு | 9. மலை நாடு |
| 4. குட்ட நாடு | 10. அருவா நாடு |
| 5. பன்றி நாடு | 11. அருவா வடதலை நாடு |
| 6. கற்கா நாடு | 12. குட நாடு |

இவ்வாறு இளம்பூரணர் குறித்துள்ளார்.

"தென்பாண்டி நாட்டார் ஆவினைப் பெற்றம் என்பர்; சோற்றைச் சொன்றி என்பர்; குட்ட நாட்டார் தாயைத் தள்ளை என்பர்; குடநாட்டார்

தந்தையை அச்சன் என்பர்; கற்கா நாட்டார் வஞ்சரைக்கையர் என்பர்; வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்பர்; பூழி நாட்டார் சிறு குளத்தை பாழி என்பர்; பன்றி நாட்டாரும் அருவா நாட்டாரும் செறுவைச் செய் (வயல்) என்றும், சிறுகுளத்தைக் கேணி என்றும் கூறுவர்; அருவா வடதலையார் புளியை எகின் என்பர்; சீத நாட்டார் தோழனை எலுவன் என்றும், தோழியை இகுளை என்றும் வழங்குவர். (நன்னூல்: 273)

இவ்வாறே எண்ணிப்பார்த்தால், ஆயிரக் கணக்கான வட்டார வழக்கு முழுச் சொற்கள் உள்ளன. நகரத்தார் (காரைக்குடி) சளிப்பிடித்தலைத் 'தடுமன்' என்பர். வளி (வாயு), சூடு (பித்தம்), குளிர்ச்சி (சீதளம்) என்ற மூன்றும் உடம்பில் அளவாக இருக்கவேண்டும். சீதளம் தடித்துப் போனதையே 'தடுமன்' என்றனர். ஒரு மங்கல நிகழ்ச்சியை 'அனுவல்' (Function) என்பர்.

"இலங்கையில் பேசப்படும் தமிழில் சில சொற்களுக்குப் பொருளே வேறுபடுகிறது" என்று காட்டுவர் மு.வ. (இ. வரலாறு 15) ஆறுதலாக - அமைதியாக, காலதாமதமாக. பேசுதல் - கதைத்தல். திருமணம் - சடங்கு. நிறைய - கனக்க. நன்றாக - வடிவாக.

நாடுமுழுவதும் மட்டுமன்றித் தமிழ் தழுவிய மலையாளம் முதலான பிறமொழிகளிலும் மற்றும் குலம்தோறும் வழங்கும் வட்டார வழக்கு முழுச் சொற்கள் பல ஆயிரம் உள. உறவுப் பெயர், குடிவழிப் பெயர், மக்கட் பெயர்களிலும் வட்டார வேறுபாடு உண்டு.

தொழிற் கலைச் சொற்கள் - முழுச்சொற்கள் ஆயிரக்கணக்கிலுள. நம் கட்டடக் கட்டுமானத் தொழில், கட்டட உறுப்புகள், கோயிற் கலைகள், சிற்பத் தொழில் முதல் குயவர் வண்ணார் கூடைமிடைவோர் ஈறாக, உழவுப் பெருந்தொழில் உட்பட வழங்கும் சொற்கள் வாய்மொழிகளாகவே இருந்து மறைகின்றன. தொழில் வல்லுநர்கள் எழுதிவைத்து வேலைசெய்யாமல், குலத் தொழிலாகத் தந்தை மகனுக்கு என இவ்வாறு காலம் காலமாக வாய் மூலமே வழங்கி வருகின்றனர்.

## மூலச்சொல் வாழவேண்டும்

வட்டார ஒலித்திரிபும் பிழைவழக்கும் குறுமொழிகளுமே பெரிதென்பார், முன்னைய செல்வத்தை அறியார்.

விளையாடுறானுங்க, விளையாடுறானுக, விளையாட்றாங்க, விளையாடுறாங்க, வெள்ளாட்றாங்க - என இவ்வாறு பல திரிபுகள் உள.

ஆயினும், விளையாடுகிறார்கள் என்ற பொதுச்சொல், எழுத்தில் இருக்கும் வரைதான் இது பிரிவுபடாமல் எல்லோர்க்கும் ஒரு தன்மையதாக விளங்கும். மூலச்சொல் - பொதுச்சொல்.

நாம் இம் மூலச்சொற்களை இழந்துவிட்டால், தமிழ் எனும் மொழியை இழந்துவிடுவோம்.

கடந்த நாலாயிரம் ஆண்டுகளாக எத்தனையோ மாற்றங்கள்; புறத்தாக்குரவுகள். இவை அத்தனையையும் கடந்து தமிழ் 'என்றுமுள தென்தமிழாய்' இருப்பதற்கு இம்மூலப் பொது வடிவத்தை, நாம் எழுத்தில் காப்பாற்றி வந்ததே காரணமாகும்.

ஓடினான் - ஓடு - இன் - ஆன்

அறிஞன் - அறி - ஞ் - அன்

தேடி - தேடு - இ

கூடம் - கூடு - அம்

எழுதிக்கொண்டிருக்கின்றனர் - எழுது - கொண்டு - இரு - க் - கின்று - அன் - அர். எழுது - எழுதி எனத்திரிந்தது.

தமிழை இப்படிப் பிரித்துப் பார்க்குமளவு சொற்கட்டமைப்பு இருக்கிறது. ஆனால், தமிழ்ச் சொற் கட்டமைப்பு, பேச்சில் சிதைந்து உருக்குலைந்துவிடும்.

ஓடுகிறான் - ஓட்றான், ஓடுறான், ஓடறான். எழுதச்சே - எழுதும் சமயத்தே. பேச்சில் இப்படிச் சுருக்க முடிகிறது. உலக மக்கள் ஒவ்வொருவர் வரையிலும் கூடப் பேச்சில் வேறுபடும்; சிதைவுறும்; ஒலிப்பு மாறும். அத்தனை வேறுபாடுகளையும் பேச்சுத்தமிழ் தாங்கினும், நேர்முகமாக விளங்கிக் கொள்ளப் பலவாறு முயல வாய்ப்புளது.

எழுத்துத்தமிழ், இடம் காலம் கடந்தது. அதனால் அதில் ஒரு பொதுமை, நிலையான தன்மை இயல்பாகவே பேணப்படுகிறது.

அறிஞர் மு. அருணாசலம், 'இன்றைய தமிழ் வசன நடை' என்று, ஏறத்தாழ ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன் ஒரு நூல் எழுதியுள்ளார். அதன் விலை ரூ. 1. (டெமி அளவு - 182 பக்கம் - சாதாரணத்தாள்) அந்நூலில் அவர், பழந்தமிழ் உரைநடை, பண்டிதர் உரைநடை, மறுமலர்ச்சிக் கால உரைநடை என வகைப்படுத்துகிறார்.

தேர்வடத் தமிழ், நிகண்டுத்தமிழ், எதுகை மோனைத் தமிழ், பாட்டுத்தமிழ், வடமொழித் தமிழ், மணிப் பிரவாளம், சர்க்கார் த்மிழ், பாதிரித் தமிழ் எனப் பல்வேறு வகைகளாக, நகைச்சுவைபட எழுதிக் காட்டுகிறார்.

சொக்குந்தமிழ், மின்னற்சிலம்புத் தமிழ், அம்மாமித் தமிழ் என இக்காலத் தமிழ் மொழி நடைகளைக் காட்டுகிறார். இன்று இது இன்னும் பல வகைப் பட்டுவிட்டது.

கணினி வழி, இணையதளத் தமிழ்கூட, இன்று தமிழறியாதாராலும் கையாளப்பட்டு நிலைகுலைந்து வருகிறது.

ஆறுமுக நாவலர், உ.வே.சாமிநாதய்யர், பாரதியார், கல்கி போல்வார் நடைகளுக்கு எடுத்துக் காட்டுத் தருகிறார்.

ஆங்கிலத்திற்போலத் தமிழிலும் இன்று, சிலரது மொழிநடை தனித்தன்மையுடன், அடையாளங் காணக்கூடியவை. திரு.வி.க. உரைநடை, ரா.பி. சேதுப்பிள்ளை மொழிநடை, அறிஞர் அண்ணா மொழிநடை போன்றவற்றைப் பெயர் குறியாமலே இனங்கண்டு கூறிவிடலாம்.

சிலப்பதிகார உரைப்பாட்டு மடை
இறையனார் அகப்பொருள் உரைநடை
பல்வேறு உரையாசிரியர்களின் மொழிநடை
வாய்மொழியாகக் கதைகூறும் மொழிநடை

போன்றவை சிலபோது கடினமாகப்படும். இன்றைய சிவஞான முனிவர், வள்ளலார், ஆறுமுக நாவலர், மறைமலை யடிகள், பரிதிமாற்கலைஞர், கணக்காயர் சோமசுந்தர பாரதியார் போல்வார் நடைகள் கடுமையாகத் தென்படும். எனினும், தமிழில் உரைநடை இன்று மிகமிக எளிமைப்படுத்தப் பட்டுளது.

ஆங்கிலத்தில் கிப்பனும் பாஸ்வெலும் எழுதியவை போலப் பலவுளவன்றோ?

## பள்ளிப்படிப்புக்கு ஏற்ற தமிழ் எது?

பள்ளி மாணவர்க்கு இவற்றுள் எத்தகைய மொழி நடையைப் பின்பற்றி, அவர்களும் ஏற்கும்படி செய்யலாம் என்பதே, இன்று நம்முன் உள்ள கேள்வி.

எளிமை என்பது என்ன? கலப்படமா? கொச்சையா? திரிபா? பிழைபட்டனவா?

பொதுமைத் தமிழே எளிமைத் தமிழ்; அஃது எல்லோர்க்கும் விளங்கும் தமிழ். தமிழ்நாட்டுப் பாடநூலாயினும், சிங்கப்பூர்ப் பாடநூலாயினும் அவற்றிடையே ஒருபொதுமை, இயைபு வேண்டுமே?

பலவாறு சிந்தித்து, அறிஞர் மு. அருணாசலம் கூறுவது இது!

"ஆகவே, பேச்சு நடையை எழுத்தில் கையாளும்போது , இந்தக் குறைபாடுகளுக் கெல்லாம் ஈடுசெய்ய வேண்டும். கூடிய வரையில் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும். எவ்வித முடிச்சோ, சிலேடையோ இல்லாமல் எழுதவேண்டும். பேச்சிலே நேரக்கூடிய சொற்களையுங்கூடக், கதைப்போக்கு என்ற முறையில் பாத்திரங்கள் தோன்றிப் பேசும் போது உபயோகிக்கலாமேயொழிய மற்றச் சமயங்களில் உபயோகிக்கலாகாது. சொற்களின் திரிந்தவடிவங்களை நீக்கி விடவேண்டும். பேச்சிலே ஒரு விஷயத்திலிருந்து மற்றொன்றுக்குத் தாவலாம். எழுத்திலே இப்படித் தாவுதல் கூடாது; படிப்போரும் எழுதுவோரைப் போலவே தாவத் தயாராக இருக்க மாட்டார்களல்லவா? நேரேயிருந்தால், ஒருவேளை, கேட்போரையும் தாவச் செய்வது சாத்தியமாயிருக்கும்.

இவ்விதமாகவெல்லாம் குறைபாடுகளனைத்தையும் நீக்கிப் பேச்சின் சாயலை மட்டும் தழுவி எழுதும் நடையே, உண்மையான எழுத்து நடை; இதுவே பயனுள்ள இலக்கியநடை. (ஷ நூல். பக். 152).

எனவே மாணவர்களுக்குக் கற்பிக்கப் பொதுவாகக் கீழ்க்கண்டவாறு மொழிநடை அமைவது நல்லது.

1. எல்லோர்க்கும் விளங்கும் பொதுமை.
2. தரமுடைய தமிழாக இருத்தல். (ஆங்கிலப் பாடநூல்கள் போல)
3. பிழை, குறுமொழி, கொச்சை, ஒலித் திரிபு தவிர்த்த நடை.
4. கூடுமானவரை தமிழ்ச்சொற்கள்; சிலபோது தமிழாக்கச் சொற்கள்.
5. புதுமையை ஏற்கக்கூடிய அளவு ஏற்றல் (ரேடார், லேசர், லண்டன்)
6. எளிமையுடன் சுவை, விறுவிறுப்பு, புதுமை, பொலிவு, கவரும் தன்மையுள்ள 'அருமையில் எளிய அழகு நடை.'

7. பாடல்களை, அவற்றின் பாட்டு வடிவம் சிதையாமல், பிரித்துப் பார்வையில் படுமாறு பதிப்பித்தல்.

8. எளிமை, சொல்லும் முறையிலும் இருக்கிறது. படிப்பவர்க்குப் போய்ச் சேரவேண்டும். மிக முக்கியம் எளிமை மட்டுமன்று; அதை எழுதும் முறை. அது தனிக்கலையுமாகும்.

9. அருஞ்சொற்கள் இடையிடையே வரும்; பேச்சின் சாயலும் படியும். இரண்டுக்கும் இடைப்பட்ட 'பொதுமை' தெளிவு நோக்கியதாக இருக்கவேண்டும்.

10. வகுப்புகளுக்கேற்பப் படிப்படியான வளர்ச்சி காட்டப்பட வேண்டும். மாணவர்க்குச் சொற்களஞ்சியம் புலப்பட வேண்டும்.

உலக மொழிகளில் இடையறவுபடாது ஒரே தன்மையதாய் விளங்கும் மொழி தமிழ். பழந்தழிழுக்கு 'அகராதி' வைத்துப் படிக்கும் பழக்கம் போதும். ஆங்கிலத்திற்குச் சிறுகுழந்தைப் பருவம் முதல் ,அகராதி வைத்துப் படிக்கும் பழக்கம் தரப்படுகிறது.

படத்துடன் கூடிய அகராதி
அருஞ்சொல் அகராதி
மரபுத்தொடர் அகராதி
இணைத்தொடர் அகராதி
அழகுத்தொடர் அகராதி

எனப் பலப்பல தொகுக்கப்பட்டு, ஒவ்வோர் இரண்டு அல்லது மூன்றாண்டுப் படிப்புகளுக்குத் தனித்தனியே தரவேண்டும். தனியே அகராதியைப் புரட்டிப் பார்க்கவும், பாடத்தில் வரும் அருஞ்சொற்களுக்குப் பொருள் தேடவும் பழக்கவேண்டும். இதற்குத் தனிப் பயிற்சி ஏடுகள் தரலாம்.

சிறுகதை, புதினம், நாடகங்களில் உரையாடல்கள் பேச்சு நடையிலேயே அமையும்.

சில சொல் வடிவங்கட்குக் குறியீடுகள் தரலாம்.

**பாடத்திட்டமும்**
**பாடப் பகுதிகளும்**

வகுப்புகளுக்கு ஏற்பப் பாடத்திட்டம் வகுப்பதிலும், பாடப்பகுதிகள் தேர்ந்தெடுப்பதிலும் தான் 'பொதுமையும்' 'எளிமையும்' இருக்கின்றன.

மாணவர்களுக்கு எத்தகைய பகுதிகளைத் தந்தால், அவர்கள் எளித்ாகவும் விருப்பத்தோடும் ஆர்வத்தோடும் பாடநூல்களைத் திறப்பார்கள் என்பதை, அந்நூல்களை உருவாக்குபவர்கள்தான் கண்டுகொள்ள வேண்டும்.

1. தன்னம்பிக்கை, தன் முன்னேற்றம் தரும் உரைநடை, பாடல்கள் மாணவர்களுக்கு ஈடுபாட்டை உண்டாக்கும்.
2. மாணவர்களின் ஆளுமை மேம்பாட்டை வளர்க்கவல்ல பகுதிகளைத் தேடிச் சேர்க்கலாம்.
3. இன்று சிறுசிறு துணுக்குகளைப் படிப்பதில் ஆர்வம் உளது. நகைச்சுவை நிகழ்ச்சிகளில் நாட்டம் இருக்கிறது.சிதைவின்றி எழுதப்படும் சிறுசிறு புதுக்கவிதைகளில் ஈடுபாடுளது.
4. இயைபுச் சந்தப்பாடல்கள் உள்ளத்தை ஈர்க்கும். உரையாடல்கள் இடையிடையே கலந்துவரும் பாடல்களைப் படிக்கத் தோன்றும்.பாடலமைப்பும் மனத்தைக் கவர வேண்டும்;பாட்டுப் பொருளும் உள்ளத்தைத் தொடவேண்டும்.
5. குறிப்பாக, மாணவர்கள் இவை தங்கட்குப் பயன்படும் - என்று கருதும்படியான பகுதிகளாக இருப்பன நல்லது. உடல் நலத்துக்கு ஒருவழி சொல்லக்கூடும்; மன அமைதிக்கு ஒரு வழிகாட்டக்கூடும். ஒரு வாணிகர் எப்படி, தன்னைத் தோல்வியுறச் செய்ய முயன்றதை வென்றார் என இருக்கலாம்,
6. ‘இன்று ஒரு தகவல்’ - என்பது போலப் புதுமையான, செய்திகள், நிகழ்வுகள், குறிப்புக்களைத் தேடித்தரலாம்.
7. ஆட்சித்திறன் பற்றியவை, பழகும் பண்பாடு தொடர்பானவை, பகைவெல்லும் திறனை வளர்ப்பவை வேண்டும்.
8. பெரியவர்கள், விஞ்ஞானிகளின் வாழ்க்கையில் நடந்த மிகச் சிறந்த, மாணவர்கட்கு வழிகாட்டக்கூடிய, சுவையான, வீரம், ஈரம்,திறம் யாவும் வளர்க்கக்கூடிய உணர்வுள்ள - உயிருள்ள பகுதிகள் மிகமிகப் பயன்படும்.
9. நகைச்சுவை ஊடாடுவதும் மிகமுக்கியம். நல்ல நகைச்சுவை ‘அங்கதம்’ என நகையாடித் திருத்தும் கருத்துகள் அமைந்தவை.

10. புதியவை, அறிவியல் புதுமைகள், நேற்று, இன்று நடந்தவை. இன்றைய நடைமுறையை ஒட்டியவை. குறிப்பாக மனிதநேயம்,மாசுத் தடுப்பு, சுற்றுச்சூழல்காப்பு, தீவிரவாத ஒழிப்பு போல்பவை.

## பாடம் கற்பிக்கும் முறை

மாணவர்களுக்குச் சொற்பொழிவுபோல் நடத்துதல் கூடாது. தொடங்கும் முறையே சுவையுடையதாதல் வேண்டும். 'பருகுவன் அன்ன ஆர்வத்துடன்' - மாணவர் கேட்கும்படி செய்ய, ஆசிரியர் நன்கு கற்றறிந்த - முழு ஈடுபாடுடைய - கற்பித்தல் முறையைக் கையாள வேண்டும்.

சிலநூல்களை எடுத்துப்படிக்கத் தொடங்கியதும், கீழே வைக்கத் தோன்றாது. பாடத் திட்டமும், பாடங்களைத் தேர்தெடுத்தலும், அவற்றை மாணவர்க்கு எடுத்துரைத்தலும் ஆகிய மூன்றிலுமே எளிமையும் இனிமையும் உள.

நீகண் டனையோ? கண்டார்க்
கேட்டனையோ?
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ?
வெண்கோட்டு யானை சோனை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்!
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.
(குறு. 75)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இப்பாடலில், 'பொதுத்தமிழ்'ச் சொற்கள் மிகுதியாக உள. 'பாண' தலைவன் வந்துவிட்டதாகச் சொல்கிறாயே; நீயே பார்த்தாயா? யாரும் கண்டவர்கள் சொன்னார்களா? எனக்கு இது தெளிவாகத் தெரிய வேண்டும் என்று விரும்புகிறேன். அ∴து உண்மையானால், யானை குளிக்கும் சோனையாற்றங் கரையிலுள்ள, செல்வம் மிகுந்த பாடலிபுத்திரத்தையே அவர் பரிசிலாகப் பெறுவாராக! காதலர் வருவதை யார் சொல்லக் கேட்டனை?

இடைக்காலத்தும் இன்றும் இவ்வாறு 'பொதுத்தமிழ் அப்படியே உளது. இப்பொதுமை - பள்ளி அளவில் விழுக்காடு மிகுதியாக இருக்க முயல்வதே, பாடத்தைப் படிப்படியாக எளிமையிலிருந்து, மேலேறிச் செல்வதற்குப் பயன்படும்.

ஏற்கத்தக்க சில முடிவுகள்

1. பள்ளிப் பாடநூல்களில், தமிழகமாயினும், மலேசியாவாயினும், சிங்கப்பூராயினும், தமிழ் ஈழ மாயினும், பிற நாடுகளாயினும் ஒரே வகைப் 'பொதுத்தமிழ்' பின் பற்றப்பட வேண்டும்.

2. பொதுத்தமிழ் என்பது, பழங்காலத் தமிழுக்கும் இன்றைய தமிழுக்கும் உள்ள பொதுமை; எல்லா வட்டாரத்தமிழ் களுக்குமுள்ள பொதுமை. இப்பொதுமை, 'விழுக்காடு' பற்றியது. சில பழம் பாடல்கள் இன்றைக்கும் எளிதில் விளங்கும். சில வட்டாரவழக்குகள், தொழிற்கலைச் சொற்களில் அனைவருக்கும் விளங்கும் 'பொதுமை' இருக்கும். இப்பொதுமை மொழி தரமுள்ளது; கொச்சையன்று; கலப்பன்று பிழைவழக்குமன்று;

3. ஒலித்திரிபுகள், கொச்சைகள், கலப்புகளை ஊடகங்கள் பயன் படுத்தினால், அதனை ஒரு 'தனி வட்டாரவழக்கு' என ஒதுக்குதலே நல்லது. எழுத்தில் முழுவதும் 'பொதுமை' மட்டுமே வரவேண்டும்.இது தமிழின் இயல்பு. இதை மாற்றுவது தவறு.

4. அகராதி வைத்துப் படிக்கும் பழக்கம் இளம் சிறுவர் வகுப்புகளிலேயே தொடங்க வேண்டும்.

5. பாடத்திட்டம் - பாடங்கள் தேர்ந்தெடுத்துத் தொகுத் தலிலேயே எளிமை வேண்டும். அவை சுவையாக இருக்க வேண்டும். இளம் மாணவர்களை ஈர்க்க வேண்டும். இதற்குப் பாடநூல் தொகுப்பதில் கருத்துச் செலுத்தல் வேண்டும்.

6. இலக்கணத்தை - சூத்திரம், உரை, விளக்கம் என்று போகாமல் தொடக்கநிலை முழுவதும் 'விதி வருமுறை'யில் எடுத்துக்காட்டுகளிலேயே விளங்கவைக்க முடியும். இதில் முழுவதும் புதுமை புகுத்தவேண்டும். அன்றாட நடைமுறை வாழ்வில் இலக்கணம்வேண்டும்; இது தேவைப்படும்ஒன்று; அதைக் கைவிட்டால், குழம்பிப்போவோம் என்ற மன நிலையை மாணவர் பெறுமாறு இலக்கணத்தை எளிதாக்க வேண்டும்.

7. ஆங்கிலத்தை, நன்கு உரையாடக் கற்பிக்க வேண்டும். குழுக்களாகப் பிரிந்து, ஒரு பொருள் பற்றி முழுவதும் மாணவர்கள் ஆங்கிலத்திலேயே உரையாட வேண்டும்; விவாதிக்க வேண்டும்.அங்கு அந்த ஒருமணி அல்லது இரண்டு மணி நேரமும் அவர்கள்ஆங்கிலம் தவிரப் பிறமொழி பேசக்கூடாது. தமிழ் வந்துவிடக்கூடாது. ஆங்கிலம் பேச்சுப் பயிற்சி வகுப்பு, முழுவதும் ஆசிரியர் மேற்பார்வையில் ஆங்கில மொழியே பயன்படுத்தப்பட்டு நடத்தப்பட வேண்டும்.

சிறு ஆங்கிலப் பகுதிகள்- உரையாடல்கள் எழுதச் செய்ய வேண்டும்.

அ∴தேபோல, ஒரு மணி அல்லது இரண்டுமணி, மாணவர்கள் குழுக்களாப் பிரிந்து, தமிழிலேயே உரையாட வேண்டும்; விவாதிக்க வேண்டும். ஆங்கிலம் கலக்கக் கூடாது.சிந்தனைப்பட்டிமன்றம் - வழக்காடு மன்றம் - அரட்டை அரங்கம்போலப் பேசவைக்கலாம். அப்போது பிறமொழி கலவாது பேசப் பழக்கவேண்டும்.

இப்போது ஆங்கிலமும் யாரும் முழுமையாகப் பேசுவதில்லை; பேசமுடிவதில்லை; அப்படிப் பேசிப் பயிற்சியுமில்லை.

தமிழிலும் முழுமையாகப் பேசாமல், ஆங்கிலம் கலக்க இதுவே காரணம். இம்முறையில் பயிற்சி வந்தாலன்றிக் கூச்சமின்றி ஆங்கிலம் பேச வராது.

8. பொதுத்தமிழ் - என்பதில் எளிமை இருக்கும்; ஆனால், பிழைபாடு இராது.

அருஞ்சொல் மிக அருகிவரும்; விளங்கும் தமிழாக இருக்கும்.

எல்லா வட்டார வழக்கும், ஊடகங்களின் வழக்கும், மக்கள் பேச்சுவழக்கும் இடம்பெறும்போது, 'பொதுமை போற்றும் எழுத்துத்தமிழ் வடிவில்' இருக்கும்.

வி.கோ. சூ. (பரிதிமாற் கலைஞர்) கூறியிருப்பது போலத் திருத்தமுற எழுதப்படும். பேச்சுத்தமிழினை வடிவப்படுத்தி விடவேண்டும்.பேச்சுத் தமிழாகவே எழுதுவது ஒலித்திரிபு வடிவம்; பேச்சுநடையில் எழுதும் திருந்திய தமிழ் வேறு.

இதை மொழிநடைத்திறன் (Language Styie) என்பர்.

### பள்ளிப் பாடங்களில் இடம்பெறவேண்டிய பொதுத் தமிழ்க் கூறுகள்

நம் சங்கப் பாடல்கள் முதல், இன்றுவரை ஒரு பாடலை எடுத்து வைத்துக் கொண்டு, அதில் 'பொதுத் தமிழ்'க் கூறு மிகுதியாக உள்ளதைப் பாட நூலிற் சேர்க்கலாம். எந்த ஒரு பாட்டு, கட்டுரை, கதை யாதாயினும் அதில் 'பொது'வாக,அனைவருக்கும் விளங்கும் தமிழ் கூடுதலாக இருப்பதையே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்காக அருஞ்சொல்லே இல்லாத ஒன்றைக் காணுதல் அரிது. மிகுதி, குறைவு என்பன விழுக்காடு பற்றியன. அருஞ்சொற்களுக்கு அகராதி பார்க்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டும்.

ஈஎன இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று.
கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று;
அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும்
உயர்ந்தன்று (புறம். 204)

இவ்வாறு, இன்றும் எளிதில் விளங்கக்கூடிய பொதுமைத் தமிழாலான 'அவையப்' பாடல்கள் மிகப்பலவுள. ஸினிமா என்று எழுதாமல், 'சினிமா' என்றே எழுதுவதுதான் தமிழ்மை, பொதுமை, நன்மை.

வாழ்வரசி வாழ்வரசி
என் சமத்தி மாதா
மதிப்பான வாழ்வரசி
அஞ்சு தலைமுறைக்கும்
அழகான வாழ்வரசி

இவ்வாறு பாடநூலில் எழுதினால், குடிகெட்டுப் போகாது.

தமிழகத்தில் ஒரு பண்பலை வானொலி (F.M). அதை ஒலிக்க வராமல் 'ஏய்ப்பம்' என்றே கேட்டு, செவி புளித்துப் போனது. அங்கு ஒருவன், ஒரு குடிசையில் தறிபோட்டுப் பிழைக்கும் பெண்ணிடம் தொலைப்பேசி மூலம் பேசுகின்றான். உரையாடலைக் கேளுங்கள்!

- ஒங்க பேரு
- கருப்பாயி
- என்ன செய்யறீங்க?
- தறி போட்டிருக்கோம்
- என்ன தறி?
- கைத்தறிதாங்க
- யாரு நெய்யறாங்க?
- எங்க வூட்டுக்காரர் தாங்க
- உங்க ஹஸ்பெண்டா?
- நீங்க உதவுறதுண்டா? தறி நெய்யத் தெரியுமா?
- தெரியாதுங்க. நானு வீட்டு வேலைதாங்க செய்யறேன்.
- ஓ! நீங்க 'ஹவுஸ் ஒய்பா'?

இந்த வானொலி 'மடையன்' ஒரு குடிசையில் வாழும் பாமரப் பெண்ணிடம், இரண்டு புது ஆங்கிலச் சொற்களைப் புகுத்துகிறான். இந்த அறிவு கெட்டவனுக்கு, ஆங்கிலமும் முழுமையாய் வராது. சில ஆங்கிலச் சொற்களை அறிவான். அதைப்புகுத்திப் பெருமைப்படுகின்றான். அதற்குப்பிறகு வானொலியில், எல்லோரும் இச்சொல்லையே பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

ஆங்கிலம் பேசு; ஆங்கிலத்திலேயே முழுவதும் பேசு; ஆங்கிலத்தில் தமிழைக் கலந்து, ஆங்கிலத்தில் திறமையாகப் பேசும் திறனை இழந்து விடாதே!

தமிழ் பேசு; தமிழிலேயே முழுவதும் பேசு; தமிழில் ஆங்கிலத்தைக் கலந்து தமிழைச் சிதைத்து விடாதே! இவ்வாறு போதிப்பதே நம் கடமை.

# 6. அழகைக் குறிக்க ஆயிரம் சொற்கள்

தமிழில் அழகைக் குறிக்க ஆயிரக்கணக்கில் சொற்கள் உள்ளன என்றால் வியப்படைவீர்கள்! ஒவ்வொரு சொல்லும் ஒவ்வோரழகைக் குறிக்கும். நிறம் ஓர் அழகு - அதைக் குறிப்பன பல; வடிவம் ஓர் அழகு - அதைத் குறிப்பன பல; தொடர்புடைய பிறவற்றின் பெயர்கள் பலவும் துணைப் பொருளாய் அழகையும் குறிக்குமிடம் உண்டு. அழகின் அடை மொழிகள் பல. இயற்கை அழகு, மாந்தர் அழகென்றும் இளமை அழகு. பெண்மை அழகென்றும் இவ்வாறு அழகு வகைகளும் பலதிறப்படும். இவை அனைத்தையும் கூட்டிப் பார்த்தால் எண்ணற்ற சொற்கள் நம்முன் விரிகின்றன. அழகினுக்கு அவதியுண்டோ? என்றார் கம்பர். அழகைக் குறிக்கும் சொற்களுக்கும் எல்லையில்லை என்பது தமிழ் இலக்கியத்தில் பயிற்சியுள்ளவர்களுக்குத் தெரியும்.

## பேச்சில் 'அழகு'ச் சொற்கள்

சில அடிப்படையானவற்றைப் பார்த்தாலே, இச்சொற்களின் முழு அழகும் விளங்கிவிடும். வாகான உடம்பு, வாளிப்பான தேகம் என்று கதைகளில் குறிப்பிடுவார்கள். வாட்டசாட்டமாக இருப்பான் என்பதும் உண்டு. 'வாகு' என்பது நன்கு வகுக்கப்பட்ட திடமான உடம்பு என்று அதன் அமைப்பை வைத்துச் சொல்லப்படுகிறது. வாளிப்பு வளர்ச்சியைக் காட்டும் திரட்சியுடைய உடலமைப்பு. வாகான என்பதை ஆண்களுக்கும் வாளிப்பு என்பதைப் பெண்களுக்கும் பயன்படுத்துவது பேச்சு மரபு. வாட்ட சாட்டம் - மெலிய வேண்டிய இடம் மெலிந்தும் பருக்கவேண்டிய இடம் பருத்தும் காணப்படுவது. கொள்ளை அழகு - கண்டவர் மனத்தைக் கொள்ள கொள்ளுவது. கொள்ளை என்றால், மிகுதி என்றும் பொருளுண்டு. கட்டழகு - உடம்பின் கட்டமைப்பால் கிடைக்கும் தோற்றப் பொலிவு. அடிக்கடி 'மூக்கும் முழியுமா' என்பார்கள். மூக்கும் விழிகளும் முன்னிற்பவை. முகத்தின் அழகுக்கு முக்கியமானவை. அவை ஏனையகாது, உதடு, பல்வரிசை போலும் உறுப்புகளையும் குறிக்கும். முக அழகையே - முகக் களையையே அவ்வாறு குறிப்பிடுவர். களையான முகம், களையான தோற்றம் என்பார்கள். 'கறுப்பாயிருந்தாலென்ன, பார்க்கக் களையாக இருக்கிறானே' என்று போற்றிக் கூறுவர். 'களை' என்பது, பார்ப்பவர்க்குக் களிப்பைத் தரும் தோற்றம். முகத்தில் ஒருவித ஒளி வீசித் துறுதுறுப்பாய்த் திகழ்வதையே 'களை' என்பர். 'பெண் திருத்தமாக இருக்கிறாள்' என்பது, சில வட்டாரத்தில் பெருவழக்கு. சிலை வடிக்கும்போது சிறிதும் கோணல் மாணல் இல்லாமல் வடிப்பதுதான் திருத்தம்.

திருத்தம் கடைசி எல்லை வரை ஒழுங்குற அமைப்பது. உறுப்புகளும் மொத்தத் தோற்றமும் திருத்தமுறச் செய்தமைக்கப்பட்டது போன்றது அது. கறுப்பு அழகன்று என நினைப்பது தவறு. கறுப்பாயிருந்தாலும் சிலைபோல, சித்திரம் போலத் திருத்தமாக இருப்பதுதான் அழகு. 'கறுப்பின் கண் மிக்குள்ளது அழகு' என்பது, தமிழில் ஓர் இலக்கண மேற்கோள். 'சூடு ஒரு சுவை, சிவப்பு ஓர் அழகு' என்பது இன்றைய பழமொழி. 'அவன் முருக்காக இருக்கிறான்' என்பார்கள். முருகு - அழகு. முருகாக என்பதே முருக்காக என வலித்தல் விகாரம் பெற்றது. 'நல்ல அழகு' என அழுத்திச் சொல்வார்கள்; 'வெறிப்பான அழகு' நமக்கு எதற்கு?

## இலக்கிய அழகுச் சொற்கள்

அரி, ஆய், உரு, ஒளி, சீர், தகை, திரு, நலம், மதர், அம், மாழை, ஒளி, மா, செவ்வி, காமர் எனச் சொல்லிக்கொண்டே போகலாம். ஒட்டு மொத்தமானதைத் தோற்றம், பொலிவு, களை, கவின், பொற்பு, அணி, எழில், அழகு, வண்ணம், வனப்பு, சாயல், கோலம், காமர் போலும் செற்களால் கூறுவர். மாமை என்பது நிறத்தால் குறிக்கப்படும் அழகு. மாந்தளிர் ஒளியுடன் சுடர்விட்டுப் பிரகாசிப்பது போல் தோற்றம். அதை முழுவதும் கருப்பென்று கூறிவிட முடியாது. அது கருப்புக்கும் சிவப்புக்கும் இடைப்பட்ட நிறம். இன்று மாநிறம் என்பர். கோலம் அலங்கரிக்கப்பட்ட அழகு. அதுவே மிகையானால் அலங்கோலம் ஆகிவிடும். கோல - திரட்சியுமாம். கோல் வளை - உருண்டு திரண்ட வளையல். அணிகளால் ஆகிய அழகுடையவளைக் கோலத்தாள் நல்ல குணத்தாள் என்று வருணிக்கலாம். விருப்பம் தரும் நிறைவுடைய அழகு காமர் எனப்பட்டது. புத்தம்புது அழகு இன்று காலை மலர்ந்த மலர்போன்ற அழகு 'செவ்வி' எனப்பட்டது. அம், அம்மை என்பன மட்டுமல்ல, 'அ' என்றாலே அழகுதான்! அவ்வரி, அவ்வளை, அவ் வாய் என அழகியவை இலக்கியத்தில் சுட்டப்படும். வழக்கில் 'நல்ல பெண்' என்போம். 'நல்ல அழகு' என்போம். கெட்ட அழகும் ஒன்று இருக்கிறது போலும்! குடும்பப்பாங்கான, இயல்பான அழகே நல்ல அழகாகும். இலக்கியத்தில் 'நலம்' என்ற சொல் அழகைக் குறிக்கும். திருநலம், மாண்நலம், எழில்நலம், ஆய்நலம் என்றெல்லாம் வருமிடம் பலவுண்டு. 'ஆய்' ஆராய்ந்த அழகு. ஐ என்பது மென்மையான அழகு. சுந்தரம் என்பது அழகையும் குறிக்கும்; சிலசமயம் குரங்கையும் குறிக்கும். குரங்கும் கழுதையும்கூடக் குட்டியில் அழகுதானே! மாதர், காரிகை, தையல் என்பனவெல்லாம் முதலில் அழகைக் குறித்துப் பிறகு பெண்களைக் குறித்தன. மதர், மதர்ப்பு என்பன கதித்தெழும் அழகு. மதர்க்கண் ஒளிவீசும் கண், பருவமெய்திய பெண்ணின் அழகை 'மதர்ப்பு' என்று அடைகொடுத்து, உறுப்புகளை வருணிப்பதுண்டு.

## தோற்றம் பற்றிய மொத்த அழகு

ஒருவரது அழகை மூக்கு நன்றாயிருக்கிறது; காது நன்றாயிருக்கிறது; விழிகள் நன்றாகவுள்ளன என்று தனித்தனியே குறிப்பது வேறு. அவரது மொத்த உருவ அழகைக் குறிப்பது வேறு. சிலரிடம் 'சாயல்' அழகு காணப்படும். சில பெண்கள் மயில் போன்ற சாயலுடையவர்களாகக் காட்சியளிப்பார்கள். 'மென்மைச் சாயலள்' என்று இலக்கியத்தில் வரும். இச்சாயல், 'மென்மை'யுடன் தொடர்புடையது. 'அவர் முகச்சாயல் அப்படியே இருக்கிறது' என்போம் இன்று. ஒரே மாதிரித் தோற்றம் - பார்வை அது. பெண்களின் தோற்றம் பூவை (மைனா) போலிருந்தால் 'பூவை' என்றும், பாவை போலிருந்தால் 'பாவை' என்றும், மயிலைப் போல் இருந்தால் 'மயிலி' என்றும் அழைப்பர். இவை மென்மையான சாயல்கள். ஆண்களைக் 'காளை' என்பதுகூடச் சாயல் பற்றிய அழகைக் குறிப்பதுதான். ஆனாலும் மென்மைக்கு இடமின்மையால், அதைச் சாயலழகு என்று இதுவரை யாரும் சொன்னதில்லை. தொல்காப்பிய உரைகளில் இவ் அழகுச் சொற்களுக்கு, மிக நுட்பமான உரை விளக்கம் உண்டு. இளம்பூரணர், 'சாயல் - மென்மை. அது நாயும் பன்றியும் போலாது, மயிலும் குயிலும் போல்வதோர் தன்மை' என எழுதியுள்ளார். சாயலழகை உணர முடியுமே தவிர, எழுதிக் காட்ட முடியாது. மூக்கின் அழகை, முகத்தினழகை எழுதிக் காட்டலாம். சாயலழகு ஒட்டுமொத்தமானது; உணரக்கூடியது. சாயலாவது ஐம்பொறிகளால் நுகரும் மென்மை என்பார் நச்சினார்க்கினியர்.

## எழில்

ஏர், எழில் என்பன எழுச்சி பற்றிய மொத்த அழகு. இளம்பூரணர் தரும் விளக்கங்களை நிதானமாக ஒருமுறைக்கிருமுறை படித்துப் பாருங்கள். "ஏர் தளிரின்கண் தோன்றுவதோர் பொலிவுபோல, எல்லா உறுப்பினும் ஒப்பக்கிடந்து கண்டார்க்கு இன்பத்தைத் தருவதோர் நிறவேறுபாடு!" இது எல்லா வண்ணங்களுக்கும் பொதுவென்றும், இதுவும் மனத்தால் உணரப்படுவதென்றும் அவர் கூறுவன சிந்திக்கத்தக்கன. "எழில் - அழகு அது மிக்கும் குறைந்தும் நீடியும் குறுகியும் உயர்ந்தும் மெலிதாகியும் வலிதாகியும் உள்ள உறுப்புகள் அவ்வளவில் குறையாமல் அமைந்த வழி வருவதோர் அழகு" அதாவது, எந்தெந்த உறுப்பு எந்தெந்த அளவில் இருக்க வேண்டுமோ அந்தந்த அளவிலிருப்பதால் வரும் மொத்த அழகு இது. இதையும் தனியே பிரித்துக்காட்டுதல் இயலாதென்பார் இளம்பூரணர், ஏர்,

எழில் என்பன வளர்ந்தபடி இருக்கின்ற இளமை அழகுகள் - அவற்றிற்கு நிகழ்காலமே உண்டு - வளர்ந்தமைந்த பருவத்தும் இன்னும் வளருமென்பது தோன்ற அமைந்திருப்பன என்று நுட்பமாகப் பொருள் விரிப்பார், மதுரை பாரத்துவாசி நச்சினார்க்கினியர். 'ஏர் இள வனமுலை', பிணை ஏர் நோக்கு, என்றும் ஏந்தெழில் மலர்க்கண் 'எழில் நுதல்' 'எழிலுண்கண்' என்றும் வரும் இலக்கிய ஆட்சிகளைப் படித்துப் படித்து உரையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்! முருகியல், அழகியல் என்பன இன்பவுணர்வின் பிறப்பிடமல்லவா?

## பொலம், பொலிவு, பொற்பு

பொன்னிறம் ஒரு பொலிவைத் தரும். பொலம் என்பது பொன். அணிகலன்களினால் ஏற்படும் அழகே பொலமும் பொலிவுமாம். ஓடையொடு பொலிந்த யானை, உளையினால் பொலிந்த குதிரை, பொறி (புள்ளி)களால் பொலிந்த பாம்பு என அழகுக்கு அணி செய்வன யாவை எனச் சுட்டப்படும். அணி - அழகு. சீறடிப் பொலிந்த கிண்கிணி என்றால், கிண்கிணியால் சீறடி பொலிவுறுவதும் சேர்த்தே சுட்டப்படுகிறது. நெல் மணிகளைக் குவிக்கப் 'பொலி' தூற்றுவர். பொலிதல் - விளங்கித் தோன்று;தல். வலுவும் பொலிவும் உடையராய் என வாழ்த்துவர். பொலிக என்றால் தழைக்க, ஒளி பெற்று விளங்குக என்பது பொருள், பொற்பு - பொன்னனைய பண்பு, அழகு. சிலருடைய அழகு 'பொற்பு' எனக் கூறத் தக்கதாகும். கண்ணகி பொற்பும் கற்பும் மிக்கவள்.

'உரு' முன்பு நிறம் பற்றிய அழகையே குறித்தது. 'வடிவு' தான் உடல் பற்றியது, வடிவுடையாள். வடிவாம்பாள் எல்லாம் அழகுடையவர்கள். வடிவு - சிலையாக வடிக்கப்பட்டது போன்ற கட்டழகாகும். கவின் - கண்டாரை இன்புறுத்தும் நுட்பமிக்க பேரழகு. இவை பல கவினிய, கவினுதல், கவினினை, பொலிந்தனை, பொலியும், பொலிக, பொலிந்தான் என வினை வடிவங்களாய் விரிவதுண்டு. திரு - எப்பொழுதும் உள்ளக் கிளர்ச்சியுடன் கூடிய மகிழ்ச்சித் தோற்றம். அழகு என்பதும் ஒட்டுமொத்தமான தோற்றம் பற்றிய சொல்தான்.

## வனப்பு

'உறுப்புகள் அனைத்தும் திரண்டவழிப் பெறுவதோர் அழகு' என்பார் பேராசிரியர். 'எழுதி அன்ன காண்தகு வனப்பு' என்றால், சித்திரம் தீட்டினாற் போன்ற பார்வைக்கு ஏற்ற பேரழகு என்பதாம். இதுவும் மனத்தால் உணரப்படும் வண்ணம் நிறமும் வடிவும் பற்றிய ஒட்டுமொத்த அழகு. இவை இரண்டும் இலக்கிய அழகைக் குறிக்கும். கலைச் சொற்களாகவும் தொல்காப்பியரால் ஆளப்படுகின்றன. உறுப்பழகுகளின் கூட்டலால் அறியப்படுவதை எழில்

என்றும், அதனால் உணரப்படும் பேரழகை 'வனப்பு' என்றும் குறித்த நுட்பம் சிந்தனைக்கு விருந்தாகும். அழகின் பெயர்களைத் திவாகரம் 29 எனவும், பிங்கலம் 52 என்றும், சூடாமணி 42 என்றும் குறிப்பிடும். இந் நிகண்டுகளுக்கு அப்பால் அகராதிகளில் தேடினால், நூற்றுக்கணக்கில் கிடைக்கும் அழகுச் சொற்களையும், தொடர்புடைய சொற்கள் அழகுப் பொருள் தருவதையும், அழகு அடைமொழிகளையும் ஆராய்வது ஓர் 'அழகியல்' ஆகும். அழகுணர்ச்சியால், மனிதன் இளமையடைகிறான். 'தமிழ்ச் சொல்லைத் தொழுது படித்திடடி பாப்பா' என்றார் பாரதியார். அது ஏன்? முப்பத்தையாயிரம், மழலையர் பள்ளிகளில் இன்று மூன்று வயதிலிருந்தே ஆங்கில வழி அனைத்தும் படிக்கும் தமிழ் மழலைகள், தமிழை மறந்துவிடும் என்று முன்கூட்டியே அவருக்குத் தெரிந்திருக்கிறது.

(தினமணி 25 - 4 - 1992)

# 7. பறை சாற்றலும் விலை பகர்தலும்

## பறை சாற்றுதல்

பறையை அடித்தல். சாற்றுதல் - அடித்தல். இது பறையை முழக்கிப் பலரறியக் கூறுதல் எனப் பொருள்வளர்ச்சி பெற்றது. அரச ஆணைகள் அன்று பறை சாற்றப்பட்டன. இன்றும் கிராமப் பஞ்சாயத்தார் பறை சாற்றுவதைச் சிற்றூர்களில் கேட்டிருக்கலாம். அதிவீரராம பாணடியர் தம் வெற்றி வேற்கையில், 'வாய்ப்பறை ஆகவும் நாக் கடிப்பு ஆகவும், சாற்றுவது ஒன்றைப் போற்றிக் கேண்மின்' என்று பாடுகிறார் (72). வாய் - பறை, நா - கடிப்பு என்னும் குறுந்தடி. சுற்றுவது - அதை முழக்கிக் கூறுவது. காலப்போக்கில் சாற்றுதல் என்றாலே பலரறியச் சொல்லுதல், விளம்பரப்படுத்துதல், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், பலரறியக் கூவி விற்றல் என்று பல சார்புப் பொருள்கள் வளரலாயின. சாற்றுதலுக்கு அடித்தல் என்பதுதான் முதற்பொருளாயிருந்தும், அது எத்தனை பொருளுக்கு இடம் தந்துவிட்டது என்பதை எண்ணிப்பாருங்கள்!

புகழ் சாற்றுதல் தமிழர் பழக்கம். அன்றைய நம் அரசர்கள் வஞ்சினம் சாற்றுவதுண்டு. 'மறவர்களே! நுமக்கு ஒன்றை அறிவிப்போம்1 கேளுங்கள்!' என்று ஔவையார் ஒரு புறப்பாடலைத் தொடங்குகிறார்: 'போற்றுமின் மறவீர்! சாற்றுதும் நும்மை!' (புறம்.104). இடைக்காலத்தில் பெரியவர்களிடம் 'சாற்றுக்கவி' வாங்கிப் புதிய நூல் வெளியிடுவது ஒரு மரபு. நூலையும் நூலாசிரியனையும் பலபடப் பாராட்டி எழுதப்படும் செய்யுளே 'சாற்றுக்கவி' எனப்பட்டது. குற்றம் சாற்றுதலுண்டு. சாற்று - சாத்து ஆகி நாலு சத்துச் சாத்து என்பர்.

பறை அறைதலும் இது போன்றதே. பறையை அறைந்து (அடித்து) பலர் அறியக்கூறுதல். இங்கும் அறைதலுக்கு அடித்தல் என்பதே முதற்பொருளாக இருந்தும், அடித்துச் சொல்லுதல், அழுத்திச் சொல்லுதல் எனப் பொருள் வளர்ந்தது. இவற்றுள் 'பறை' என்ற பெயர், வினைவடிவாகிப் 'பறைந்தான்' - சொன்னான் எனப் பொருள்பட்டது. சேர நாட்டு வட்டார வழக்காகி, இன்று மலையாளத்தில் இச்சொல் காணப்படுகிறது. 'ஞான் பறையிறது நுங்களுக்கு விளங்கிற்றா?' இன்று 'பறையறைதல்' என்பது மரபுத் தொடராய் 'இரகசியத்தை வெளிப்படுத்துதல்' என்ற பொருளில் வழங்குகிறது. நீதிக்கருத்துக்களை அறைந்தறைந்து பலமுறை கூறவேண்டும்.

அறிக்கை, அறிவிக்கை, அறிவித்தான், தெரியப்படுத்தினான், தெரிவித்தான், அறிவுறுத்தினான் எல்லாம் சாற்றுதல், அறைதல், பறைதலாய் அவற்றின் வேலையைச் செய்கின்றன இன்று.

தூற்றினான் என்பதும் இதுபோன்ற மரபுத் தொடரே. நெல்லில் உள்ள பதர்களையே காற்றில் தூற்றிப் பொலி சேர்ப்பர். தூற்றுவது இவ்வாறு காற்றில் தூற்றுவது பற்றிய முதன்மைப் பொருளுடையதாய்த் தோன்றி, பலரறியச் சொல்வது என்னும் பொருளுக்கு வளர்ந்தது. புகழையும் பலரறியக் கூறலாம்தானே? அதை நாம் தூற்றுவது என்னாமல், பழி தூற்றுவதையே தூற்றுவதென்கிறோம். 'போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும்' என்பார் கண்ணதாசன். குமரகுருபரர் மட்டும் இதை நல்ல பொருளில் வைத்துப் 'பிறர் பிறர் சீர் எல்லாம் தூற்றி' என்று பாடுகிறார்!

சாற்றுதல், அறைதல் தொழிலாளரிடமிருந்தும் தூற்றுதல் உழவரிடமிருந்தும் கற்றுக்கொண்டவை. கற்றறிந்தவர்கள் என்று பெருமைப் படும் நாம், அவர்களுக்கு நன்றி சொல்லவேண்டும்!

## விலை பகர்தல்

பலரறிய விலைகூறி விற்பது 'விலை பகர்தல்' ஆகும். பகர்தல் - சொல்லுதல் ஆனது. பகர்ந்தான் என்றாலே, விலை கூறினான் எனவும் பொருள்பட்டது. சிலம்பில், கூனி கையில் மாலையைக் கொடுத்து, நகர நம்பியர் திரிதரு மறுகில் 'பகர்வநர் போல்வதோர் பான்மையில் நிறுத்தினர்'. பகர்வநர் - விலை கூறுவோர். அதனால் விளைந்தது கோவலனுக்கு ஆபத்து.

பகர்ச்சி - விலை என்றே பொருள். பகர்தல் - அறிவுரை பகர்தல், அருளிச்செயலும் ஆனது.

## விளம்புதல்

விளம்புதல் - மணலில் திரும்பத்திரும்பக் கைவிரலால் எழுதுதல். சிறுபிள்ளைகள் ஒருவர் எழுதிக் கொடுத்ததன் மேலேயே விளம்புவார்கள். 'வேந்தற்கு விளம்பி' (சிலம்பு. 16-123) என்று அரசனுக்கு எடுத்துரைப்பது கூறப்படுகிறது. 'மெய்ம்மைக் கிளவி விளம்பிய பின்னும்' என்பது மணிமேகலை (26-33). அறக் கருத்துகளைத் திரும்பத் திரும்பக் கூறவேண்டும் - விளம்பவேண்டும். அப்போதுதான் அது மக்களிடம் போய்ச் சேரும். இதிலிருந்துவந்த 'விளம்பரம்' பற்றிப் பழைய பொருள் தொடர்ச்சியை எண்ணிப் பாருங்கள்!

(தினமணி சுடர் 7-12-1991)

# 8. காக்கை கரையும்; கூகை குழறும்; குயில் கூவும்!

சிறு பிள்ளைகட்குப் பாடம் சொல்லுவோம்: மயில் அகவும், கிளி பேசும், சேவல் கூவும் என்று. இவ்வாறு வினை மரபுச் சொற்கள் பல உள்ளன. யானை பிளிறும்; குதிரை கனைக்கும்; நாய் குரைக்கும்; கழுதை கத்தும். தொல்காப்பியர் உயிரினங்களை இறுதியிலே கூறி, அவற்றிற்கு மக்களிடையே வழங்கும் ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள், இளமைப் பெயர்களை முன்னதாக வரிசைப்படுத்தினார். மரபியலில் இவற்றைப் படிக்கும் நாம் ஆட்டுக்குட்டி, பசுங்கன்று, அணில் பிள்ளை என இவ்வாறு எவற்றைக் குட்டி, கன்று, பிள்ளை எனப் பிரித்துச் சொல்ல வேண்டும் என்பதை அறிகிறோம். அவர் பெயர்ச் சொற்களை மட்டுமே வகைப்படுத்தியுள்ளார். வினைச் சொற்களிலும் எவையெவை கூவும், எவையெவை குழறும், எவையெவை கத்தும் என அவர் வகைப்படுத்தவில்லை.

## ஒப்புமை ஆக்கம்

கூகைதான் குழறும் என்பதில்லை; மனிதனும் குழறுவான். ‘கூழை குழறினும்’ (குறு. 153). ‘கூகை நன்பகல் குழறவும்’ (பட். 268) மனிதன் குழறிப் பேசும்போது, பொருள் விளங்காது. அதிலிருந்து குழறுபடி என்ற சொல்லும் பிறந்துளது. குழந்தைப் பேச்சில், ‘குழறல்’ இருக்கலாம்; வளர்ந்தபிறகு அது கூடாது.

கூவுவதும் கூப்பிடுவதும் பறவை ஒலிகளே. கூவுதல் - குக்கூ எனக் கத்துதல். கூப்பிடுதல் - கூவி அழைத்தல். பறவைகள் இணையைக் ‘கூ’ப்பிடும். மனிதன் ஒருவரைக் கூவி அழைக்கும் போதும் கூவினான். கூப்பிட்டான் என்பர். முற்காலத்தில் அப்ப வாணிகர், அப்பத்தைச் சுட்டு வீதியோரமாய்க் கூவி விற்றதால், ‘கூவியர்’ எனப்பட்டனர். கூக்குரல் இடுதல் கூவி அழுதல். பலர் சேர்ந்து கூவி அழும்போது, ‘ஒரே கூக்குரலாய் இருக்கிறது’ என்பார்கள்.

சத்திரத்தில் ஒரே கூப்பாடாய் இருக்கும். ஒருவரைப் பெயர் சொல்லி, உறவு சொல்லி அழைப்பது இன்று கூப்பிடுதல். கூப்பிடுதூரம். அங்ஙனம் கூப்பிட்டால் கேட்கும் தூரம். பத்துக் கூப்பிடுதூரம் ஒரு காவதம் என்பார்கள். காக்கை கரையும்; மனிதனும் கரைவான். இலக்கியத்தில் கரைந்தான் - அழைத்தான் என்ற பொருளில் வந்திருக்கிறது. மலையாளத்தில் இப்பொருள்

இன்றும் உண்டு. நாம் கரைந்தான் - அழுதான் என்ற பொருளில் வழங்குகிறோம். அது கரைந்து உருகுவதிலிருந்து வந்தது. அகவுதல் - அழைத்தல் என்ற பொருளில் அரிதாக ஆளப்படுவதுண்டு.

பெட்டிப் பாம்பு உள்ளே இரையும்; மனிதனும் மூச்சுவாங்க இரைக்கப் பேசுவான். 'ஏன் இப்படி இரைகிறான்' என்பர். நாகம் சீறும்; மனிதரிலும் சிலர் எதற்கெடுத்தாலும் சீறுவார்கள். சூரியன்தான் காயும் என்பதில்லை; வெயிலைவிடக் கொடுமையாகச் சிலர் காய்வார்கள். புலிதான் பாயுமா? சிலர் அலுவலகத்தில் தங்களுக்குக் கீழே வேலை செய்பவர்கள் மீது பாய்வதைப் பார்க்க வேண்டுமே!

தலைவர் முழங்குவதும் தளபதி கர்ச்சிப்பதும் ஒப்புமை ஆக்கமன்றி, உண்மையாக முடியுமா? ஓநாய் ஊளையிடும். மனிதர்கள் ஓலமிடுவார்கள். பறவை, விலங்குகள் ஒவ்வொன்றைச் செய்ய, மனிதன் அனைத்தையும் செய்வதால், மனிதன் பெரியவனே எனலாம் அன்றோ?

## அழைப்பு

வேர், அடிச்சொல் மரபுப்படிப் பார்த்தால் 'அழு' என்பதிலிருந்தே 'அழை' (அழு + ஐ) வந்தது. போரில் 'அரசு உவா அழைப்ப' என்பது பதிற்றுப் பத்து (79-13). பட்டத்து யானை வருத்தத்தால் கத்த என்பது இதன்பொருள். 'உழைக் குரல் கூகை அழைப்ப வாட்டி' (புறம். 261-12) என்றால், பெரிய குரலையுடைய கூகை, இரக்கத்தோடு தன் இனத்தை அழைப்பது. 'அன்றில் பேடை அரிக்குரல் அழைஇ' என்ற மணிமேகலை (5-127) அடிக்கு, அன்றில் பெண் பறவை மெல்லிய குரலால் ஆணை அழைப்பது பொருள். கூப்பிடுதல் போல அழைப்பதும் இங்கு ஒரு சார்புப் பொருள்படுதல் உங்களுக்கு விளங்கவில்லையா?' அஞ்சி நின்று அழைக்கும் ஆத்துயர் என்பதும் மணிமேகலை (13-33). இறந்துகிடக்கும் வீரனின் புருவ வளைவைக் கண்டு, நரி வெரீஇச் சேட் கணித்தாய் நின்று அழைக்குமாம் (முத்தொள்). தூரத்தே நின்று இனத்தைக் கூப்பிட்டுக் கத்துகிறது. துன்பத்தாலோ, விழைவாலோ இரக்கத்துடன் ஒன்றைஒன்று கூப்பிடுவதே 'அழைத்தல்' ஆயிற்று. பிறகு ஒருவரைப் பெயர் சொல்லி அழைப்பதைக் குறித்தது. குகை எதிரே நின்று ஒருவர் கூவ, அதுவும் எதிரே கூவுவதை 'அவ் இசை முழை ஏற்று, அழைப்ப அழைத்துழி' என்னும் பரிபாடல் (19-63). இன்று விருந்து உபசாரம் செய்ய அழைப்பது, மகிழ்ச்சிமிக்குத் திருமண அழைப்பு விடுப்பது, அழைப்பிதழ் - பத்திரிகை வைப்பது, கூட்டத்திற்கு அழைப்பது என்று எத்தனை பொருள் வளர்ச்சிகள்!

குழறுதல், கூவுதல், கூப்பிடுதல், கரைதல், இரைதல், சீறுதல், காய்தல், பாய்தல், முழங்குதல், கர்ச்சித்தல், அழைத்தல் என மேலே நாம் சொல்லியவை எல்லாம் கருத்தை வெளிப்படுத்திப் பேசுதல் என்ற ஒரே பொருள் பற்றியவை. சொற்களை நாம் உருவாக்கியிருந்தாலும், நமக்கு இவற்றைக் கற்றுத் தந்தவை ஏனைய உயிரினங்கள். அவற்றுக்கு நன்றி கூறுங்கள்!

## 9. நீங்கள் கருப்பா? கறுப்பா? சொல்லுங்கள்!

கருப்பு, கறுப்புப் பற்றி முன்னரே பல முறை சிந்தித்திருப்பினும், ஐயம் தீர்ந்தபாடில்லை. சிலவற்றில் முடிந்த முடிவுக்கு வர இயலாத நிலையில் ஐயப்பாடுகள் தோன்றிக் கொண்டே இருக்கும். இச் சொற்களில் ரகர, றகரத் தடுமாற்றம் இருத்தல் உண்மையே. மக்கள் வழக்காற்று மொழியில், எல்லைக்கோடுகள் சிலசமயம் ஒன்றினொன்று மேவுவதால்தான், தடுமாற்றங்கள் ஏற்படுகின்றன.

மொழி, இயற்கை வகுத்த பரிணாமப்படிதான் வளர்கிறது. என்றாலும், அதைப் பயன்படுத்துபவன் செயற்கைத் தன்மையும் ஊடாட, இயற்கையும் செயற்கையும் போராட வாய்ப்பிருக்கிறது. அதனால் இவ்வாறு தடுமாறுமிடங்களிலேயே நம் கவனமும் அதிகமாகத் திரும்புகிறது. ஒருவழிக்கு அதுவும் நன்மையே.

தினமணியில் 'கருப்புப் பணம்' பற்றிய கட்டுரையைப் படித்த சேலம் வி. லதா, வி. பிரேமா இருவரும், 'கறுப்புப் பணம்' என்றுதான் இருக்க வேண்டும் என்று 'வாசகர் கருத்துப்' பகுதிக்கு மடல் எழுதினர். "இவ் இரு வடிவங்களுமே பண்டைக்காலத்திலிருந்த தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ளன. கார், கரிய கருமை போன்ற சொற்களுடன் தொடர்புள்ள கருப்பு நல்ல தமிழ்ச் சொல்லே" என ஆசிரியர், சேலம் சகோதரிகளின் மடலுக்குப் பிற்குறிப்பு எழுதியிருந்தார்.

சென்னைப் புதுப்பெருங்களத்தூர் புலவர் இரா. கிருட்டிணன் இதை மறுத்து, கருப்பு என்றால் பஞ்சம் எனப் பொருள்படுதலால், இந்த வடிவத்தில் மட்டும் 'கறுப்பு' என நம் முன்னோர் மற்றி வழங்கினர் எனவும், அம் மரபுப் படியே நாம் வழங்கவேண்டும் என்றும் நீண்ட கடிதம் எழுதியிருந்தார். அவர் இதைப்பற்றி வளர்தமிழ்ப் பகுதியில் விளக்கும்படி கேட்டிருந்தார்.

எழுத்தாளர் 'மகரம்' பெரிய கருப்பன் என்ற என் கையெழுத்தைப் பார்த்துவிட்டு எழுதிய கடிதத்தில், இதுபற்றிய கருத்தை விளக்கும்படி குறிப்பிட்டிருந்தார். "தங்கள் இயற்பெயர் பெரிய கறுப்பன் என்றிருக்க வேண்டும் என நினைக்கிறேன். நீங்கள் கருப்பன் என்று கையெழுத்திடுகிறீர்கள். 'கருப்பு' என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பஞ்சம் என்று ஒரு பொருளுண்டு. ஆதலால், நிறத்தைக் குறிக்கும்போது 'கருப்பு' என்று எழுதாமல். 'கறுப்பு' என்று எழுதுவதே முறை என்று நான் படித்த லயோலாக் கல்லூரி ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

'கறுத்த (கோபத்தால் முகம் கறுத்த) மாமுனி கருத்தை', என்ற கம்பர் பாடலைப் பார்க்கவும். கரிய, கருமை, கருஞாயிறு இங்கெல்லாம் 'கரு'சரி. ஆனால், கறுப்புதான் கருப்பைவிடப் பொருத்தம். தங்கள் அபிப்பிராயம் தேவை" என்பது அவர் கடித வாசகம்.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, 'சொற்களின் சரிதம்' என்று எழுதுவார். சொற்களுக்கும் வரலாறு உண்டு. மக்களிடையே செல்வாக்குப் பெறுவதில் மேடு பள்ளமுண்டு; உயர்ச்சி தாழ்ச்சி உண்டு. ஏன்? பிறப்பு இறப்புமுண்டு. மறுபிறப்புக்கூட உண்டு!

'மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' என்று, உரியியலில் தொல்காப்பியர் சுட்டிக் காட்டியுள்ளார். நிச்சயமாக ஒரு காரணம் உண்டு; ஆனால், அது விளங்கத் தோன்றாது என்றார் அவர். எனவே, காரணத்தைத் தேடுவது தவறில்லை.

## சார்புப் பொருள்கள்

சொற்களுக்கு உரிய அடிப் பொருள் தவிர்த்து, சார்புப் பொருள்கள் காலந்தோறும் தோன்றுவதுண்டு. இதனை ஆங்கிலத்தில் நிழற்பொருள் (Shade meaning) என்பார்கள். ஒன்றைக் குறித்த ஒரு சொல் அதனோடு தொடர்புடைய பிறிதொன்றையும் குறிக்கத் தொடங்கிவிடும். உரிச் சொல்லுக்கு இலக்கணம் கூறவந்த தொல்காப்பியர் இசை, குறிப்பு, பண்பு பற்றிய அடிச் சொற்களாய்ப் பற்பல சொல்லாக்கங்கட்கு அடிப்படையாவனவே அவை என்பதையும் 'பெயரினும் வினையினும் மெய்தடுமாறி' ஒரு சொல் பல பொருளையும் பலசொல் ஒரு பொருளையும் தருமென்பதையும் நன்கு விளக்குகிறார். இதனால் சொல்வடிவ வளர்ச்சி, பொருள்வளர்ச்சி இரண்டையுமே அவர் குறிக்கின்றார்.

## நிழல்

நிழல் என்பதன் பொருளை அனைவரும் அறிவர். நிழற்றுதல் - நிழல் செய்தல். அரசனின் வெண்கொற்றக்குடை நிழல் தந்து குடிமக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பர். இதனை நிழற்றுதல் என்னும்போது, வெறுமனே நிழல்தருதல் என்ற நேர்பொருள் மட்டுமன்றி, அருள்செய்தல் என்றும் பொருளாகிறது. "நினது நிழலில் வாழ்பவர்" என்றால், நின் கருணையினால் காப்பாற்றப்படுகின்றவர் என்பதாகும்.

நல்வயிரக் கற்களில் ஒருவித நிழலாடுவதால், அதன் ஒளி புலனாகிறது - சிறப்பாகத் தெரிகிறது. இதனைக் கருத்துள் கொண்டு, நிழல் என்றாலே, 'ஒளி' என்ற பொருளிலும், ஆளத் தலைப்பட்டனர். பதிற்றுப்பத்தில், காய்ச்சி உருக்கி

ஒளிவிடும் பொற்கட்டி 'அழல் வினை அமைந்த நிழல்விடு கட்டி' என்று குறிக்கப்படுகிறது (91). நிழல்விடு - ஒளிவிடுகின்ற. இங்ஙனம் நிழல் என்ற சொல்லுக்கு மரநிழல், குடைநிழல் மட்டுமன்றி, அருளென்றும் ஒளிஎன்றும் அமையும் பொருள்நீட்சியைத்தான் நிழற்பொருள் - சார்புப் பொருள் என்றனர்.

## கறுப்பு

முதலில் 'கறுப்பு' - வெகுளி, சினம், சீற்றம் என்ற பொருளையே குறித்து வழங்கியது. கறுத்தோர் - பகைவர். (கறுத்தோர் சினங்கொண்டவர் அதனால் அது வளர்ந்து எதிர்க்கும் பகைவரைக் குறிக்கலாயிற்று.) கறு - சினக்குறிப்பு. கறுத்து - கடுங்கோபங்கொண்டு, வெகுண்டு (மது. 347) கறுத்தல் - முற்றுதல் என்ற பொருளிலும் வழங்கியுள்ளது. ஒன்றின் முதிர்ச்சியைக் குறிப்பதிலிருந்து முற்றுதலுக்கு நீண்டுள்ளது. முற்றிய சினத்தால் முகம் கறுத்துப் போதலால், கருப்பு நிறத்தையும் இருட்டையும் குறித்தது சார்புப் பொருளேயாம். "வெப்பம் மிகுந்த பாலைவழியில் நடக்கும் போது, சூடு பட்டுப் பட்டுத் தலைவியின் பாதங்கள் கறுக்குந கொல்லோ" என்று கலித்தொகையில் வருகிறது (13). சூடுபட்டு அதனால் நிறம் மாறி, அழகிழந்து போவது இது. உலக வழக்கில் 'கறுத்துச் சிறுத்துப் போனதேன்?' என்று கேட்பார்கள். பழம் பாடல்களில் வெகுளியைக் குறிக்கவே தொண்ணூறு விழுக்காடு 'கறுப்பு' பயன்பட்டுள்ளது. சிவந்த நெருப்பு எரிந்து முடியும் போது கருத்துப் போவதுபோல், முற்றிய கோபத்தால் முகம் கருக்கும். மகரம் சுட்டிய கம்பர் பாடலில் 'கறுத்த மாமுனி' என்பது, கோபம் முற்றிய முனிவர் என்பதையே குறிக்கிறது. வெகுளிப் பொருளிலிருந்து கறுப்பு - கருநிறத்தைக் குறிக்க நீட்சி பெற்ற வரலாறு இது.

## சிவப்பு

சிவத்தல் - சிவப்பு நிறமடைதல். சங்கப் பாடல்களில் நிறத்தைக் குறிக்கவே பெரிதும் இடம்பெறும். இச் சொல், சில போது மட்டும் துணைப் பொருளாகக் கோபத்தைக் குறிக்கவும் பயன்பட்டுள்ளது. தலைவி 'சிவப்பாள் அன்று' (கோபிக்க மாட்டாள்) என்பது நற்றிணை (120). வீரன் சினந்து எழுவதையும் 'சிவந்து' என்னும் புறநானூறு (4). 'சிதைந்தது மன்ற நீ சிவந்தனை நோக்கவின்' (27) என்பது பதிற்றுப்பத்து. கோபங்கொண்டு பார்த்தால் என்று முகம் சிவந்து பார்ப்பதைக் குறிக்கும் இது. துணைப் பொருளேயாம். இன்றும் 'கண் சிவந்தால் மண் சிவக்கும்' என்றுதானே சொல்கிறார்கள்!

கறுப்பு - கோபம் முதற் பொருள், நிறம் துணைப்பொருள். சிவப்பு - நிறம் முதற்பொருள், கோபம் துணைப்பொருள். தொல்காப்பியர் நயந்தோன்ற

இலக்கணம் கூறிப்போகும் இடங்கள் பலவாகும். அவர் காலத்திலேயே இவ்விரு சொற்களும் இருபொருள்களும் தரும் வழக்கு இருந்தமையால், அவர் 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள'; நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப' என 'விளக்க இலக்கணப்' பார்வையில், விளக்கிச் சென்றுள்ளார். நற்றிணையில் தும்பியை (வண்டு), 'மெய்யே கருமை அன்றியும் செவ்வன் அறிவும் கரிதோ!' என்று தலைவி வருந்திக் கூறுவதாக வருகிறது (277). கருநெல்லி, கருந்துழாய், கருந்தேள், எனவும், கருகுதல், கரிய, கரிந்தது (மூக்கிற்) கரியார் (குறள். 277) எனவும், கார், காரிஎருது எனவும் 'கருமை' பல்வேறு வடிவங்களில் வழங்குவதைப் பழம் பாடல்களில் பரக்கக் காண்கிறோம்.

'கருப்பு' - கரிந்து வறட்சியான காலத்து ஏற்படும் பஞ்சத்தைக் குறித்த இடைக்காலத்தில், அதன் காரணமாக நிறத்தைக் குறிக்கக் 'கறுப்பு' வழக்குக் கூடியது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். கருங்கைக் கொல்லர், கருங்கைத் தச்சர் என வலிமையைச் சுட்டும் அடைமொழியானதும் கருமைக்குக் கிடைத்த துணைப் பொருளேயாகும். கருந்தொழில் - கொலைத் தொழில் எனப் பொருள்பட்டதும் அவ்வாறேயாம். சொற்பொருள் விரிந்து விரிந்து செல்லும் இயல்பை இவற்றால் நன்கறியலாம்.

கறுப்பன்- கோபக்காரன். கறுப்பணசாமி - கடுஞ்சீற்றமுள்ள சாமி என்பதை அதன் கையிலுள்ள உருவிய வாளைக் கொண்டு அறியலாம். சங்கிலிக் கறுப்பனும் பெரும் போர் மறவனே. இவை பழைய மரபுக்கும் ஒத்து வருகின்றன. அதே சமயம் இவற்றில் 'நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப' எனத் தொல்காப்பியர் போல ஒப்புக்கொள்ளத் தயக்கம் இல்லை.

'கறுப்பு' நிறத்தைக் குறித்ததிலிருந்து சில துணைவடிவங்களும் தோன்றியுள்ளன. உலக வழக்கில் 'கறுவலா ஒருத்தர் வந்தார்' என வழங்கும். கறுத்த உப்பு, என்பது ஒருவகை உப்பு. எனவே, நமக்கு ரகர, றகரத் தடுமாற்றமாகத் தெரிவன பொருள் நீட்சியால் விளைந்தன என்பதும், கருப்பன் என்பதால் தவறில்லை என்பதும் ஏற்றுக் கொள்ளத்தக்க உண்மைகளாகும். உலக வழக்கில் 'கறுப்பு' என்பது அட்டக் கருப்பு, பெருங்கருப்பு என்பது போல் அழுத்திச் சொல்லப் பயன்படுகிறது! அப்படிப் பார்த்தால், நீங்கள் கருப்பா? கறுப்பா? சொல்லுங்கள்! கருப்பு - நிறம், கறுப்பு - சினம், சிவப்பு - நிறம், சிவப்பு - சீனம். சார்ப்புப் பொருள் தடுமாற்றமே இது.

## 10. 'திறனறிந்து சொல்லுக சொல்லை'

திருவள்ளுவர், 'திறன் அறிந்து சொல்லைச் சொல்லவேண்டும்' என்றார். இக் கருத்தும் கணக்கில் வரும் 'தேற்றம்' போலப் பல வகைகளில் சார்த்திப் பார்க்கக் கூடியது. கேட்பவர் திறத்தை அறிந்து பேசவேண்டும்; சொல்பவன் தன் திறமையை அறிந்து, அதை வெளிப்படுத்துமாறு சொல்ல வேண்டும். யாவற்றுக்கும் மேலாகத் தான் சொல்லும் சொல்லின் திறனை (ஆற்றலை, தகுதியை, பொருத்தத்தை) அறிந்து பேசவேண்டும்.

சொற்களை அறியும் ஆற்றலே ஒருவரது மொழித்திறனை வளர்க்கும். தமிழில் 'சொல்லுதல்' என்ற சொல்லுக்கும், அதனோடு தொடர்புடையன வற்றிற்கும் தோன்றியுள்ள சொற்களைக் கணக்கிட்டால், அவை சொல்லுக்குள் அடங்காமல் விரிகின்றன.

### இசைத்தல்

ஒன்றை இசைத்தான் என்றால், யாழ் ஒலியை எழுப்பினான், சொன்னான் என இருபொருள்படும். இனிமையாகச் சொல்வதே இசைப்பதாகும். இயம்பினான் - இனிய குரலுடன் கூறுதல். வாத்தியம், வங்கியத்தில் எல்லாம் எள்ள இயம் இங்கும் இசைக்கிறது. குயிலுதல் சில போது சொல்லுதல் ஆகி உள்ளது. குயில்போல மொழிவது அது. சிலர் மிழற்றினான், மிழற்றினாள் என்பர். மழலைபோலச் சில சொற் சொல்லுதல், மென்சொற் சொல்லுதல், மெல்லப்பேசுதல் மிழற்றுதலாகும். இதுவும் இசைக் கருவிகளை இசைப்பதிலிருந்து வந்ததே. கொஞ்சுதலும் கெஞ்சுதலும்கூடக் காலிற் கிடந்து அசையும் சிலம்பின் ஓசையுடன் ஒப்புமையுள்ள பேச்சேயாகும். கொஞ்சுதல் - முத்தமிடுதலுமாம். கெஞ்சுதல் - தாழ்ந்த குரலில் பேசுதல், இரந்து குறையுறுதல்.

### அழுதல்

இனைந்தான் - சொல்லி அழுதான். உரற்றினான் - முழங்கினான். 'உரும் உரறு கருவிய' என இடி ஒலிக்கும் கருவி மாமழை கூறப்படும் (மலை. 357).

கண்ணீர் பெருகி அழுவது ஒரு மெய்ப்பாடு. அதைப் புலம்பினான், கதறினான், அலறினான், முனகினான், அரற்றினான் என்றெல்லாம் வேறுபடுத்திக்கூறப் பல சொற்கள் உள்ளன.

அரற்றுதல் - உறக்கத்தில் வாய் பிதற்றுதலுமாம். குறையைச் சொல்லி அழுவதே அரற்றுவதாகும். புலம்புதல் ஒருவரை இழந்துவிட்ட அவலத்தால் அழுவது. முனகுதல் நோய் முதலியவற்றால் வாய்முனகி, மென்மையாக அழுதல்.

## வேண்டுதல்

வேண்டினான் என்பது விரும்பிக்கேட்டான் எனப் பொருள்படும். கேட்டல் - உதவி கேட்டல். இரத்தல் - வறுமையால் ஈ என இரந்துநிற்றல், யாசித்தல். குறையுறுதலும் முறையுறுதலும் சிறிதுசிறிது வேறுபட்டவை. குறையைக் கூறித் தீர்க்குமாறு வேண்டுவது முன்னது; முறையிட்டு நீதி கேட்பது பின்னது. இதை முறையிடுதல் என்பர். அதாவது 'முறையோ' என வினவுவது. இன்று விண்ணப்பித்தல் ஒரு தனிவகை ஆனது. இறைவனிடம் தாயுமானவர்தான் தெளிவாக விண்ணப்பம் செய்தார். வள்ளலார் பெரு விண்ணப்பம்,சிறு விண்ணப்பம் எல்லாம் செய்து, இறைவனுக்கு வேண்டுகோள் விடுத்தார். இன்று நம் இளைஞர்கள் வேலைக்கு விண்ணப்பம் செய்வதையே தம் வாழ்வாகக்கொண்டு பழகி விட்டனர்.

ஒன்றை ஏவுதல், கட்டளையிடுதல், ஆணையிடுதல் எல்லாம் மேலாண்மையை நிறுவுவன. பேச்சு வழக்கில் பசப்புவது நடிப்பது, பாசாங்கு செய்வது; அசத்துவது பேசியே அயரச்செய்வது. பன்னுவது - சொன்னதைச் சொல்லுவது. சிலர் பன்னிப்பன்னிப் பேசுவார்கள்; தெளியமாட்டார்கள். பித்தருக்கும் பிதற்றலுக்கும் தொடர்புண்டு. பிதற்றல் - தொடர்பின்றிப் பொருளற்ற சொற்களைப் பேசுதல். உளறுதல் - தடுமாறிப் பேசுதல். உளறல் - பேரொலி என்பது பிங்கல நிகண்டு. உளறுவாயன் என்பதுண்டு. கழறுதல் - கடிந்து பேசுதல், கோபித்தல். உருமு (இடி) தான் உரறும், கழறும், பேரொலி செய்யும். 'கடுவிசை உருமின் கழறுதல்' (குறு. 158). கழறுவது சங்க அகப் பாடலில் பாங்கன் செயல். அதற்குத் தலைவன் விடைசொல்வது கழற்றெதிர்மறை எனப்படும். இகழ்ந்தான். இழித்தான், பழித்தான் என்பனவும் புகழ்ந்தான், இசைத்தான், புகன்றான் என்பனவும் ஒன்றற்கொன்று மாறுபட்டவற்றைத் தெரிவிப்பன.

## வலியுறுத்தல்

வலியுறுத்தல் ஒரு தொழிற்கலைச் சொல்லாய்ப் 'பலப்படுத்துதல்' எனப் பொருள்படும். அதிலிருந்து ஒரு கருத்தை வலியுறுத்திப் பேசுவதும், வற்புறுத்துவதும் வந்தன. யாழப்பாணத்தார் உரையாடுவதைக் 'கதைத்தான்'

என்பர். முன்பு நொடித்தான் என்றால் புதுச்செய்தி சொன்னான், கதை சொன்னான் என்றும் வழங்கியதுண்டு. நொடிதல் - சொல்லுதல் என்பது திவாகரம். எவ்வாறெல்லாம் பேசலாம், கருத்தைத் தெரிவிக்கலாம். வேண்டலாம், மகிழலாம், அழகாய்க் கலந்து பழகலாம் என்பதையும் இச்சொற்கள் நமக்குக் கற்பிக்கின்றன அல்லவா?

## ஓதுவது ஒழியேல்

## வினவுதலும் செப்புதலும்

செப்புதல் ஒரு கருத்தைச் சொல்லுதல். 'காமம் செப்புதும்' (நற். 79) என்றால், விருப்பத்தை வெளியிடுதல் பிறகு ஒருவர் ஏதாவது கேட்க - வினவ, அதற்கு. மறுமொழி சொல்வது செப்புதல் எனப்பட்டது. செப்பு - விடை பதில்.

முற்காலத் தமிழர்கள் மிகுதியாகச் செப்பிவந்ததைத் தொல்காப்பியர் 'செப்பும் வினாவும்' (496), 'வினாவும் செப்பே வினா எதிர் வரினே' (497) என்று வினா விடை வகைகளை விளக்கினார். இன்றும் தெலுங்கில் நன்றாகச் 'செப்பி' வருகிறார்கள். கேள்வி கேட்டு 'ஏடி செப்பு' என்று பதில் கேட்கிறார்கள். 'எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர், செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே' (388) என நன்னூலில் இலக்கணம் வகுத்த நாம், இன்று செப்பமாய்ச் செப்புவதை மறந்தே போனோம்!

## விடை, விடுத்தல்

ஒருவன் வினா எழுப்பினால், அதற்குப் பதில் விடுதல் வேண்டாமா? பதில் விடுப்பதே விடை (விடு + ஐ) ஆனது. விடை கூறுவது பதில் சொல்வது. பதில் என்ற அரபுச் சொல் விடைக்குப் பதிலாக வந்து, தமிழாகவே ஆகிவிட்டது! ஒருவனது வினாவுக்கு 'மாறு' - மறுமொழி சொல்ல வேண்டும். 'மாறு எதிர்கூறி' கலித்தொகை (116-15). மாறு + அம் = மாற்றம். மாற்றம், மறுமாற்றம், மறுமொழி எல்லாம் பதில் சொல்பவையே. இப்படி வந்த, 'மாற்றம்' பிறகு சொல் என்ற பொருளிலேயே வழங்கியதும் உண்டு. உத்தரம் - மறுமொழி. வடசொல் தமிழில் 'இறுத்தல்' என்பதும் விடை இறுத்தல், பதில் கூறுதல் ஆகும். இதிலிருந்து 'இறை' - விடை ஆகும். செவ்வன் இறை - நேர்விடை, உடன்பாட்டு விடை, மறைவிடை- எதிர்மறைவிடை.

விடுத்தான், பதில் சொன்னான், மாற்றம் கூறினான், உத்தரம் மொழிந்தான், விடை இறுத்தான் என்பனவும் வினவினான். கேட்டான் என்பனவும் ஒருபுறம் இருக்க, உணர்வைப் பதிலில் வெளிப்படுத்தும்

பாங்கினையும் எண்ணிப்பாருங்கள். இசைந்தான், ஒப்பினான், மறுத்தான், மறுதலித்தான், எதிர்த்தான் எல்லாம் வினாவுக்கு எதிரே எழும் உணர்வுகள், பேச்சாக வெளிப்படுத்தும் விதங்களே!

## உசாவுதல்

உசாவுதல் - வினாவுதல், விசாரித்தல். நலம் பற்றிக் கேட்டல், நம்மை ஒருவர் 'நலமா?' என உசாவினால், உண்மையிலேயே நமக்கு மகிழ்ச்சியாக இருக்கும். எப்படி உசாவவும் ஒரு துணை இல்லாதவர்கள் மிகவும் வருத்தப் படுவார்கள். கடிதத்தில், 'உன் அப்பாவை உசாவியதாகக் கூறுக' என எழுதினால், நலம் விசாரித்ததாகச் சொல் என்பது கருத்து.

உசா - சூழ்ச்சி, ஆராய்ச்சி, சிந்தித்தல். முன்பு சூழ்ச்சி என்ற சொல்லுக்கு ஆலோசனை செய்தல் என்றே பொருள். அரசன் மந்திராலோசனை செய்வதே 'சூழ்ச்சி' ஆகும். 'சூழ்ச்சி', முடிவு, துணிவெய்தல் என்பார் திருவள்ளுவர். கெட்டதையே 'சூழ்ந்து' பொருளும் கெட்டுவிட்டது: முன்பு இங்ஙனம் அணுக்கமான நண்பராகக்கொண்டு, 'நல்லதுகெட்டதற்கு, யோசனை கேட்கக் கூடியவரை 'உசாத்துணை' என்றனர். அக்காலத்தில் தோழி, தலைவிக்கு 'உசாத்துணை'யாக உதவினாள்.

## ஓதுதல்

வேதம் 'ஓதுதல்' என்பர். ஓதுதல் வாயால் சொல்லிக் காதால் கேட்டுக் கற்றுக்கொள்ளுதல். சுருதியாகிய வேதத்திற்குத் தமிழில் இதனால் 'ஓத்து' என்று பெயர். பாடங்கேட்டுப் பயில்வதும் ஓதுதல் ஆகும். ஓதல்பிரிவு - கல்வி கற்பதற்காகத் கணவன் மனைவியைப் பிரிந்து, அயல்நாடு செல்வதாகும். ஓதுதல், முறையாகச் சந்த இனிமையோடு சொல்லுதலும் பாடுதலும் ஆகும். தேவார ஓதுவார், அப் பாடல்களை இசைப்பவர். நமச்சிவாய மந்திரம் 'ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது' என்பர். பய பக்தியோடு சொல்லித் தியானிப்பது. ஔவையார் 'ஓதுவது ஒழியேல்' என்றார். எக்காலத்தும் படித்துக்கொண்டே இருக்க வேண்டுமாம். 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' என்பது உலக நீதி. 'ஓதி உணர்ந்தும்' - படித்துத் தெரிந்துகொண்டும் என்பது திருக்குறள். 'காதில் ஓதுதல்' என்பது பேச்சு வழக்கு அது மெதுவாகக் கோள் சொல்லுதல். குறைவாகக் கொடுப்பதையும் பேச்சில் 'ஓதினான்' என்பதுண்டு.

எவ்வாறெல்லாம் பாடம் ஓதினார்கள்? உணர்த்தினான், விளக்கினான், விவரித்தான், தெளிவித்தான், விரித்துரைத்தர்ன் என எத்தனையோ விதத்தில் பாடம் சொன்னார்கள்.

பேச்சுவகைக்குத் தமிழில் உள்ள சொற்கள் இவ்வாறு நூற்றுக் கணக்கில் உள்ளன. இவற்றை ஓதி உணர்வார் யாரென உசாவியறிதல் வேண்டும்.

## சொல்வன்மையும் பேச்சுத் திறமையும்

சொல்வன்மை என்னும்போது, நாம் பயன்படுத்தும் சொற்கள் மிக வலிமையுடையனவாய், இடத்துக்குப் பொருத்தமுடையவாய் அமைய வேண்டும். சொற்களைத் தேர்ந்து பயன்படுத்த வேண்டுமேல், எல்லாச் சொற்களையும் பற்றிய நுண்ணிய அறிவும், பயன்படுத்தும் திறமையும் வேண்டுமல்லவா?

## சொல்லழகு

சொல்லுதல், கூறுதல், மொழிதல், உரைத்தல், கிளத்தல் எல்லாம் ஒரே பொருளுடையன என்றாலும், சிறுசிறு நிழற்பொருள் வேறுபாடுகள், பயன்படுத்தும் இடவேறுபாடுகள் உடையன என்று கண்டோம்.

மொழிதலிலிருந்து எத்தனையோ புதுச்சொற்களை உண்டாக்கி இன்று வழங்குகிறோம். உரைத்தலிலிருந்து மிகப்பல சொற்கள் உருவாகியுள்ளன. இது வெற்றுரையன்று; உண்மையுரை!

## பேசுதல்

பேசுதல் என்ற சொல் பழம்பாடல்களில் அதிகமாகப் பேசப் படவில்லை. வாய் பேசுதல், பேசினான், பேச்சு என்ற சொற்கள் பேச்சு வழக்கிலேயே நெடுங்காலம் புழங்கிவந்துள்ளன. சங்க இலக்கியத்தில் காணப்படாத இச்சொல், முதன்முதலாக மணிமேகலையிலும், நாலடியாரிலும் காணப்படுகிறது. எளிய சொற்களை ஆளும் இயல்புடைய திருக்குறளிலும், இச்சொல் காணப்படவில்லை. 'மரமும் மண்ணும் கல்லும் பாவையும் பேசா' - மணிமேகலை (21-116). 'கடுங்குறளை பேசி' - நாலடியார் (189). இன்று பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்றாகிவிட்ட பேச்சு, முன்பு அரிதாக இலக்கியத்தில் ஏறி வளர்ந்திருக்கிறது. என்னைப் பேசிவிட்டான், பேச்சு மாறக்கூடாது, ஒரு பேச்சுக்குச் சொன்னேன், இன்று அடிகளார் பேச்சு

இருக்கிறதாமே - எத்தனை சார்புகள். சிலர் பரிந்து பேசுவர், அரசியலார் அடித்துப் பேசுவர், வழக்குரைஞர் வலிந்துபேசுவர் - அவர்கள் பேச்செல்லாம் நமக்கு எதற்கு? பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. பேச்சுக்கு இடமாகிவிடும், பேச்சு மூச்சில்லை. தாயுமானவர் பேச்சு மூச்சற்ற நிலையே பேரின்ப நிலை என்பார். 'பேச்சுப் பேச்சென்னும் பெரும்பூனை வந்தக்கால், கீச்சுக்கீச்சென்னும் கிளி' என்பார் ஔவையார். பேச்சு வழக்குக்கே மிக முக்கியத்துவம் தரும் மொழியியல் அறிஞர் பலராவர்.

## பொழிதல்

பொழிதல் மழைக்குரிய சொல். தட்டுத்தடங்கலின்றிப் பேசுவதை, மழைபோல் பொழிவதாகக் கொண்டு, இன்று புதிதாகப் படைக்கப்பட்ட சொல் 'சொற்பொழிவு'. இன்று சொற்பொழிவுகள் மூன்று மணி, நான்கு மணி நேரம் தொடர்ந்து நடைபெறும் நாடு தமிழகம் என்று நாம் பெருமைப்படலாம். நம் முன்னோர்கள், பாடம் சொன்னார்கள்; உரையாற்றினார்கள். நம்மைப்போல் சொற்பொழியவில்லை. நாம் முன்னேறி விட்டோம். நம் அரசியல்வாதிகள் சொற்பொழிந்துகொண்டே இருக்கிறார்கள். தமிழகத்தில் செயற்படுவார் ஒருவர் இருவர்; சொற்பொழிவாளர்களுக்கோ கணக்கு வழக்கில்லை. இன்று அது ஒரு 'பிழைப்பாகி விட்டது. ஒருவரை ஒருவர் திட்டுவதைச் 'சும்மா பொழிந்து தள்ளாதே' என்பர். மனைவி 'பொழியும் போது' கணவன் அமைதியாக அதைத் தாங்கிக்கொள்ளும் காட்சி, கண்கொள்ளாக் காட்சி. எல்லோரும் பொழிவதைப் பார்த்த மழை, நம் நாட்டில் தான் பொழிவதை அடிக்கடி நிறுத்திவிடுகிறது, வெட்கப்பட்டு!

# 11. வினைச்சொல்

சொற்கள் காலந்தோறும் வளர்கின்றன என்றால், உங்களுக்குச் சிரிப்பு வரும். தமிழில் பெயர்ச்சொற்கள் மாறியுள்ளன; வினைச்சொற்கள் வளர்ந்துள்ளன என்று கூறலாம். இம் மாற்றங்களைக் கண்டு, பலவகை உதாரணங்கள் மூலம் நாம் மாணவர்கட்குக் கற்பிக்க வேண்டும். அவ்வாறு கற்பிக்கவும் தமிழ்க் கல்வியை வளப்படுத்தவுமே நம் ஆய்வுகள் நடைபயில வேண்டும். பல கருத்துகளை முன்வைக்கும்போதுதானே, பலருக்கும் உள்ளக்கிளர்ச்சி ஏற்படுகிறது. அக் கிளர்ச்சி, ஆக்கவழியில் செயற்பட வேண்டும். பலர் கூடிச் சிந்திக்கவேண்டிய பெரும்பணி இது.

தொல்காப்பியர் ஏறத்தாழ 230 இடங்களில், 'என்மனார் புலவர்', 'புலன் நன்குணர்ந்த புலமையோரே' என்பன போன்ற தொடர்களை ஆள்வது ஏன்? பலரும் சிந்தித்து, சொல்லச்சொல்ல - எழுத எழுதவே புதிய தமிழ் இலக்கணமும் உருவாகும் என்பதை இதனால் அறியலாம்.

வந்துகொண்டிருப்பான், பேசிக்கொண்டிருக்கிறான், எழுதிக் கொண்டிருக்கிறான் என்பன போன்ற தொடர்வினைகளை இன்று நாம் ஆள்கின்றோம். முன்பு 'பறம்பு மலையை முற்றிய மூவேந்தர்' என்றே குறித்தனர். இன்று 'முற்றிக்கொண்டிருந்த' என நீட்டுகிறோம். 'வரை இழி அருவி' இன்று, 'வரையிலிருந்து ஓடிவரும் - கீழிறங்கும்' அருவியாகும். 'ஏற்பாடு பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்' என்பதை அன்று, 'ஏவினர்' என முடித்துவிடுவர். 'முற்றுபு கனிவளர் அடுக்கம்' என்பதை இன்றைய மொழி நடைப் படுத்தினால், 'முற்றிப் போன கனிகள் வளர்ந்திருக்கும் அடுக்கான மலைச்சாரல்' என்றுதானே விளங்கும்படி விரித்தெழுவோம். இவ்வாறே எண்ணிப்பார்த்தால், இன்று வினைச்சொற்கள், 'நீண்டு வளர்ந்திருக்கும்' நிலைமை தெளிவாகும்.

அன்றும் எவ்வாறு பேசினார்களோ? உரைநடையில் எவ்வாறு எழுதினார்களோ? நாம் இன்று படிப்பது செய்யுள்மொழி - பாணர்மொழி - இலக்கிய மொழியாகும். இதனைச் செய்யுள் வடிவத்திற்கேற்பவும் சந்தம், இசை, ஓசைக்கேற்பவும் மேலும் மேலும் செறிவாகப் பயன்படுத்தியுள்ளனர். இருந்தாலும் அன்று, இன்றைய அளவு வினைச்சொற்களை நீட்டி முழக்கும் பழக்கம் இருந்திராது எனலாம்.

## செய்யுளுள் வரும் கூட்டுவினைகள்

கூட்டுவினைகள் இன்று பெருவழக்காக உள்ளன. வந்துவிட்டார், போயிருப்பார், உடைந்துபோனது எனவரும் கூட்டுவினைகளை, நுட்பமான பொருள் வேறுபாடுகளுடன் நாம் ஆள்கிறோம்.

வந்துவிட்டார் என உறுதிப்பாடு தோன்றவும், போயிருப்பார் என உத்தேசமாகவும், உடைந்துபோனது என அவலக் குறிப்போடும் இன்று நாம் பேசிக்கொள்வதுபோல், அன்றைய உரையாடல் இருந்ததா எனத் தெளிய முடியவில்லை. ஆயினும், துணைவினை ஆட்சி இருந்ததைத் தேடிக் கண்டுபிடிக்க முடிகிறது. குறுந்தொகையில், 'விரித்து விட்டன்ன' (168) என இடம் பெறுகிறது. பனைஓலைக் குடையில் பிச்சி அரும்புகளைப் போட்டு மூடி வைத்து, விடியற்காலத்தில் அக்குடையை விரித்து விட்டால், குளிர்ந்த மணம் வீடெங்கும் பரவுமாம். 'விரித்துவிட்டால் என்பதில், விரித்து மணம் பரவும் படி செய்தலாகிய குறிப்பும் உளது! 'நோய் நொந்துறைவி' (குறு. 492) என்பதில் நொந்துறைவி, நொந்துறையும் தலைவி ஆகும். நொந்துறைதல் - வருந்தி இருத்தல். கூட்டுவினைக்கான தோற்றத்தை இதில் காணலாம். 'படர்சுமந்து எழுதரு பையுள் மாலை' (குறு. 195) - துன்பத்தைச் சுமந்துகொண்டு வருகின்ற துயர்மிகுந்த மாலை என்பது பொருள். எழுதருதல் எழுதல்தானே? இங்ஙனம் ஒரு சொல் நீர்மைத்தாகிய கூட்டுவினைகளே, முன்பு அருகிக் காணப்படுவன. இன்றைய கூட்டுவினைகள் 'கெட்டுத் தொலைந்தான்' என்பதுபோல், இரு சொல் நீர்மைத்தாயும் காணப்படுகின்றன.

தொடர்ந்தார் என்பதைப் பெரிய புராணத்தில் 'தொடரலுற்றார்' (189) என வரக்காணலாம். தொடரலாயினர் என்பது இக்கால வடிவம். கிழித்து விட்டான் என்பது 'கீறியிட்டான்' (பெரிய. 191) எனப்படுகிறது. துயில்கொள்ள, பள்ளியமர்ந்தருள என்பன போன்ற வடிவங்கள், சேக்கிழாரால் பயன்படுத்தப் படுகின்றன. அமர்ந்தருளுதல், போற்றுதல் நிமித்தம் வருகிறது. பள்ளியமர்தல், துயிலமர்தல் உறங்குதல் ஆகும். பள்ளி அமர்ந்து அருளுதல் மரியாதை நிமித்தம் வரும் அடுக்காகிறது. இடைக்காலத்தில் துணைவினை ஆட்சி கூடியுள்ளது. இன்று பேச்சு வழக்கில் உள்ள புதிய வடிவங்கள் பலவாகும். அவற்றுள் சிற்சிலவற்றுக்கு முன்பே அடிப்படைகள் காண்கிறோம்.

முன்னைய இலக்கண நூல்கள் சூத்திர வடிவமாய், மருந்துக் குளிகைகள் போல (Capsules), அனைத்தையும் உள்ளடக்கின. அவை எடுத்துக்காட்டுகளே கூற இயலா நிலையின. வழிவழியாக உரையும்

உதாரணமும் வாய்மொழியாகவே கூறப்பட்டு வந்தன. இன்றைய இல்க்கணங்கள், உதாரணங்களால் நிரப்பப்பட வேண்டும். அவற்றைப் படித்துப் போகும்போதே, மாணவனுக்கு அவைபற்றிய இலக்கணங்கள் மனத்தில் பதிய வேண்டும். அங்ஙனமாயின், கூட்டுவினை துணைவினை பற்றிய சான்றுகள் அனைத்தையும் பேச்சு வழக்கிலிருந்து தொகுக்க முயல வேண்டும். அவற்றை வகைப்படுத்த வேண்டும். அவை பற்றிய விளக்கங்களைப் பள்ளி மாணவர்க்கு, கல்லூரி மாணவர்க்கு, மக்களுக்கு எவ்வெவ்வாறு அறிமுகப்படுத்தி, விளக்குவது எனத் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும். இளம் மாணவப்பருவத்திலிருந்தே, இவைபோன்ற இலக்கணக் கூறுகளை மனத்திற்கு இசையுமாறு அறிமுகப்படுத்தும் முயற்சியே வேண்டத் தக்கதாகும்.

ஒரே துணைவினை, பல்வேறு சொற்களில் அமைந்து வழங்குவதைக் காணலாம். பிறகு ஒரு சொல் பல்வேறு துணைவினைகளால் பல பொருள் படுவதையும் காணலாம். 'ஏற்கெனவே உள்ள வினை' போதும்; துணைவினை வேறா? என்று கேட்காதீர்கள்!

'ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே'

## ஏத்துதல்

ஆத்தி சூடி - ஆத்திமாலை சூடிய சிவன். இதைப் பலர் 'ஆத்திச்சூடி' என எழுதுவது தவறு. சிவபெருமானை ஏத்திப் பரவித் தொழுவோம் எனத் தொடங்குவதால், அத் தலைப்புச் சொற்களே நூலுக்குப் பெயராயின. கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, வாக்குண்டாம் எல்லாம் இவ்வாறு முதற்சொற்களால் அமைந்த பெயர்களே.

ஏத்துதல் - புகழை எடுத்து மொழிதல். திவாகர நிகண்டு, துதித்தல் என்று பொருள் சொல்கிறது. ஏத்துதல் - புகழ் மொழிகளை ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்குதல். ஏத்துதல்தான் அருச்சனை. உலக வழக்கில் 'என்னை ஏத்தாதே' என்பர். குறிப்பில் திட்டுதலைச் சுட்டுவது இது.

## எடுத்தல்

எடுத்தல் - உண்டாக்கிச் சொல்லுதல், பலகாற் கூறுதல், உயர்த்துப் புகழ்தல், தூக்குதல், மிகைபடக் கூறுதல். உலக வழக்கில், 'என்னை எடுத்தாதே' என்பர். குற்றங் குறைகளை கற்பித்துக் கூறி, என்மேல் சுமத்தாதே

என்பது அது. கற்பனையாக ஒருவரைப் பற்றிக் கதைகட்டி, வதந்தி பரப்புவதையும் 'எடுத்தல்' என்பர். 'இழிப்பும் எடுத்தேத்தும்' என்பது நர்லடியார் (163).

## பரவுதல் முதலிய சொற்கள்

பரவுதல் - பாடித் துதித்தல். போற்றுதல் - போற்றி வணங்குதல். போற்றுதலாவது, பாதுகாத்தல், பேணுதல், கண்ணுங்கருத்துமாக இருத்தல், வழுத்துதல், வாழ்த்துதல், இறையை வாழ்க எனச் சொல்லி வணங்குதல்.

புகன்றான் என்ற சொல், விருப்பத்தோடு ஒன்றை வெளிப்படுத்துவது. புகற்சி - விருப்பம். புகன்ற - விரும்பிய. புகலுதல் - புகழ் கூறுதல்.

விதந்தான் - மிகைபடக் கூறுதல், மிகுத்துரைத்தல். சூத்திரத்தில் கூடுதலாக ஒரு சொல் வந்துவிட்டால், அதை 'விதப்புக்கிளவி' என்பர்.

நுதலுதல் - கருதுதல், சிந்தித்தல். இலக்கணத்தில் 'நுதலுதல்' ஆட்சி மிகுதி. நுதலிப் புகுதல் ஓர் உத்தி. சொல்லப்போவது இன்னதென்று முன்னதாகச் சொல்லிவிட்டுத் தொடங்குதல். நுதலியது யாதெனில் - சொல்லியது என்னவென்றால்.

நுவலுதல் - சொல்லுதல், புகழ்ந்து கூறுதல். பழம் பாடல்களில் இதன் பல வடிவங்களைக் காணலாம். நுவலாதே - கூறாதே. நுவலாதி - சொல்லாதே (கலி. 42-25) நுவலவும்படும் - சொல்லவும்படும் (புறம். 16) நுவலா நுவற்சி என்பது ஒட்டணியின் வேறு பெயர். அதாவது ஒரு கருத்தைச் சொல்லாமல் சொல்வது. வேறு ஒன்றைச் சொல்லி அதன்மூலம் உணர்த்துவது.

நவின்று என்றும் ஒரு சொல் வழங்கியது. நவிலுதல் - பலமுறை சொல்லுதல். ஒன்றை வினவிப் பதிலிறுப்பதுபோல் பேசுவதையும் நவிலுதல் என்றனர். 'தான் நவின்று உரைப்போன்' என்பது சிலம்பு (15-20). நுதலுதல், நுவலுதல், நவிலுதல் எல்லாம் இன்று கடினமானவை போல் தோன்றினாலும், ஒரு காலத்தில் ஏட்டிலும் எழுத்திலும் பெருவழக்காய்க் காணப் பட்டவையாகும்.

இன்று அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார் என்று கூறுகின்றனர். முன்பு இவ்வாறு நுதலினார் எனக் குறித்தனர். குறித்தார், குறிப்பிட்டார் புதுப் பொருட் சாயலுடன் இன்று வளர்ந்துள்ளன. அக்காலக் 'குறிப்பு' 'குறித்தல்' எல்லாம்

குறிக்கோட் தொடர்புடையன. இன்று ‘குறிப்பு’ எழுதிவைப்பது புது வளர்ச்சி. நுவன்றவர், நவின்றவ்ர் எல்லோரும் இன்று குறித்தும், குறிப்பிட்டும் பேசி வளர்ந்துள்ளார்கள்.

## என்றான், என்கிறான்

என்று கூறினான் என்பதை, ‘என்றான்’ என்று இன்று முடித்து விடுகிறோம். என்கிறான், என்கிறார், என்கிறது என்றெல்லாம் வருவன சொற்சுருக்கம் பெற்றன. முன்பு ‘என்க’ - என்று சொல்க என வரும் (மணி. 29-76). ‘என்குவை ஆயின்’ - என்று கேட்குவை (புறம். 13-1). என்குவன் (நற். 6-6). என்கின்ற (மணி. 29-224). என்னாமை - என்று சொல்லாதிருத்தல். என்னாதி - என்று சொல்லாதே. இவ்வாறு முன்பே தோற்றுவிக்கப்பட்ட இவை, இன்று பெருவழக்காகியுள்ளன.

ஒன்றைச் சொல்வதை, வெளியிடுவதைப் பற்றிய சொற்களை எண்ண எண்ண மேன்மேலும் நுவலலாம் என்று தோற்றுகிறது. இதைப் புகழ்வோம் என யானும் விரும்புகிறேன். நுதலியது யாதென அறிந்தால், தமிழ்ச் சொல்லைத் ‘தொழுது படித்திடடி பாப்பா’ என்றதன் பொருள் விளங்கும்!

## 12. திருவேங்கடத்தான் 'வெங்கட்' ஆனதேன்?

### புளியறை

'அறை' என்பது சிறுசிறு குன்றுகள் சூழ்ந்த மேட்டுப் பகுதியைக் குறிக்கும். புளிய மரங்கள் நிறைந்த மேட்டுநிலப் பகுதி ஊர் 'புளியறை' எனப் பட்டது. அறை என முடியும் ஊர்ப்பெயர்கள் பலவாகும். அதைப் 'புளியரை' என்பது தவறு; பொருள் வேறுபடும். அதுபோல 'கீறல்' சரியன்று. கீறினான், கீறப்பட்டது, தேங்காயைக் கீறு, கீற்றுக் கீற்றாக எடு என்றெல்லாம் வரும். உடம்பில் கத்தியால் கீறினால் காயமேற்படும். சிலேட்டில் கோடுகோடாகக் கீறுவதையும் கீறல் என்பார்கள். இடக்கைப் பெருவிரலில் மை ஒற்றிக் கையொப்பத்திற்குப் பதிலாக வைப்பதையும் 'கீறல்' என்பதுண்டு. கைவிரலை வைத்து, இழுத்துவிடுவதால், அப்படி வந்ததுபோலும்!

'கறையான்' தான் சரி; கரையான் அன்று. கறை அழுக்கு, குறை. மதியில் கறையுண்டு - களங்கமுண்டு. சிவபெருமான் நஞ்சுண்டு, கண்டம் கறுத்ததால், 'கறைக்கண்டன்' எனப் பட்டார். கறையானும், அரிக்கும்போதே, அப் பொருளைக் கறுப்பாக்கிவிடும். ஒரு பொருளை அரித்துத் தின்று களங்கப் படுத்தும் கறையானை, அக்கறையோடு ஒழித்துவிடவேண்டும். இன்றேல், ஒரு கணத்தில் யாவற்றையும் 'விழுங்கி' விடும். தமிழ் நூல்கள் பல ஏடுகளாக இருந்தபோது, கறையான் வாய்ப்பட்டு அழிந்தொழிந்தன. முன்பு அதைச் சிதல், செல் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். செல்லரித்த பொருள்கள் ஒன்றுக்கும் உதவா.

### அக்காள் அக்கா ஆன கதை

அக்காளைத்தான் 'அக்கா' என்று கூப்பிடத் தொடங்கினோம். மறவனை மறவா எனவும், மீனாளை மீனா எனவும் அழைக்க முற்பட்டு, அதுவே பழகிப்போய்விட்டது. அக்கச்சி, தங்கச்சி என ஒரு காலத்தில் வழங்கியிருக்கிறது. அக்காவையே அம்மாவாகக் கொண்டாடும்பொழுது அக்கம்மா ஆகியுளது. "அக்கா அக்கா என்றுநீ அழைத்தாய், அக்கா வந்து கொடுக்கச் சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே" என்பது பாவேந்தர் பாரதிதாசன் பாட்டு. இந்த 'அக்கை'யை, இறுதியிலுள்ள 'ஐ'யை 'ஆ' வாக நீட்டிப்பதும் தமிழின் இயல்புகளில் ஒன்றேயாகும். தங்கை, தங்காள் என இருவகை வழக்குண்டு. 'நல்லதங்காள்' என்ற நாட்டுப்புற நாடகம் முன்பு பெரும்புகழ்பெற்றது.

## கல்கண்டு; பல்பசை

இவை கற்கண்டு, பற்பசை என வருவதுதானே முறை என்பது மற்றொரு வினா. இன்றும் பேச்சு வழக்கில் இத்தகைய புணர்ச்சிகள் இயல்பாக அமைந்து வழங்குவதைக் காணலாம். தற்புகழ்ச்சி, மற்போர், நற்பெயர், முற்பட்டது. பற்கள் என்றுதான் சொல்கிறோம். படித்தவர்கள்தான், இவை கடினமோ எனச் செயற்கையாக உணர்ந்து, 'பல்பசை' என முற்படுகிறார்கள். 'கல்கண்டு' என்று சொல்லும் வழக்கமும் இருக்கிறது என்பது உண்மைதான். அப்போது இரண்டாவது 'க' அழுத்திச் சொல்லப்படுகிறது. பல்பசை என்பதிலும் இரண்டாவது 'ப' அழுத்தம் பெறும். காலப்போக்கில் இவை உறழ்ந்துவரும் பாங்கை நோக்கிச் செல்கின்றன என்றாலும் கற்கண்டு, பற்பசை என வழங்கும் மரபைப் பின்பற்றுவதே முறையாகும்.

## வெங்கட்ராமனா, வெங்கடராமனா?

இரண்டும் முறையானவை அல்ல. வேங்கடராமன் என்பதே முறையானது. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்" என்பது, தொல்காப்பியப் பாயிரம். வேகும் கடம் - வெப்பத்தால் வறட்சியுற்று வாடும் காடு 'வேம்கடம்' ஆனது. கடம், கடறு, காடு என்பன ஒருபொருட் சொற்கள். இவ் வேங்கடம் தமிழகத்தின் எல்லையாக, வேங்கடமலைத் தொடர் என வடக்கே மிக நீண்டு மத்திய ஆந்திரப் பகுதிவரை செல்வது . ஏழுமலைத் தொடர்கள் அமைந்து விளங்குவதால், இதை 'ஏழுமலை', "எழுமலை' என்றெல்லாம் அழைத்தார்கள். வேங்கடமுடையான், வேங்கட மலையான் எனப் பக்திக் காலத்தில், அங்கிருந்த இறைவனை அழைத்தார்கள். திருவேங்கடத்தில் மீனாய்ப் பிறக்கவும் குருகாய்ப் பறக்கவும் வழியாய், படியாய்க் கிடக்கவும் குலசேகராழ்வார் ஆசைப்பட்டார். திருமங்கை மன்னர் 'தீர்த்த நீர்த்தடம், சோலை சூழ், திருவேங்கடம் அடை நெஞ்சமே' என்றார். அங்கிருக்கும் இறைவன் மீது கொண்ட அன்பால் அத்தலத்தின் மீதே மிக ஈடுபட்டு அனுபவித்துப் பாடிய ஆழ்வார் பாடல்கள் தான், இன்று திருவேங்கடம் உலகளாவிய புகழ்பெறும் சிறப்பை அளித்துள்ளன எனலாம். இதைப் பின்பு நூறுவிதமாகப் பெயர்சூட்டப் பயன்படுத்திக் கொண்டார்கள். திருவேங்கடம், திருவேங்கடத்தான், வேங்கடராமன், வேங்கடகிருஷ்ணன் என இவ்வாறெல்லாம் அழைத்தனர். இருபெயர்கள் இணையும்போது வேங்கடராமன், வெங்கடராமன், வெங்கட்ராமன் என மருவியது! புதிய காலப் போக்கில், வெங்கட் ராமனும்

மாறி, 'வெங்கட்' ஆனதே பார்க்கலாம்! ' 'வெங்கட்' என்பது, கிரிக்கெட்டுக்கு மிகப் பொருத்தமான பெயர்போலத் தோன்றுகிறது. ஆனால், அது வேங்கடம் திரிந்த 'வெங்கட்' என்று பலருக்குத் தெரியாது. ஏதோ, ஆங்கிலப் பெயர்போல ஒலிப்பதால், நவநாகரிகமான பெயரெனப் பலரும் மதிக்கிறார்கள். உண்மை தெரிந்தால், என்ன நினைப்பார்களோ?

## ஓட்டுநர், இயக்குநர்

இவற்றை ஓட்டுனர், இயக்குனர் என்றே பலர் தவறாக எழுதிவிடுகிறார்கள். இவை பெயர்த்தன்மைப் படும்போது ஓட்டுநர், இயக்குநர் என்றுதான் வரவேண்டும். சங்க காலத்தில் பொருநன், மகிழ்நன்போன்ற வழக்காறுகள் காணப்படுகின்றன. ஓர் உதாரணத்தின் மூலம் இதை விளக்கலாம். நிறுவனர் வேறு; நிறுவுநர் வேறு; நிறுவனர் என்னும்போது நிறுவியவரை - அதனால் இந்நிறுவனத்தை நிறுவிய இவரை 'நிறுவனர்' என்று கூறுகிறோம் என விளக்கக் கூறிவிடலாம். நிறுவுநர், நிறுவும் பண்புடைய, செயலுடைய ஒருவரைக் குறிக்கும் பெயராக அமைகிறது. பல நிலையங்களை நிறுவுபவராக ஒருவர் விளங்கினால், 'அவர் ஓர் நிறுவுநர்' என்று கூறிவிடலாம். ஓட்டுநன் - காரை ஓட்டுகிறவன். இயக்குநன் படத்தை இயக்குகிறவன். எனவே, இவற்றைத் தந்நகரமிட்டே எழுதவேண்டும்.

## கைலாயம், கயிலாயம்

கைலாசம், கைலாயம் என்பதனிலும் கயிலாயம் என எழுதுவதே பொருள் தெளிவு தரும். காரைக்குடிக்கு அருகேயுள்ள இளையாத் தங்குடியில், அருள்மிகு நித்திய கலியாணி கயிலாயநாதர் திருக்கோயில் இருக்கிறது. திருமலைச் சிறப்பைப் பாடவந்த சேக்கிழார், 'கயிலைத் திரு மாமலை' என்றுதான் கூறினார். மைலம்மாள் என்பது தவறு; அதை மயிலம் மாள் எனவே எழுதவேண்டும். அதுபோல மயிலாப்பூர் தானே தவிர மைலாப்பூர் அன்று. 'கைலாஸ்' எனப்படும் வடசொல்லைத் தமிழில் கைலை, கைலாயம் எனச் சொல்லிப்பாருங்கள் - குழப்பமேற்படுவதை உணர்வீர்கள்! எனவே, தமிழ் வடிவமாக ஆளுமிடங்களில் கயிலாயம், கயிலைமலை, கயிலயங்கிரி என இவ்வாறு வழங்குவதே சிறப்பு என அறியலாம்.

தமிழ் மணி 9 - 7 - 1990

# 13. ‘இன்னும்’ ‘இன்னமும்’

“மிகவும் கற்றவர்கள்கூட நூற்கள் என்றே எழுதுகின்றனர். புகழ்பெற்ற கவிவாணர்களின் பாடல்களில்கூட ‘நூற்கள்’ காணப்படுகிறது. ‘நூல்கள்’ என்றுதான் வருமே தவிர, நூற்கள் என அறவே வராது. கால்கள், வேல்கள், தோல்கள் இங்கெல்லாம், காற்கள், வேற்கள் எனச் சொல்லிப் பாருங்கள்... பொருள்களை - பொருட்கள் என்பதும், நாள்களை - நாட்கள் என்பதும், நூல்களை - நூற்கள் என்பதும், ‘செந்தமிழாக எழுதுகிறோம்’ என்ற நினைப்பில் நிகழ்ந்துவிட்ட தவறுகளேயாகும்.”

‘இன்னும் கொஞ்சம் கொடுங்கள்’ என்று சற்றுக் கூடுதலாகக் கேட்கிறோம். இன்னும் சற்று உரத்துப் பேசுங்கள் என்று ‘பேசி’யில் கேட்கிறோம். இன்னும் கூடுதலாக வை என்று வானொலியைத் திருப்பச் சொல்கிறோம். இந்தப் படை போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா’ என்று அரசியலில் ஊர்வலம் போகிறார்கள். இங்கெல்லாம் மேலும், கூடுதலாக என்று பொருள். இன்னும் என்பதுதான் இலக்கியத்திலும் பேச்சிலும் பெரிதும் வழங்குகிற தென்றாலும், இன்னம் என்பதும் காணப்படுகிறது. ‘இன்னமும்’ இன்னும் என்பதனிடையே அம்சாரியை சேர்த்ததுதான். இதில் உம்மை பெரிதும் மறைந்து, ‘இன்னம்’ என்றே வரும்.

சென்னை, அண்ணல் அகுமது “இன்னம் இன்னும் - எது சரியான வழக்கு? மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தங்கப் பதக்கம் பெற்ற தமிழறிஞர் ஒருவரின் நூல்களில் இன்னம் என்னும் சொல்லாட்சியே பரவலாகக் காணப்படா நின்றது” என எழுதியுள்ளார். இங்ஙனம் தங்கப் பதக்கம் பெற்றவர்களில், அண்மையில் மறைந்த தீபம் நா. பார்த்தசாரதி குறிப்பிடத்தக்கவர். இன்னும் ஒருவரிருவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் முதலிடம் பெற்றுத் தங்கப் பதக்கம் பெற்றிருக்கலாம். அது எளிதன்று. முன்பு இத்தேர்வுகளில் வெற்றி பெறுவதே கடினம். அதற்கு இன்னமும் ஆழமாக முயன்றிருக்க வேண்டும்.

இன்னும், இன்னம் என்பன மேலும், மறுபடியும் என்பதோடு, ‘இப்பொழுது வரைக்கும்’ என்ற பொருளிலும் ஆளப்படுகின்றன. திருக்குறளில், ‘இன்னும் இழத்தும் கவின் (1250) என மேலும் என்ற பொருளிலும், ‘இன்னும் உளேன்’ (1263) என இப்பொழுதும் என்ற பொருளிலும் இச்சொல் ஆளப்படுகிறது. மலைபடுகடாத்தில் ‘இன்னும் வருவதாக’ (மேலும் வருக) என இன்பநுகர்ச்சி பற்றிக் கூறப்படுகிறது. (354). வாடைக் காற்று ‘இன்னும் வருமே தோழி’ என்பது நற்றிணை(89)

இன்னும் பசிக்கவில்லை. இன்னும் வரவில்லை. இன்னும் பார்க்கவில்லை என்றால், இந்த நேரம் வரை என்பது பொருள். அவற்றை 'இன்னம் பசிக்க வில்லை' என்றும் கூறுவதுண்டுதானே?

## வானத்தில் ஒரு நாட்காட்டி

குறுந்தொகை 307 ஆம் பாடலில், 'இன்னம் பிறந்தன்று பிறையே' என்று வருகிறது. இன்று சுவரில் மாட்டியிருக்கும் நாட்காட்டிபோல், அன்று வானம் தான் நாட்காட்டியாக விளங்கியது. மகளிர் பிறைமதியைப் பார்த்துப் பார்த்து நாளை எண்ணினர். மூன்றாம் பிறைதான் கண்ணுக்குத் தெரியும். அப்பிறை கண்ணில் பட்டதும், பதினான்கு நாள் தேய்பிறையும் கழிந்து அமாவாசைக்குப் பிறகு மீண்டும் வளர்பிறை வந்ததைக் காட்டுமாதலின், நாளும் மதியமும் ஓடுவதைக் கண்டு தலைவி நொந்துகொள்கிறாள். "யானைகள் உலாவும் காட்டுவழியில் பிரிந்து போன நம் தலைவர் நம்மை மறந்துவிட்டாரோ? செவ்வானத்துப் பரப்பிலே விரைந்து அதோ இன்னமும் பிறை பிறந்துளதே" என்று தலைவி தோழியிடம் அழுகிறாள். மூன்றாம்பிறை அந்திப்போதில் விரைந்து தோன்றி மறைந்து விடுமல்லவா?

இதில் 'இன்னம் பிறை பிறந்தன்று' என வருகிறது. திருமுருகாற்றுப்படை இறுதி வெண்பாவில், 'இன்னம் ஒருகால் எனது இடும்பைக் குன்றுக்கும்' என வருகிறது. "முன்பு கிரவுஞ்சுக மலையை உன் வேலை எடுத்து வீசி அழித்ததுபோல, முருகா! இன்னம் ஒரு முறை எனது துன்பமலையையும் தூளாக்க உன் வேலை எடுப்பதே தக்கது" என்பது, இப் பாட்டுப் பொருள். இங்ஙனம் இன்னமும் ஆங்காங்கு இடம் பெறுகிறது. இன்னும் தேடினால், இன்னமும் பல இடங்கள் கிடைக்கலாம்தானே!

## ஒன்பது,தொண்ணூறு, தொள்ளாயிரம்

தமிழ் எண்களில் எட்டுக்குப் பிறகு ஒன்பதும், எண்பதுக்குப் பிறகு தொண்ணூறும், எண்ணூற்றுக்குப் பிறகு தொள்ளாயிரமும் வருவதேன் என்ற வினா, தொன்று தொட்டு நிகழ்ந்துவந்திருக்கிறது. தொண்ணூறு பெரிதா, எண்ணூறு பெரிதா என்றால், சற்றுத் தடுமாறத்தான் செய்கிறது.

ஒரு நண்பருக்கு ஓர் ஐயப்பாடு; " எண்பது என்ற பதின் இலக்கத்தை (tens) அடுத்துவருவது தொண்பதாகத்தானே இருக்கவேண்டும். ஏன் தொண்ணூறு என்கிறோம்? இதுபோலவே தொள்ளாயிரம் என்பது 9000 - ஐத்தானே குறிக்க வேண்டும்? ஒன்பதிலும் 'பதி' ஒட்டிக்கொண்டிருப்பதேன்? 'தொள்' என்பது எதைக் குறிக்கிறது?"

ஒன்பது - பத்து இரண்டும் கூடித் தொண்ணூறு ஆனதாகவும், ஒன்பது - நூறு இரண்டும் சேர்த்து தொள்ளாயிரம் ஆனதாகவும் நன்னூலும் கூறும். இலக்கணங்கள், இருப்பதற்குச் சமாதானம் கூறுகின்றன. இவை உண்மை காணாமல் விட்டுவிட்டன. இன்று பலர் இவற்றைப் பற்றிப் பலவாறு ஆராய்ந்துள்ளனர்.

பத்துக் கைவிரல்களை வைத்து எண்ணும் பழக்கத்தால் உலக மொழிகளில் எல்லாம் பத்துப் பத்தாக எண்ணும் வழக்கம் தோன்றியது. இது வாய்மொழியாக மனிதன் எண்ணிய காலத்திலேயே ஏற்பட்டது. பிறகுதான் எழுத்துத் தோன்றியது. திருவள்ளுவரும், 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப' என்று எண்ணுக்கு முதலிடம் தருவர். பத்துடன் ஒரு முடிவு ஏற்படுவதால், அதற்கு முந்தையது என்ற பொருளில், ஒன்று குறைந்த பத்து - ஒன்பது என எண்ணினர். ஒன்று, இரண்டு தொடங்கி எட்டு வரை எண்ணியவன், பத்து என்ற எல்லை வரப்போவதை உணர்த்துவதற்காக, ஈற்றயலை ஒன்பது என அதே 'பது' உடன் இணைத்துக் கூறிவிட்டான். வாய்மொழியாகக் கூறிவரும்போது எட்டுக்குப்பின் - முடியப்போகிறது என்பதன் அறிகுறியாக ஒன்பது பிறந்துவிட்டது.

இங்ஙனம் ஈற்றயலை நினைவூட்டுவது, வாய்மொழி இயல்புகளில் ஒன்றாகும். ஆசிரியம் என்ற பழம்பாடலில், ஈற்றயலடி முச்சீராக நிற்கும். அது அடுத்த அடியுடன் பாட்டு நிறைவு பெறுகிறது என்பதை முன்கூட்டி நினைவு படுத்துவதாகும். இவ்வாறு அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் கண்டு கூறியுள்ளனர். ஒன்பதுக்கு முந்தையதையும் அப்படிக் கூறலாகாதா என்று கேட்கலாம். கடைசிக்கு முந்தையதில்தான் முக்கியத்துவமுளது. முடியப்போகிறது என்பதைக் காட்டுவது அதுதானே?

அதனால் கடைசிக்குரிய 'பது' முன்கூட்டியே வந்துவிட்டது. புதுச்சேரிப் புலவர் சுந்தர சண்முகனார், இது தொடர்பாகச் சில சான்றுகள் காட்டியுள்ளார். தமிழ் எண்கள் க, உ, ங என்ற எழுத்துகளால் குறிக்கப்படுவது போல, லத்தீனிலும் ரோமன் எண்கள் V, VI என இவ்வாறு எழுத்துகளால் குறிக்கப்படுகின்றன. மேலும் IV, V, VI என்பதில் நான்கு ஐந்தில் ஒன்று குறைந்தது எனப் பொருள்படுமாறு குறிக்கப்படுகிறது. IX - ஒன்பது. பத்தில் ஒன்று கழிய என்னுமாறு இதன் அமைப்பு உளது. மேலும் லத்தீனில் ஒன்று குறைந்த இருபது என்று 'பத்தொன்பது' (un - de - viginti) குறிக்கப்படுகிறது. பதினெட்டு இரண்டு குறைந்த இருபது (duo-de-viginiti) என்று குறிக்கப்படுகிறது. தொன்மைமிக்க காலத்தில் இவ்வாறு ஒரு மரபு இருந்தமைக்கு இவை தக்க சான்றுகளாகும்.

தமிழில் ஒன்பது என்பதற்குப் பதிலாகத் 'தொண்டு' என்ற சொல்லும் வழங்கியிருக்கிறது. 'தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்று என்பது தொல்காப்பியம். அறுநூற்றுத்தொண்ணூறு என்பதைப் பத்துக்குறை எழுநூறு எனச் சுட்டியிருப்பதைக் கவனியுங்கள். இதில் 'தொண்டு' என்றால், ஒன்பது 'தொண்டுபடு திவவு' என்பது மலைபடுகடாம் (21). ஆறென ஏழென எட்டென தொண்டு என என்பது பரிபாடல் (3 - 79). தொண்டு கிழவன் என இன்றும் வழங்கும் இச்சொல். முந்தையது, பழையது எனப் பொருள்படுதலால், பத்துக்கு முந்தையது என்ற கருத்திலேயே 'தொண்டு' என வழங்கியிருக்கிறது. தொண்டு தொள் என்ற பகுதியையுடையதே. தெண்ணூறும் (தொள் - நூறு), தொள்ளாயிரமும் (தொள் - ஆயிரம்) இங்ஙனம் நூறுக்கு முற்பட்டது. ஆயிரத்துக்கு முற்பட்டது என்ற கருத்திலேயே வழங்கியுள்ளன. லத்தீனில் C என்பது நூறு, X என்பது பத்து, XC எனப் போட்டால் பத்துக் கழிய நூறு - அதாவது தொண்ணூறு. இதனையும் சுந்தர சண்முகனார் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார் (தொண்ணூறும் தொள்ளாயிரமும் ப. 6)

## மனதிலா, மனத்திலா?

மற்றொரு நண்பர் 'மனதிலா, மனத்திலா - எது சரியானது?' என வினவுகின்றார். 'மனத்துக்கண்', 'மனத்தது', 'மனத்துளது' என்று திருவள்ளுவர் (மனம் - அத்து) சாரியை சேர்த்தே ஆள்கின்றார். பேச்சுவழக்கில் மனது, மனதுக்கு என்று பயன்படுத்துகிறோம். மனத்தில் என்பதே சரியான வழக்காகும்.

## நூல்களா, நூற்களா?

மிகவும் கற்றவர்கள்கூட நூற்கள் என்றே எழுதுகின்றனர். புகழ்பெற்ற கவிவாணர்களின் பாடல்களில்கூட 'நூற்கள்' காணப்படுகிறது. நூல்கள் என்று தான் வருமே தவிர, நூற்கள் என அறவே வராது. கால்கள், வேல்கள், தோல்கள் இங்கெல்லாம் காற்கள் வேற்கள் எனச் சொல்லிப் பாருங்கள்.

## பிழை திருத்தும்போதே பிழை

சிலர் பிழைகளைத் திருத்தி நூலின் இறுதியில் பின்னிணைப்பாகப் போடுவர். அவற்றைத் திருத்திக் கொண்டு நூலை வாசிக்க வேண்டுமாம். அதன் தலைப்பு, 'பிழைத் திருத்தம்' என்றுசில சமயம் காணப்படும். இவை மிகவும் செந்தமிழாக எழுதுகிறோம் என்று எண்ணிக்கொண்டு செய்கிற சிறுபிழைகள். பிழையைத் திருத்துவது பிழை திருத்தம். திருத்தமே பிழையாகிவிட்டால் பெரும் பிசகன்றோ? பொருள்களை - பொருட்கள் என்பதும், நாள்களை - நாட்கள் என்பதும், நூல்களை -நூற்கள் என்பதும் 'செந்தமிழாக எழுதுகிறோம்' என்ற நினைப்பில் நிகழ்ந்துவிட்ட தவறுகளேயாகும். தவறுகளைப் பலர் பலமுறை செய்யச்செய்ய, அதுவே நிலைத்துவிடுகிறது. அதனால்தான் தவறு செய்யாதீர் எனப் பலமுறை சொல்லவேண்டியுள்ளது.

# 14. முனை 'முரி'ந்ததும் மரக்கிளை 'முறி'ந்ததும் ஏன்?

ரகர, றகரம் தடுமாறும் சொற்கள் கருப்பு, கறுப்பு மட்டுமல்ல, முரிதல், முறிதலும் ஆகும். இச் சொற்களின் வரலாற்றை மேலோட்டமாகப் பார்த்தாலும் உண்மை விளங்கும்.

தமிழில் சில சொற்களுக்குப் பலநூறு பக்கங்கள் கொண்ட நீண்ட வரலாறு எழுத வாய்ப்பிருக்கிறது. அகராதிகள் உள்படத் தமிழுக்கு நாம் செய்யக்கூடிய அடிப்படைப் பணிகள் பத்து விழுக்காடுகூட இதுகாறும் நடைபெறவில்லை. ஆனால், நம்முடைய தமிழ்ப் பற்றோ, நூற்றுக்கு நூற்றைம்பது விழுக்காடாக இருக்கிறது! நமக்கு இருக்கும் போட்டி எல்லாம் தமிழ்ப் பற்றிலேதான், தமிழ்ப் பணியில் எள்ளளவும் இல்லை,

## முரி

முனை முரிதல், ஒன்றன் எல்லை ஓரப் பகுதி. உச்சிப்பகுதி சிதைதலே முரிதலாகும். முரிதல் என்றவுடன் மென்மையால் வலுவின்மையால் ஓரப்பகுதி சிதைந்து உதிர்வது என்ற உணர்வு தோன்றுகிறது. முரி அடுப்பு - மேலே தலைசிதைந்த அடுப்பு (பெரும்பாண். 99) முரியா அரிசி - முனை முரியாத அரிசி (பொருநர். 113) அரிசி முனை முரிந்தால் குறுநொய் ஆகிவிடும். (இன்று குறுநை என்பது உலக வழக்கு). நொய்யரிசி என்றும் கூறுவர். முரிவாய் முற்றம் - முரிந்த குறடுள்ள வாசல் (புறம். 261), முரிவாய் அம்பி (நற். 315), முரி மருப்பு யானை (பதி. 16), முரிந்த சிலம்பு - உச்சி சரிந்த மலை (நற். 295) 'களிறு எறிந்து முரிந்த கதுவாய் எ·.கின்' என்பது பதிற்றுப்பத்து (45). யானையை எய்து பற்றிக் குத்தும் வாய் முரிந்த வேல் என்பது பொருள். 'எறிந்து இலை முரிந்த கதுவாய் வேலின்' எனப் புறநானூற்றில் (347) காணப்படும். இதைப்போன்ற தொடரொன்றில், 'முறிந்த' என்று பாட வேறுபாடும் காணப்படும். எதுகை கருதியோ, பிற்காலத்தில் ஏடு பெயர்த்து எழுதியவர் செயலோ தெரியவில்லை. இங்ஙனம் முனைமுரிதல், உச்சி முரிதல், ஓரப் பகுதிகள் முரிதல் என முரிதல் என்பதற்குப் பரவலான உதாரணங்கள் நிரம்பவுள்ளன. ஆயினும், இதன் நிழற்பொருள்கள் பலவாகும். முரிந்து உதிர்ந்து சிதறுவதால், சிதைதல், சிதறுதல் எனவும், மேலும் இவ்வாறே நிலைகெடுதல், தோல்வியுறுதல், தளர்தல், தவறுதல் என்றெல்லாம் பொருள் நீட்சி கண்டுள்ளது. புருவத்தை வளைப்பது 'புருவ முரிவு' எனப்பட்டது.

முரிகரும் சிலை என்பது சிலப்பதிகாரம் (28 - 18) அரைவட்டம் போன்ற புருவக் கடைப் பகுதிகள் வளைதலால், முரிதல் - வளைதல் எனப்பொருள் நீண்டது. பகைவலி அறியாமல் முட்டிமோதித் தோல்வி கண்டு கெடுபவர்களைத் திருவள்ளுவர், 'உடைத்தம் வலி அறியார் ஊக்கத்தின் ஊக்கி, இடைக்கண் முரிந்தார் பலர்' (473) என்றார். மேலும், அவர் 'ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து வேந்தனும் வேந்து கெடும்' (899) என்றார். வேந்தன் தன் ஆட்சி அதிகாரத்தை இழப்பான் என்பது பொருள். முரிதல் - கெடுதல், தோல்வியுறுதல், நீங்குதல் எனப் பொருள் வளர்ச்சி கண்டதை இவற்றால் அறியலாம்.

முரிவரி என்பது வரிப்பாட்டின் கடைசிப் பகுதி. பாட்டு முடிவைக் குறிக்கும் சந்தத்தை முரிப்பாட்டு என்பர். இசைப்பாடல்களில் கலைச் சொல்லாக இது பயன்பட்டிருக்கிறது.

கலித் தொகையில், 'மக்கள் முரியே' என்று குறளனைக் கூனி அழைக்கிறாள். இதற்கு 'மக்களில் பாதியானவனே' என்று நச்சினார்க்கினியர் உரையெழுதுகிறார். நண்டைவிரும்பி அதன் காலை ஒடித்து ஊனை உண்பது பாவம் எனக் கூறவந்த நாலடியாரில், 'அலவனைக் காதலித்துக் கால் முரித்துத் தின்ற' என்றுதான் காணப்படுகிறது. ஆனால், அதற்கு உரை எழுதியவர்கள், 'காலை முறித்து' என்றே எழுதியுள்ளார்கள். குறுந்தொகையில், 'பெருங்களிறு வாங்க முரிந்து நிலம் படா நாருடை ஒசியல்' (122) என்று இடம்பெறுகிறது. பெரிய ஆண்யானை வளைத்ததால் முரிந்து, நிலத்தில் விழாது, நாருள்ள பட்டையையுடையதாதலின், அப்படியே தொங்கிக் கொண்டிருக்கிற கிளை என்பது இதன் பொருள். இதற்கு 'முறிந்து நிலம் படா' என்ற பாட வேறுபாடு காணப்படுவது, இடைக்காலத்துப் புகுந்த ஒன்றாகத் தோற்றுகிறது.

இளந்தளிர் தழை என்ற பொருளிலேயே, 'முறி' சங்கப் பாடல்களில் பரக்கக் காணப்படுகிறது. முறி ஓலையைக் குறித்து, ஓலையிலெழுதும் உறுதிமொழியை - பத்திரத்தைக் குறித்தது, அதன் துணைப் பொருள் வளர்ச்சியாகும்.

அகநானூற்றில், 'பெருஞ்செய் நெல்லின் வாங்கு கதிர் முறித்துப் பாசவல் இடிக்கும்'(384) என இடம்பெறுவது, மிக அருகிய வழக்காகும். ஆயினும், அன்று உலக வழக்கில் முறித்து, முறித்தல், முறிந்தது என நிரம்ப வழங்கியிருக்கலாம். கதிரை முறித்து என்றால், தேய்த்து நெல்லை உமியும் மணியும் வேறாகப் பிரித்தலைச் சுட்டுகிறது. முறி என்பது, பிளத்தலை

முதலில் சுட்டியது. பிளந்துகொண்டு வருவதே பீள் (முளை தோன்றுவது) ஆனது. தளிரும் 'பிளந்துகொண்டு' தோன்றி வளர்தலால் 'முறி' எனப்பட்டது. முறிதல் என்றாலே துளிர்த்தல் எனச் சீவகசிந்தாமணி குறிப்பிடுகிறது (2358). தமிழ் 'லெக்சிகன்' மேலும் சிறிது வழிகாட்டுகிறது. முறிகரை - கரையைப் பிளந்து கொண்டு நீர் பாய்வது.முறிகுளம் - ஓடிவரும் வடிகால் நீர் தேங்கும் குளம், முறித்து வெட்டுதல் - வாய்க்காலின் நீரைத் தடுத்து வேற்றிடத்தில் பாயும்படி செய்தல். முறித்தல் - பிளத்தலிலிருந்து தடுத்தல், திசைமாற்றுதல், ஒடித்தல், தோற்றோடவைத்தல் என்றெல்லாம் பொருள் நீட்சி கண்டுள்ளது. வாய்க்காலை முறித்தல் என்றால், வளைவைத் திருத்தி நேராக்குதல் என்ற பொருளிலும் வந்துள்ளது. மிகவுயர்ந்த வெண்கலத்தை 'முறி' என்றதும், இதுபோன்றதொரு காரணத்தால் ஆதல் வேண்டும். நட்பை முறித்துக் கொள்ளக் கூடாது. பகையை முறியடிக்க வேண்டும். மாற்று மருந்தை 'முறிமருந்து' என்பர். கை மருத்துவம், சித்த மருத்துவத்தில் 'பத்தியம்' அவசியம். தவறினால் உண்ட மருந்து 'முறிந்து'விடும். பால் முறிந்துபோனது என்பதுண்டு. (பால் முரிந்ததாக இடைக்கால இலக்கியத்தில் வருகிறது). மரக்கிளை முறிந்தது.கை எலும்பு முறிந்தது எல்லாம் 'பிளவுபட்டது' என்ற முதற்பொருளிலிருந்து கிளைத்த துணைப் பொருள்களே.

முரி பொருள் நீட்சியால் முறிவது வரை வர, முறி பொருள் வளர்ச்சியால் முரிந்தது என்பதற்கு மாற்றாகும் வரை வளர இவை இரண்டும் வேறு பாடு அற்றனபோல் தோற்றுகின்றன. கறுப்பிலுள்ள அழுத்தமும் வன்மையும் முறிப்பிலும் இருக்கிறது. மென்மையாக ஒடி வதை முரிவு என்றும், வன்மையாக ஒடிவதை முறிவு என்றும் கூறலாம் என்பதுபோல், இச்சொல்லாட்சிகள் காணப்படுதல் விந்தையேயாகும். இன்றைய நிலையில் மனமுறிவுகள், திருமண முறிவுகள், உறவு முறிவுகள், ஒருவரை ஒருவர் முறியடித்தல், மருந்து முறிவுகள் மிகப் பலவாகும்.

## இளிவும் இழிவும்

இழிவுபடுத்தும் சுவையை 'இளிவரல்' சுவை என்று கூறுகிறோம். இங்கு ளகர, ழகர பேதம் தடுமாறுகிறதோ என்ற ஐயம் தோன்றலாம். உண்மையில் தடுமாற்றம் நம்மிடம் இருக்கிறதே தவிரச் சொற்களில் இல்லை.

இளிவரல் - அவமதித்தல், மானக்கேடு செய்தல். உலக வழக்கில் இளி - பல்லைக் காட்டு, சிரி. இளித்தவாயன் என்பவன் ஏமாளி. இளிச்ச வாய்ப் பட்டம் கட்டுதல் உண்டு. இதிலிருந்து இளிவரல் சுவை என்பது, அவமதிப்புக்

காரணமாக நேரும் மனவுளைச்சல் பற்றியது என அறியலாம். ச. சோ. பாரதியார், "இளிவரல் மாண்ம் குன்றவருவது. 'இளிவரின் வாழாத மான முடையார்' என்வும், 'இடுக்கண் வரினும் இளிவந்த செய்யார்' எனவும் வருதலான், இளிவரல் இப்பொருட்டாதல் தெளிக" எனவிளக்குகின்றார். பிறரால் பழி சுமத்தப்பட்டும் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டும் அவமதிக்கப்பட்டும் மானக் கேட்டால் உயிரை விட்டுவிடலாம் என வருந்தும் நிலையே இளிவரலாகும்.

இழிதல் - இழிந்தது - இழிந்த என இவ்வாறு பழம் பாடல்களில் நூற்றுக்கணக்கான இடங்களில் வரும் 'இழிவு' என்பது, மேலிருந்து கீழே இறங்குவது. 'மலையின் இழியும் அருவி' என்றால், கீழிறங்கும் அருவி என்பதாகும். 'தலையின் இழிந்த மயிர்' என்ற திருக்குறள் (964), கீழே விழுந்ததைக் குறிக்கிறது. இதிலிருந்து ஒருவரைக் கீழே இறக்குதல், ஒருவர் தம் நிலையில் தாழ்தல், முன்னைய உயர்வை இழந்து கீழ்நிலையை அடைதல் போன்றவையே 'இழிவு' எனப்பட்டன. அதனாலும் அவமானம் ஏற்படுதலால், இழிவுக்குத் துணைப் பொருளே மானக்கேடு ஆகும். இளிவுக்குத் தாழ்தல், கீழ்நிலை அடைதல் என்பன துணைப் பொருள்களாகும். பொருள் நீட்சியால் ஒன்றையொன்று சந்திக்கின்றனவே தவிர, இவை இரண்டும் ஒன்றெனவோ, இவற்றில் ளகர, ழகர பேதம் தடுமாறுகிறது என்றோ கருதிவிடுதல் தவறு.

தொல்காப்பியர் அழுகை / அவல வகைகளில்' இழிவையும்' ஒன்றாகச் சுட்டுகிறார். அடுத்து இளிவரல் சுவையையும் விளக்குகிறார். எனவே, இவை இரண்டும் வேறென்பது தெளிவு.

இளம்பூரணர் இளிவரல் சுவையை விளக்கும் பொழுது இழித்தலுமாம், இழிப்புப் பிறக்கும் என்று உரை எழுதுவதால், இவை மேவி வரும் நிலைமை இடைக்காலத்திலேயே பெருகிவிட்டதென அறியலாம். பழங்கால மரபுப்படி கூறுவதானால், 'நான் இழிவுபடுத்தப்பட்டேன் / இழிந்தேன்' என்பன தாழ்வுபடுத்தப்பட்டேன். கீழ்நிலை அடைந்தேன் எனப் பொருள்படும். 'என்னை இளிவுபடுத்தாதே / இளிவுக்கு ஆளானேன்' என்பன, மானக்கேடு அடைந்ததைக் குறிக்கும். பொருள்கள் மேவுவதைக் கூர்ந்து நோக்கினால், ஒரு திசையிலிருந்து வந்த மானக்கேடாகிய இளிவும், வேறு ஒரு திசையிலிருந்து வந்த தாழ்நிலை அடைதலாகிய இழிவும் தம்முட் பொருள் பொருத்தமிருப்பதால், சந்தித்துக் கொண்டன. அதனால் அவமதிப்பால் தாழ்வும், தாழ்வால் அவமதிப்பும் ஏற்படுவதை, இன்று இரண்டு சொற்களுமே குறிக்கின்றன. எனவே நாம் இளிவும் இழிவும் ஆகிய இரண்டுமின்றி வாழ்வதே சிறப்பாகும்.

# 15. காதலி என்னைக் காதலி!

'அப் பெண் அவன் காதலி' என்னும் போது, 'காதலி' பெயர்ச்சொல் ஆகிறது. 'அவரை நீ காதலி' என்றும் அதே சொல்லால் கூறுகிறோம். அது எவ்வாறு?

காதல் - இ. பெயர்ச்சொல் - பெண்பால் விகுதி, அழகி, அரசியிற்போல. 'காதலி' என ஏவும்போது, ஏவல் வினையாகிறது. காதலித் தாள் என்பது வினைமுற்று. இரண்டும் வேறு அமைப்புடையமையால், தனித்தனிச் சொற்கள், ஒரு கட்டுக் கட்டு: ஒரு வெட்டு வெட்டு. முன்னுள்ளது முதனிலைத் தொழிற்பெயர்: பின்னுள்ளது ஏவல்வினை. தமிழ்ச் சொல்லமைப்பை மாணவர்களுக்கு விளையாட்டாகக் கற்பிக்க இவ்வாறு உதாரணங்கள் தேடவேண்டும். திரைப்படக்காரர்கள் காதில் விழுந்தால், 'ஏ காதலி என்னைக் காதலி' என்று படம் எடுத்துவிடப் போகிறார்கள்!

இப்படிக்கு, இங்ஙனம், இவண் என்பன தமிழ் மரபுக்கும் ஒத்துவரக்கூடிய கடித முடிப்புப் பகுதிகள். அதன்கீழ் ஒப்பமிடவேண்டும். இன்றைய கடிதமுறை, நாம் மேலை நாட்டாரிடமிருந்து கற்றது. நமது முறை சற்றே வேறுபட்டது. தமிழ் இலக்கியத்தில், 'கடிதம்' என முதலில் கிடைப்பது சிலம்பில் வரும் மாதவியின் கடிதமே. பதினோராம் திருமுறையில், இறைவன் சேரமான் பெருமாளுக்கு எழுதிய திருமுகப் பாசுரம் உளது. 'அன்னம் பயில் பொழில் ஆலவாயில், மன்னிய சிவன்யான் மொழிந்திடும் மாற்றம்' என இன்னாரெழுதியதெனக் கடிதம் தொடங்குகிறது. பிறகு 'குருமா மணிதிகழ் குலவிய குடைக்கீழ்ச் செருமா உகைக்கும் சேரலன் காண்க' எனப் பெறுநர் முகவரி வருகிறது. அதன் பிறகு செய்தி கூறி முடிகிறது. பிற்காலச் சீட்டுக் கவிகள் இம்முறை அமைப்புடையனவே.

இன்றும் 'முருகன் தமையனாருக்கு எழுதிக்கொண்டது' எனத் தொடங்கும் வழக்காறுகள் உண்டு. பெரியவர்களுக்கு எழுதும் கடிதத்தை முடிக்கும் போது, 'இப்படிக்கு' எனப் போடவேண்டும். அலுவல்முறைக் கடிதங்களின் இறுதியில், 'இங்ஙனம்' என்று போடலாம். உண்மையுள்ள, அன்புள்ள என்பனவும் இவ்வாறு இடமறிந்து பயன்படுத்தப்படுகின்றன.

## ஒருபொருட் பன்மொழிகள்

தமிழில் ஒருபொருட்பன்மொழிகளையும், பல்பொருள் ஒருசொல் தொகுதிகளையும் தருபவை நிகண்டுகள். நிகண்டுகளின் முக்கியத்துவம்

இன்று உணரப்படாமல் இருக்கிறது. முன்பு தமிழில் சிறப்பாகக் கற்க விரும்புபவர்கள், முதலில் நிகண்டுகளை மனப்பாடம் செய்யவேண்டும். பிறகே இலக்கிய இலக்கணப் பாடம் தொடங்குவர். இவற்றில் நாம் கேட்டறியா வடசொற்களும் இடம்பெற்றிருக்கும். வழக்குச் சொற்கள் பல காணவியலாது. பலர் கொண்ட குழு ஒன்று கடினப்பட்டு உழைத்தால், நிகண்டுகள், பிற அகராதிகளின் துணையோடு, வழக்காற்றுச் சொற்களையும் தேடித்தொகுத்துத் தமிழுக்கு ஒரு 'தெசாரஸ்' அகராதி கொண்டுவரலாம். அத்தகைய அகராதிகள் தான் தமிழின் வளத்தை உலகிற்குக் கைக்கு மெய்யாக உணர்த்தும்.

சாளரம், காலதர் என்பன ஒரு பொருளனவாயினும், அவை சிறு சிறு வேறுபாடுடையவைதானே என வினவுகின்றனர். காலதர் - காற்று வரத்துக்காக வைக்கப்படுகிறது. சாளரம் - காற்றும் வெளிச்சமும் வர அமைக்கப்படுவது எனக் கருதுவர். 'சாளரம் தோறும் தோன்றும் சந்திர உதயம் கண்டார்' என்பது கம்பர் வாக்கு. எனவே, சிலர் கருதுவதுபோல் அமைப்பு வேறுபாடு இருந்திருக்க வேண்டும். சிலம்பில், 'மான்கண் காலதர் மாளிகை' என வருவதால், காலதரின் அமைப்புப் புலப்படும். பல சிறுசிறு கண்களை உடைமையால், 'பலகணி' என்றும் இதற்கு ஒரு பெயர் வழங்கியது. ஐரோப்பியர் வருகைக்குப்பின் போர்த்துக்கீசியச் சொல்லாகிய சன்னல் பெரு வழக்கானது. இவை சொல்லாராய்ச்சிதானே என எண்ணுதல் தவறு. முழுமைபெற ஆராய்ந்தால், கட்டடக்கலை, தமிழர் நாகரிக வரலாற்று ஆய்வுகளாகவும் இவை வளரும். முன்னைய கட்டடக் கலையில், வீட்டு உறுப்புகள் பெரிதும் அழகு கருதி அமைக்கப்பட்டன; இன்று அவை வசதி கருதியே பெரிதும் இடம்பெறுகின்றன.

(தமிழ்மணி 21-8-1991)

---



தமிழண்ணல்

✧ சிவகங்கை மாவட்டம், நெற்குப்பையில் 12.8.1928 இல் பிறந்த இவர், உயர்பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகத்தில் 42 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய, ஒரு தமிழ் மாணவர்.

✧ சங்க இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர், முப்பது ஆண்டு களுக்கு முன்பிருந்தே, செவ்வியல் இலக்கியத் தொடர்பான நூல்கள் பல எழுதியவர்.

✧ பேரா. மு.வ. மூலம் 'அறிவுருவும்', அறிஞர் அண்ணா மூலம் 'உணர்வுருவும்' இளம் அகவையிலேயே இவரிடம் பதிவாயின.

✧ மழலையர் முதல் ஐந்தாம் வகுப்புவரை, தாய் மொழியாம் தமிழ் ஒன்றே பாடமொழியும் பயிற்று மொழியும் ஆதல் வேண்டும்; பல்கலைக்கழக உயராய்வுப் பட்டங்கள் வரை– மருத்துவம், பொறியியலுட்பட – தமிழுக்கு, ஆங்கிலத்திற்கு நிகரான, 'மொழிச் சமநீதி' தரப்படவேண்டும்; தமிழை முழுமைபெறக் 'கல்வி மொழி' ஆக்க வேண்டுமெனப் போராடி வருபவர்.

✧ தமிழக அரசின் பொற்கிழிப் பரிசு, திரு. வி.க. விருது, சிறந்த நூற் பரிசு, நல்லாசிரியர் விருதுடன், தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடத்தின் துணைத் தலைவர் – என்பதையும் பெற்றவர். தமிழக முதல்வர் கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா' – நூலை வெளியிடும் வாய்ப்புப் பெற்றவர்.

✧ குன்றக்குடித் திருமடம்: கணக்காயர் பட்டம், மதுரைத் திருவள்ளுவர் கழகம்: தொல்காப்பியச் செம்மல், கோவிலூர்த் திருமடம்: அருந்தவச் செம்மல், ம.கா. பல்கலைக் கழகம்: தமிழ்ச் செம்மல், ச. மெய்யப்பர் பவள விழா விருது: தமிழியக்கச் செம்மல் என்பன சில இவர் பெற்றவை.

✧ 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை உடையவர். நிலத்தில் யார்க்கும், தம் கொள்கையை, உணர்வை, உறுதியை விட்டுக்கொடுக்க விரும்பாத நெறியை விரும்பிப் போற்றி வாழ்பவர்.

✧ இதனால் இவர் இழந்தவை பல; எனினும் மனத் தளர்ச்சிகள் கடுகளவும் இல! ஒவ்வொரு கணமும் இளமையையும் வலிமையையும் தந்து கொண்டிருப்பது இவர் கற்ற தமிழ்!